கோகுலம்

GOKULAM

நவம்பர் '90 விலை ரூ. 3/-





R K SWAMY/CL/8356

கோகுலம்



1990 நவம்பர் மாத இதழ்
மலர் 8 ○○ இதழ் 10



அருமைச் சிறுவர் சிறுமியரே,

உங்கள் அனைவருக்கும் கோகுலத்தின் சார்பில் இனிமையான தீபாவளி வாழ்த்துக்கள். தீய எண்ணங்களுக்கு விடை கொடுத்து, நல்லவற்றை வரவேற்று வாழ்த்துவோம்.

இந்திய விடுதலைக்காகவும், நவ இந்தியாவை உருவாக்கவும், உலக சமாதானத்திற்காகவும், குழந்தைகள் நலனுக்காகவும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வாழ்ந்து மறைந்த நேருவின் பிறந்தநாள் இந்த மாதம்தான். அவரது தியாக உணர்வு நமக்கும் வரவேண்டும் என்று முயல்வோம். நேருவின் பெருமைகளை விளக்கும் சில பகுதிகள் இவ்விதழில் இடம் பெறுகின்றன.

குழந்தைகள் தினம் கொண்டாடப்படும் இதே மாதத்தில்தான், குழந்தை இலக்கிய வளர்ச்சியையே தனது இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் பிறந்த நாளும் வருகிறது என்பது எவ்வளவு பொருத்தமானது! அவருடன் தனக்கு ஏற்பட்ட இனிய அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார், கவிஞரின் நண்பரும் காரைக்குடி, இராமசாமி தமிழ்க் கல்லூரியின் முதல்வருமான திரு. தெ. முருகசாமி அவர்கள்.


கோகுலம் வாசகர்களுக்கு முன்பே நன்கு அறிமுகமாகியுள்ள, குழந்தைக் கவிஞரின் மகன் தேவி நாச்சியப்பன் நீண்ட நாட்களுக்குப் பிறகு மீண்டும் எழுதத் தொடங்கியுள்ளார்.

கோகுலத்தில் என்னவெல்லாம் புதுப் பகுதிகளைச் சேர்க்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அதை எங்களுக்குத் தெரிவிக்கலாமே!


அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)




உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.





இந்த இதழில்





நேரு மாமா வாரும்!

நேரு மாமா — மீண்டும்
வாரும் மாமா — நீங்கள்
ஓய்வு கொண்ட காலமெல்லாம்
போதும் மாமா...

மாலையிலே மறைந்து விடும் சூரியன் — மறு
காலை யிலே மலர்ந்து வரப் பார்க்கிறோம் — எந்த
நாளி லிலோ மறைந்து விட்ட நீங்களும் — இந்த
நாளி லிலே திரும்பி வரக் கூடாதோ?


குழந்தைக் குலம் உங்களுக் காய் ஏங்குது — ரோஜாக்
கூட்டம் நீங்கள் வரும் வழியே பார்க்குது!— இங்கு
உல கமைதிக் கேங்கு கிற உயி ரெலாம் — நீங்கள்
உடனே வர வேண்டி வரம் கேட்குது!

தன் நலத்தை மறந்து நாங்கள் வாழவும் — நித்தம்
தாய கத்தை மேலும் மேன்மை ஆக்கவும் — இங்கு
என்றும் வழி காட்ட நீங்கள் தேவையே — அதனால்
இன்றே நீங்கள் மீண்டும் வர வேண்டும் —

நேரு மாமா — மீண்டும்
வாரும் மாமா — நீங்கள்
ஓய்வு கொண்ட காலம் எல்லாம்
போதும் மாமா!

— ரா. பொன்ராசன்.





நேரு வாழ்கவே!

பிறந்த நாள், பிறந்த நாள்,
பெருமை பெற்றுயர்ந்த நாள்;
சிறந்த நாள், சிறந்த நாள்,
சிந்தை மகிழும் சிறுவர் நாள்!

பிறந்த நாள், பிறந்த நாள்,
யாருக் கின்று பிறந்த நாள்?
நேரு வுக்குப் பிறந்த நாள்,
மேரு வென்று யர்ந்த நாள்!

சிறையிருந்த நாளிலோ,
சினமெழுந்த போதிலோ,
சிறுவர்களைப் பார்த்திடின்
சிரித்து மனம் மகிழுவார்!

குழந்தைகளைக் கண்டதும்
குழந்தையாக மாறுவார்,
கொம்பெடுத்து ஆடியும்
கும்மாளமே போடுவார்!

மலையெடுத்து, குடைபிடித்து,
மகிழ்ந்து ஆடும் மாயனாய்,
மலர் உயர்த்தி மழலையை
மகிழ்ச்சியிலே ஆழ்த்துவார்!

சொந்த வீட்டுக் குழந்தை போல்
எந்த நாட்டுக் குழந்தையும்
சொந்தம் கொண்டாடுமே —
சொல்வோம், "நேரு வாழ்கவே!"

— ஆர். பி. சாரதி.



இரண்டாயிரம்


எல்லா உயிர்களிடத்திலும் நேருவுக்குத் தனித்த ஈடுபாடு இருந்தது. விலங்குகளும் பறவைகளும் இல்லாத உலகம் மலர்களும் இலைகளும் இல்லாத மொட்டை மரத்தைப் போன்றது என்ற உவமை அவராலேயே தரப்பட்டது.

அழையா விருந்தாளி பூனையார்!

சிறைவாசத்தின் போது ஒருமுறை அவர் அடைக்கப்பட்டிருந்த சிறைக்குள், நல்லதொரு குளிர்கால நாளில், அவர் அழைக்காமலேயே விருந்தாளி ஒருவர் வந்து சேர்ந்தார். அவர் ஒரு குட்டிப் பூனையார்! குளிரால் நடுங்கித் தவித்த பூனையாருக்கு நேரு தம்முடைய போர்வையைப் போர்த்திச் சுகமாகப் படுக்க வைத்தார். தமக்கு வழங்கப்பட்ட பாலைப் பூனையாருக்கு வைத்து, அவர் சாப்பிடும் அழகைப் பார்த்துப் பரவசமடைந்தார். இவ்வளவு வசதி கிடைத்தால் பூனையார் சும்மா விடுவாரா? நேருவின் சிறை அறையிலேயே சுகமாகவும் தங்கிவிட்டார்!

நேருவின் அறையில் பூனையார் இருப்பதையும், நேரு தமக்குத் தரப்படும் பாலைப் பூனையாருக்குத் தந்துவிடுவதையும் கவனித்துவிட்ட சிறைப் பணியாளர்கள், பூனைக்கென்று தனியாகப் பால் கொண்டுவந்து தர முயன்றனர். அது விசேஷச் சலுகையாகும் என்று எண்ணிய நேருஜி, மறுத்துவிட்டார்.

இவ்வளவு அருமையாக நேருவுடன் தங்கிய பூனையார் ஒரு நாள் திடீரென்று காணாமல் போய்விட்டார். நேருவிடம் கூடச் சொல்லிக்கொள்ளவில்லை! நேரு தவித்துப் போனார். அவருடைய தவிப்பைப் பார்த்துப் பூனையைக் கண்டுபிடிக்க எல்லோரும் முயன்றனர். என்ன முயன்றும் பூனையைக் கண்டுபிடிக்க முடிய



கையெழுத்து!

வில்லை. நேருவைத் தவிக்க வைத்த பூனையார், பதினைந்து நாட்கள் கழித்துத் தானே வந்து சேர்ந்தார்! நேரு அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. விடுதலை கிடைத்துப் போகும் போது, பூனையைப் பார்த்துக்கொள்ளும்படி தமது நண்பர்களைக் கேட்டுக் கொண்டார். நேரு.



பாக்கியம் செய்த நாய்கள்!

பிரதமருடைய மாளிகையில் பல விலங்குகள் செல்லமாக வளர்க்கப் பட்டன. அவைகளுள் குறிப்பிடத்தக்கவை மது, பெபிடா என்று பெயரிடப்பட்ட இரு நாய்கள். டெல்லியில் இருக்கும் நாட்களில் கடினமான வேலைத் தொந்தரவுகளுக்கு இடையேயும் கூட நேரு, தமது செல்ல நாய்களை அழைத்து ஓரிரு நிமிடங்களாவது அவைகளுடன் கொஞ்சி விளையாடாமல் இருக்க மாட்டார்.



புலியும் பண்டாவும்

நேருவின் மாளிகையில், தோட்டத்தில் இரண்டு புலிக்குட்டிகள் வளர்ந்தன. அவைகளுக்கு பீமன், அர்ஜுனன் என்று பெயர். இவைகளுடன் கூட இமயமலைக் காடுகளில் காணப்படும் 'பண்டா' என்ற கரடிக் குட்டியும் வளர்ந்தது. இது பார்ப்பதற்கு மிகவும் அழகானது. முகம் பார்ப்பதற்குப் பூனையின் முகம் போல் இருக்கும். உடம்பைப் பார்த்தால் கரடிக் குட்டியைப் போல் இருக்கும். வால், நரியின் வாலைப் போல் இருக்கும். பெய்ஜிங்கில் ஆசிய விளையாட்டுப் போட்டியின் சின்னமாக இருக்கிறதே, அதே பண்டா இனம் தான்! இந்தப் பண்டாவுக்கு நேரு தம்

கையாலேயே இரை கொடுப்பார். அதுவும் மரத்திலிருந்து இறங்கி வந்து, அவர் கையிலிருந்தே வாங்கிக் கொள்ளும்.



இரண்டாயிரம் கையெழுத்து

ஜப்பானில் இருந்த மிருகக்காட்சி சாலை உலகப் போரின் போது முற்றிலுமாக அழிந்து விட்டது. அதைப் புதுப்பிக்க முயற்சிகள் நடந்தன. அந்த மிருகக் காட்சி சாலைக்கு ஓர் இந்திய யானையை அனுப்பித் தர வேண்டும் என்று ஜப்பான் குழந்தைகள் நேருவுக்கு ஒரு கடிதத்தை எழுதி அனுப்பியிருந்தனர். கடிதத்தில் இரண்டாயிரத்திற்கும்மேற்பட்ட குழந்தைகள் கையெழுத்திட்டிருந்தனர்.

அந்த நேரத்தில், மைசூர் காடுகளிலிருந்து பிடிக்கப்பட்ட யானைகளில் ஒரு குட்டிப் பெண் யானை இருந்தது. அதை, இந்தியக் குழந்தைகளின் சார்பில் நேரு ஜப்பான் நாட்டுக் குழந்தைகளுக்கு அனுப்பி வைத்தார். அதற்கு இந்திரா என்றும் பெயர் சூட்டியிருந்தார்.

இந்திரா ஜப்பானில் இறங்கியதும், குழந்தைகள் ஒன்று திரண்டு அதற்கு ஒரு வரவேற்பளித்தனர். எவ்வளவு குழந்தைகள் கூடினர் தெரியுமா? ஒரு லட்சம் குழந்தைகள்! இந்திராவைப் பற்றிய விவரங்களடங்கிய ஓர் அழகான சிறப்பு மலரையும் வெளியிட்டனர்.


ஜப்பான் குழந்தைகளை மகிழ்வித்தது போலவே,தங்கள் நாட்டுக்கும் யானைக் குட்டி அனுப்பித் தரவேண்டும் என்று அமெரிக்கா, துருக்கி, ஜெர்மனி, அரேபியா, ஆஸ்திரேலியா, கனடா, ஹாலந்து, சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த குழந்தைகளும் கடிதம் அனுப்ப, நேரு அவர்களது விருப்பத்தையும் நிறைவேற்றினார்.

உலக நாடுகளில் எவ்வளவோ தலைவர்கள் தோன்றியிருக்கிறார்கள். ஆனால், குழந்தைகளின் மனம் கவர்ந்த நேருவுக்கு இணையானவர்கள் யாருமே இல்லை!

நத்தைகள்




நத்தைகள் நல்ல நீரிலும் கடல் நீரிலும் வாழ்கின்றன. இவற்றில் நூற்றுக்கணக்கான வகைகள் உண்டு.



உணர்கொம்புகளின் உதவியால்தான் நத்தை தன் உணவையும், இடத்தையும், மணத்தையும் அறிகிறது. உணர்கொம்புகளின் நுனியில், சிறிய கண்கள் இருக்கின்றன. அதன் மூலம் இருளையும் வெளிச்சத்தையும் அறிகிறது; என்றாலும் நத்தையின் பார்வை சக்தி குறைவுதான்.



ஒரு நத்தையின் ஆயுள்
5 முதல் 10 ஆண்டுகள்



உலகில் உள்ள உயிரினங்களில் அதிகமான பற்களை உடையது நத்தைதான்! அதற்கு மிகச் சிறிய 14000 பற்கள் இருக்கின்றன!




மரங்களில் மட்டுமே வாழக்கூடிய இந்த வகை நத்தை, தரையில் இறங்கவே இறங்காது! இது முன்பக்கமாகவும் ஊர்ந்து செல்லும்; பின் பக்கமாகவும் ஊர்ந்து செல்லும். இரவில் இதன் உடலிலிருந்து பிரகாசமான வெளிச்சம் வரும்!




ஒரு நத்தையின் ஓடு வலப் பக்கமாகச் சுழன்று இருந்தால், அந்த நத்தை ஊர்வது, இரை தேடுவது எல்லாம் வலப் பக்கமாகவே இருக்கும்! நத்தையின் ஓடு இடப்பக்கமாகச் சுழன்று இருந்தால் அந்த நத்தையின் இயக்கம் இடப் பக்கமாகவே இருக்கும்!


நத்தையின் வேகம் மணிக்குச் சுமார் 60 செ.மீ! ஆனால் என்ன? ஸ்பெயின் நாட்டில் 'நத்தைகள் ஓட்டப் போட்டியும் நடத்துகிறார்கள்! அதில் சுமார் 80 நத்தைகளை ஓடச் செய்கிறார்கள்! முதலாவதாக வரும் நத்தையின் சொந்தக்காரருக்குப் பரிசு கிடைக்கிறது!

ஆழி ______






நத்தைகள் 4 ஆண்டுகள் வரையிலும் இரையே இல்லாமல் உயிரோடு இருக்கும்! கோடைக்கால வறட்சியும் பனிக்கால குளிரும் மிகுந்த நாட்களை நத்தைகள் உறக்க நிலையிலேயே கழிக்கின்றன. ஆண்டுக் கணக்கில் கூட உறக்க நிலையில் இருக்கும்! எகிப்திலே கண்டெடுக்கப்பட்ட ஒரு நத்தை இறந்து விட்டது என்று எண்ணி, அதை ஓர் அட்டையில் ஒட்டி, இங்கிலாந்தில் உள்ள பிரிட்டிஷ் மியூஸியத்தில், காட்சிக்கு வைத்து விட்டார்கள். 4 ஆண்டுகளுக்குப் பிறகு அது ஊர்ந்து போகத் தொடங்கியது.




8 கோடி ஆண்டுகளுக்கு முந்திய மிகப்பெரிய ராட்சச நத்தைக்கூடு ஒன்று ஸ்விட்சர்லாந்து மியூஸியத்தில் இருக்கிறது. மேற்கு ஜெர்மனியில் கிடைத்தது. ஓர் ஆளைவிட உயரம்!



உலகிலேயே பெரிய நத்தை 34 செ.மீ. நீளம் உள்ள கீ-ஜெரோனிமோ என்னும் ஆப்பிரிக்க நத்தைதான் என்று 'கின்னஸ்' புத்தகத்தில் பதிவாகியிருக்கிறது. இந்த நத்தை 52-க்கு மேற்பட்ட டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் தோன்றியிருக்கிறது!



நத்தை ஒரு விதத் திரவத்தைச் சுரந்து, அதன் மேல்தான் நகருகிறது. அந்தத் திரவத்தின் உதவியால் நத்தை ஒரு கூர்மையான பிளேடின் முனையில் கூட காயம் இல்லாமல் நகர்ந்து சென்றுவிட முடியும்! உடைந்த எலும்பை ஒட்ட வைக்க இந்தத் திரவத்திலிருந்து மருந்து தயாரிக்கிறார்கள்!



'ஹெலிக்ஸ் பொமாடியா' என்னும் இன நத்தை தன் எடையைப்போல் 200 மடங்கு எடையை எளிதாக இழுத்துச் செல்லக் கூடிய சக்தி கொண்டது!

சொற்புதிர் போட்டி-முடிவு

விளையாட்டு தொடர்பானவற்றைக் கொண்டு அறிவிக்கப்பட்ட சொற்புதிர் போட்டி. ஆயிரம் பேர்களுக்கு மேல் கலந்து கொண்ட போட்டி என்ற சிறப்பைப் பெறுகிறது. இவ்வளவு பேர் கலந்து கொண்ட போதிலும் எல்லாம் சரியான விடை எழுதியிருப்பவர்கள் பதினைந்து பேர்களே! எனவே, குலுக்கல் முறையில் ஐந்து பேர்களைத் தேர்ந்தெடுத்தோம். முதல் பரிசை இந்த ஐவரும் பிரித்துக் கொள்கிறார்கள்.

முதல் பரிசாக ரூ. 20/— பெறுவோர்:

எஸ். கவிதா



வி. ஆர். சத்யபாமா



1. எஸ். கவிதா, சக்தி நகர் அஞ்சல், பெரியார் மாவட்டம் — 638 315.
2. வி. ஆர். சத்யபாமா, அடையார், சென்னை — 600 020.
3. எஸ். ராமச்சந்திரன், ராமகிருஷ்ணாபுரம், புது தில்லி — 110 022.

எஸ். ராமச்சந்திரன்



ஆர். சத்யா



தா. அருண்வேல் குமார்



4. ஆர். சத்யா, கடயம் — 627 415.
5. தா. அருண்வேல் குமார், தஞ்சாவூர்— 613 007.

சரியான விடை கீழே தரப்பட்டுள்ளது.

	9 க		1 கி	ரோ		10 க
2 சி	வா	ஜி		3 க	பி	ல்
	ஸ்		11 மா			க
4 ம	க	டை	5 ர	ஞ்	சி	த்
	ர்		த்			தா
			தா			
6 அ	ர்	ஜு	ன்		12 ஆ	
13 ஜெ		14 பி			ன	
ய்	7 இ	ங்	கி	லா	ந்	து
பூ		யா			த்	
ர்		ங்		8 சே	ர	ம்

ஸ்போர்ட்ஸ்-1

இந்திய கால்ஃபின் வயது 160!



* பசத் அலி

கால்ஃப் ஆட்டம் தோன்றுவதற்கு ஸ்காட்லாந்தின் ஆடு மாடு மேய்ப்பவர்கள் உதவியிருக்கிறார்கள் என்றால் அதிசயமாயிருக்கும். மாடு மேய்க்கும் குச்சிகளைக் கொண்டு கூழாங்கற்களைத் தட்டி, முயல் குழிகளில் தள்ளுவது அவர்களுக்குப் பொழுதுபோக்கு க்ளொசஸ்டர் (Glohcester) தேவாலயத்தில் பழைய கண்ணாடி ஒன்றில் கால்ஃப் ஆடும் தோற்றம் காணப்படுகிறது. இது வரையப்பட்ட ஆண்டு 1350. இதே ஸ்காட்லாந்தின் பார்லிமெண்டில் கால்ஃப் ஆடக்கூடாது என்று 1457 ஆண்டில் சட்டம் இயற்றியிருக்கிறார்கள்!

ரோமானியர்கள் ஆடிய ஒரு விளையாட்டை — இதன் பெயர் யோகனிகா' — பிரிட்டனுக்கு 400ம் ஆண்டில் கொண்டு போயிருக்கலாம் என்று கூறப்படுகிறது. சீனாவின் தேசிய கால்ஃப் கழகத்தினர் இரண்டாம் நூற்றாண்டில் கால்ஃப் தங்கள் நாட்டில் பிறந்ததாக உரிமை கொண்டாடுகிறார்கள்! கால்ஃப் ஆட்டத்துக்கான ரப்பர் பந்துகளை 1899ம் ஆண்டில் கோபர்ன் காஸ்கெல் கண்டு பிடித்திருக்கிறார்.

1971ம் ஆண்டு பிப்ரவரி மாதம் சந்திரனில் இறங்கிய அமெரிக்க விண்வெளி வீரர் காப்டன் ஆலன் ஷெப்பர்டு கூட ஒரு கால்ஃப் ஆட்டக்காரர்தான் என்பது கால்ஃப் விளையாட்டுக்கும் பெருமை சேர்க்கும் தகவலாகும். இவர் அப்பல்லோ — 14 விண்வெளிக் கப்பலின் தளபதி.

கால்ஃப் ஒரு வெளிப்புற விளையாட்டு. இதில் விளையாட்டுக் கலைஞர்களின் வலிமையை விட திறமைக்கே அதிகம் வாய்ப்பு உண்டு. கால்ஃப் ஆட்டக்காரர் மற்ற ஆட்டக்காரர்களை விட அதிக 'ஸ்கோர்' காண்பதில்தான் கவனம் செலுத்துவாரே தவிர, அவரால் தனது எதிராளியின் ஸ்கோரைத் தடுத்து நிறுத்த இயலாது! இதனால்தான் கால்ஃப் மற்ற' விளையாட்டுக்களிலிருந்தும் கால்பந்தாட்டத்திலிருந்தும் வேறுபட்டு, தனிச் சிறப்புடன் மிளிர்கிறது.

கால்ஃப் மைதானத்தில் பச்சைப் பசும் புல்வெளிகளுக்கு நடுவே பதி

துண்டுமணி

னெட்டுக் குழிகள் அமைக்கப்பட்டிருக்கும். கோப்பை அளவிலுள்ள குழியில் கால்ஃப் பந்தை அடித்து விழச் செய்வதுதான் திறமையாளரின் குறிக்கோள்!

கால்ஃப் ஆட்டம் அமெரிக்காவில் மிகவும் 'பாபுலர்' விளையாட்டு. கிட்டத்தட்ட 25 இலட்சம் ஆட்டக்காரர்கள் 5 இலட்சம் 'காடி'களுடன் இந்த விளையாட்டில் ஈடுபட்டுள்ளனர். கால்ஃப் ஆடும் போது மைதானத்தில் பந்து அடித்துத் தொலைந்து போனால் பந்தை அடித்தவருக்கும் 'பெனல்டி' உண்டு!


இன்றைய கால்ஃப் ஆட்டத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்கள் ஸ்காட்லாந்துக்காரர்கள்தான். இதை இவர்கள் கி. பி. 1400 ஆம் ஆண்டிலேயே ஆடியிருப்பதாகத் தெரிய வருகிறது. ஸ்காட்லாந்து மன்னர்கள் விற் பயிற்சியை மறந்து விடும் அளவுக்கு கால்ஃப் ஆட்டம் பிரபல் மாகி வருவதைக் கண்டு, கால்ஃப் ஆட்டத்துக்குத் தடை விதித்தனர்! தடை விலகியதற்குக் காரணமாக இருந்தவர் ஸ்காட்லாந்து மன்னர் ஜானிகாம் ஜேம்ஸ்தான். அவருக்கும் கால்ஃப் விளையாட்டில் ஈடுபாடு ஏற்படவே தடையை விலக்கினார்கள். ஆட்டக்காரர்களுக்கு கால்ஃப் குச்சிகளைச் சுமந்து வருபவர்களுக்கு காஃடி என்று பெயரிட்டுப் பெருமைப்படுத்தியவரும் இவரே. இது 1710 வரை 'பணக்காரர்களின் விளையாட்டா'கவே கருதப்பட்டது. 1888ம் ஆண்டில்தான் இது அமெரிக்காவுக்குக் குடியேறியது! 1910ஆம் ஆண்டில்தான் மகளிரும் பங்கு கொண்டனர். அமெரிக்காவின் சாம்பியன் பாஃபி ஜோன்ஸ் ஆறு வயதில் கால்ஃப் ஆடத் தொடங்கி, பன்னிரண்டாம் வயதில் முதல் சாம்பியன் ஆனார்! 1930ம் ஆண்டில் அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் நடைபெற்ற மிகப் பெரிய கால்ஃப் பந்தயங்களில் வெற்றிக் கொடி நாட்டினார்.

பெண்களுக்கான கால்ஃப் ஆட்டக்காரர்களில் ஸ்காட் ராணி மேரி முதலிடம் வகிக்கிறார்!

காஃடி உதவியாளராக இருந்த பிரான்சிஸ் குலமட் இரண்டு பிரிட்டிஷ் கால்ஃப் ஆட்டக்காரர்களைத் தோல்வியுற வைத்திருக்கிறார்! 'அமெரிக்கக் கால்ஃப் ஆட்டத்தின் தந்தை' என்ற புகழ், ஜான்ஜீ ரீட்டுக்குக் கிடைத்தது! 1880ம் ஆண்டில் ஸ்காட்லாந்திலிருந்து வந்த இவர் கால்ஃப் மைதானம் ஒன்றை அமெரிக்காவில் நிறுவினார்.

புரோபஷனல் ஆட்டக்கார்ரான பைரன் நெல்ஸன் அக் காலத்திலேயே பதினோரு பந்தயங்களில்

* 400 மீ. ஓட்டத்தில் பரிசு பெற்ற பி. டி. உஷா, லி. குலியன், லி. வென்ஹாங்.





* ஹாக்கியில் துடிப்பான கட்டம்!

66,600 டாலர்களைச் சம்பாதித்திருக்கிறார்!

கால்ஃப் பந்தயத்துக்காக வில்ஸ் கோப்பை 1984ம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

1990ம் ஆண்டு நவம்பரில் சர்வதேச கால்ஃப் போட்டியொன்றை இந்தியன் டூபாக்கோ நிறுவனம் நடத்தவிருக்கிறது. பாகிஸ்தான், இந்தோனீசியா, மலேசியா, பங்களாதேஷ், ஹாங்காங் நாடுகளின் தலைசிறந்த கால்ஃப் ஆட்டக்காரர்கள் பங்கு கொள்ளவிருக்கிறார்கள்!

ஆசிய கால்ஃப் போட்டிகளில் ஒன்றான வில்ஸ் இந்திய கால்ஃப் போட்டியில் பதினைந்து நாடுகளைச் சேர்ந்த 200 புரோபஷனல் ஆட்டக்காரர்கள் பங்கேற்கவிருக்கிறார்கள். பிலிப்பைன் நாட்டில் பிப்ரவரியில் தொடங்கி ஜப்பானில் ஏப்ரலில் இந்தப் போட்டி முடிவடையும்.

இந்திய கால்ஃப்பைப் பொறுத்த வரை 1965ம் ஆண்டு ஒரு பொன்னான ஆண்டு. இந்த ஆண்டில்தான் பி. ஜி. சேத்தி. அக்கரைச் சீமை ஆட்டக்காரர் டுவால்டன் ஹோமை வென்று இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்தார்.

1989ம் ஆண்டில் திறமை அடிப்படையில் உலக கால்ஃப் ஆட்டக்காரர்கள் இருபது பேர்களைத் தேர்ந்தெடுத்த போது, முதல் இரண்டு இடங்களையும் அமெரிக்காவைச் சேர்ந்த பிரியன் கிளாரும், எமிலைன் அயுப்ரேயும் பெற்றனர்.

1982 ஆசிய விளையாட்டுப் போட்டியில் லக்ஷ்மண்சிங் கால்ஃப் பந்தயத்தில் தங்கப் பதக்கம் பெற்றுத் தந்தார். அவருக்கே வெள்ளிப் பதக்கமொன்றும் கிடைத்தது! லக்ஷ்மண் சிங், ராஜீவ் மோத்தா அமீட் லூத்ரா, ரிஷி நாராயண் குழுப் போட்டியில் தங்கம் பெற்றது தனிச் சிறப்பு.

கால்ஃப் ஆட்டத்தினால் சுற்றுலாத் துறையும் வளர்ச்சி பெறவுள்ளது. 65-75 கோடி அளவுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கும் வாய்ப்பு உள்ளதாம்!

ஸ்காட்லாந்து, 'கால்ஃப்பின் மெக்கா' என்று அழைக்கப்படும் புகழைப் பெற்றது! இருபத்திரண்டு கால்ஃப் ஆட்டக்காரர்கள் 'புனித ஆண்ட்ருஸ் கழகம்' என்ற அமைப்பைத் தொடங்கி, கால்ஃப் ஆட்டத்துக்கான சட்ட திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள்!

பிரிட்டிஷ்காரர்களுடன் கால்ஃப்

இந்தியாவிலும் குடியேறியது. கல்கத்தாவில் 1829ம் ஆண்டு ராயல் கல்கத்தா கால்ஃப் கிளப் தோற்றுவிக்கப்பட்டது. 1842ல் பம்பாயிலும், 1876, 1886களில் பெங்களூர், ஷில்லாங், சென்னையிலும் கால்ஃப் கிளப்கள் ஆரம்பிக்கப்பட்டன.

கால்ஃப் ஆட்டத்திற்கான கருவிகளை வாங்க 30 முதல் 50 ஆயிரங்கள் வரை ஆகும்! ஆட்ட மைதானம் கிட்டத்தட்ட பதினோரு கிலோமீட்டர் தூரம். ஆட்டத்தில் 'பதினெட்டுக் குழி'கள் நடவேண்டியிருக்கும். பந்தயத்தில் ஆட்டக்காரர்கள் நாளொன்றுக்குக் கிட்டத்தட்ட 45–50 கிலோமீட்டர் நடந்தாக வேண்டும்! அதனால் இதற்குத் திறமையோடு உடல் வலிமையும் மன உறுதியும் தேவை.

கால்ஃப் ஆட்டத்திற்கு வயது ஒரு பொருட்டல்ல! 92 வயதிலும் கூட இதற்கான போட்டிகளில் கலந்து கொண்டு ஜெனரல் லீஸ்லி முல்ஸர் வெற்றிவாகை சூடியிருக்கிறார்!

உலகத்திலேயே அதிக உயரத்திலுள்ள கால்ஃப் மைதானம் இந்தியாவிலுள்ள குல்மார்க்கில்தான் உள்ளது!

இந்தியாவிலுள்ள 200 கால்ஃப் பந்தய மைதானங்களில் கிட்டத்தட்ட 180 கால்ஃப் மைதானங்களை ராணுவத்தினர் நிர்வகித்து வருகிறார்கள்!

தாமஸ் குக் என்ற பயண நிறுவனம் இவ்வாண்டு 76 கால்ஃப் ஆட்டக்காரர்களுக்குப் பல புகழ் மிக்க சுற்றுலா இடங்களைப் பார்வையிடுவதுடன் பம்பாய், தில்லி, பெங்களூர், உதகமண்டலம் ஆகிய இடங்களில் அவர்கள் கால்ஃப் ஆடுவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறது! பிரான்சில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க 1989ல் மட்டும் 56 புதிய கால்ஃப் மைதானங்களை உருவாக்கியுள்ளனர். இந் நாட்டின் தலைவர் மிட்ராண்ட், கால்ஃப் ஆட்டத்தில் புலி!

1975ல் அமெரிக்கச் சிறுவன் காஃபி ஓர், ஐந்து வயதில் கால்ஃப் ஆடி, சிறுவர்களும் பெரியவர்களுக்குச் சளைத்தவர்கள் இல்லை என்பதைக் காட்டியிருக்கிறான்! இந்தியாவுக்கும் இப்படிப்பட்ட பெருமை கிடைக்குமா?


வில்ஸ் கால்ஃப் கோப்பைப் பந்தயத்திலும் — ஹிந்து — சன்மார் கால்ஃப் போட்டியிலும் வெற்றி பெற்றவர் கல்கத்தாவைச் சேர்ந்த பஸாத் அலி. 14 வயதிலேயே புரொப்ஷனலாக மாறியவர்! கால்ஃப் குச்சிகளைச் சுமந்து 'காஃடி'யாக இருந்த அனுபவம் இவருக்கும் உண்டு! ஹிந்து — சன்மார் கால்ஃப் போட்டியில் பஸாத் அலிக்குக் கிடைத்த பரிசுத் தொகை 1 லட்சம் ரூபாய்! இவரது சகோதரர்களும் சிறந்த ஆட்டக்காரர்களே!

ஸ்போர்ட்ஸ்-2

இதுவரை பீஜிங்கில்...

பதினோராவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் பீஜிங்கின் உழைப்பாளர் ஸ்டேடியத்தில் செப்டெம்பர் 22ந் தேதி தொடங்கின. இதற்கென முப்பத்தி மூன்று ஸ்டேடியங்கள் அறுநூறு மில்லியன் டாலர் செலவில் புதுப்பிக்கப்பட்டன.

ஆசியப் போட்டிக்கு 2700 பத்திரிகையாளர்களும், முப்பத்தெட்டு நாடுகளிலிருந்து 6,500 விளையாட்டுக் கலைஞர்களும் 3,500 அதிகாரபூர்வமாக அழைக்கப்பட்ட விருந்தினர்களும், கிட்டத்தட்ட ஒரு லக்ஷப் பார்வையாளர்களும் வந்துள்ளனர்.



"அந்த எலிக்குப் பரிசு கொடுத்துப் பாராட்டு விழா நடத்தறாங்களே... எதுக்கு?"

"பூனைக்கு வச்சிருந்த பால்ல தூக்க மாத்திரையைக் கலந்து வச்சி, பூனை தூங்கும் போது கழுத்துல நைசா மணியைக் கட்டிடுச்சாம்!"

— மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.

இருபத்தேழு விளையாட்டுப் போட்டிகளில் 308 தங்கப் பதக்கங்களை வழங்கியிருக்கிறார்கள். இந்தியா கபாடி போட்டியில் முதல் தங்கப் பதக்கத்தைப் பெற்றது. ஆசியப் போட்டிகளில் கபாடி இடம் பெற்றுள்ளது இந்த ஆண்டில்தான்.

பளு தூக்கும் போட்டியில் இந்திய வீராங்கனைகள் ஜோத்ஸனாவும் பார்தியும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று, பெண்கள் இதிலும் இளைத்தவர்களில்லை என்பதைக் காட்டியுள்ளனர்!

குத்துச் சண்டைப் போட்டிகளுக்கான தீர்ப்பை முதல் முறையாக 'கம்ப்யூட்டர் வழங்கியுள்ளது! சீனா ஆசியப் போட்டிகள் நடத்தும் நாடு என்பதுடன் மற்ற நாடுகளை விட அதிகப் பதக்கங்களைக் குவித்து முதலிடம் பெற்றது தனிச் சிறப்பு! இந்தியப் படகு வலிக்கும் விற்பன்னர்கள் ஜான்பீர், அஜேந்திரன், பதக், சுரீந்தர் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுத் தந்துள்ளது ஆறுதலளிப்பதாக உள்ளது! ஜிம்னாஸியப் போட்டிகளில் நீதி வழங்கும் நீதிபதிகள் தவறான தீர்ப்புக்களை வழங்குகிறார்களா என்பதைக் 'கம்ப்யூட்டர் ஒற்றன்' கண்காணித்து வந்தது அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தியுள்ளது!

விம்பிள்டன் டென்னிஸ் சாம்பியன் லியாண்டர் பியஸால் இந்தியாவுக்கு வெண்கலப் பதக்கத்தைத்தான் பெற்றுத்தர முடிந்துள்ளது என்றால் வியப்பாயில்லை? துப்பாக்கி சுடும் போட்டியில் சோமதத்தாவும் வெண்கலப் பதக்கந்தான் பெற்றுத் தந்தார்! 'தங்க ஓட்ட வீராங்கனை' உஷாவுக்குக் கடைசிப் பந்தயம்; வெள்ளி மட்டும் கிட்டியது. ரோஜா குட்டி ஒரு வெண்கலத்தையாவது பெற்று இந்தியாவின் 'மானத்தை'க் காப்பாற்றியுள்ளார்!

உரிய காலத்தில் அனுமதி கிடைக்காததால் பீஜிங்கில் வெண்கலப் பதக்கம் ஆடிய வீராங்கனை சோமதத்தாவால் கடைசி நிமிஷ விமானத்தில்தான் வர முடிந்துள்ளது! பயிற்சிக்காக முயன்ற போது, பயிற்சிக்கான துப்பாக்கிப் போட்டிக் களம் மூடப்பட்டு விட்டதாம்!

சீன விளையாட்டு வீரர்கள் இவ்வளவு பதக்கங்களைக் குவிப்பதைக் கண்டு நாம் ஆச்சரியப்படுகிறோம். ஆனால், இந்த விளையாட்டுக் கலைஞர்களை உருவாக்கும் பயிற்சியாளரைப் பற்றி ஒரு செய்தி. இவர்களை உருவாக்கும் பயிற்சியாளர் சங் குங்யூ 1987 லிருந்து ஓரிரு முறையே தம் வீட்டுக்குச் சென்றிருக்கிறாராம்! இவர் வீட்டுக்குப் போன போது இவரது ஐந்து வயது மகன் தந்தையென்று அறியாது ஒளிந்து கொண்டானாம்! இந்தியாவிலும் இப்படிப் பட்ட சங்குங்யூக்கள் தோன்றும் காலம் வருமா?

பீஜிங்கில் விளையாட்டுக்கலைஞர்களுக்கு நவீன மருத்துவக் கருவிகளை விட, சீன 'அகுபஞ்சர்' முறை உடனே வலியைப் போக்கும் அருமருந்தாகப் பயன்பட்டு வருகிறது!

பீஜிங்கில் ஆசியப் போட்டிகளுக்காக சீனா 420 கிலோ கிராம் தங்கத்தை உருக்கி மூன்று லக்ஷம் மோதிர நெக்லஸ்களைச் செய்து உள்ளது! உடல் ஊனமுற்றோரும் கூட பீஜிங் போட்டியில் கலந்து கொள்ளலாம்! ஹாங்காங்கைச் சேர்ந்த வில் வீரர் வால்பிங்ஸன் தம் சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறே திறமையைக் காட்டினார். பத்து வருஷங்களுக்கு முன் ஒரு கார் விபத்தில் கால்களை இழந்தவர் இவர்!

அடுத்த ஆசியப் போட்டி தாய்லாந்தைச் சேர்ந்த பாங்காக்கில் நடைபெறவிருக்கிறது!

* நன்றி — புகைப்படங்கள் — இந்தியன் எக்ஸ்பிரஸ்.


செருப்பு சபாபதி!
கதை: ரே.
ஓவியம் : ஜோவி
திறமையாகச் செருப்புத் திருடுவதில் வல்லவர் சபாபதி.
இந்தக் கல்யாண சீசன்லே ஐயா எட்டு ஜோடி திருடிட்டேன்!
செய்யறது கேவலமான திருட்டு! இதுல பெருமை வேறயா?
கையில் திருடி வந்த செருப்புகளை வைத்துக் கொண்டு, சபாபதி, மனைவியிடம் பெருமையாகப் பீற்றிக் கொண்டிருக்கிறார்.
யார் கிட்டயாவது வசமா சிக்கிக்கப் போறீங்க. ஒரே தரும அடிதான்!
சிக்கினால் தானே? ஐயா திருடறதை ஒரு பயலும் கண்டுபிடிக்க முடியாது.
நாளைக்கி தங்க மாளிகைல பெரிய திருமணம். ஒரு ஏழு ஜோடியாவது திருடிட்டு வந்துடுவேன். ஹஹ்ஹா!
எப்பத்தான் திருந்த மாறப் போறீங்களோ?
மறுநாள், திருமண மண்டபத்தில் —
அடடா விளக்கு அணைஞ்சிருக்கே! என்ன மின்சாரமோ?
இருட்டில்...
சரியான வாய்ப்பு. முதல் ஜோடியை திருடலாம்!



சபாபதி இருட்டில் செருப்பைத் திருடிப் போட்டுக் கொண்டு வெளியே வந்து...
சார்! சார்! இருங்க!
திருடினது தெரிஞ்சிருக்குமோ? ஆளைப் பார்த்தால் ரௌடி மாதிரி வேற இருக்கே...!
ஓடுகிறார்.
முரடனும் துரத்துகிறான்!
ஐயோ! மீனா சொன்னது சரியாப் போச்சே! கடவுளே இந்த முறை தப்பித்து விடு. இனிமே செருப்புத் திருட மாட்டேன். சத்தியம்! சத்தியம்!
வீட்டில் —
மீனா தாழ்ப்பாள் போடு. ஒரு முரடன் துரத்திட்டு வரான்!
டொக்
டொக்
சொல்கிறார்.
ஒளியச் சொல்லிவிட்டு மீனா திறக்கிறாள்.
ஐயா, செருப்பை மாத்திப் போட்டுக்கிட்டு வந்திருக்கார்! வலது கால் செருப்பு வேறே, இடது கால் செருப்பு வேறே! இந்தாங்க!
இவ்வளவு தானா? இந்தாங்க!
முரடன் போன பிறகு —
புத்தி வந்தது. இனிமே செருப்புத் திருட மாட்டேன்.



தவளையாரின் தீபாவளிப் பயணம்!

விடிந்தால் தீபாவளி. இரண்டு மூன்று நாட்களாக மழை பெய்திருந்தது. தெருவெங்கும் நீர் தேங்கிக் கிடந்தது. தவளைகள் இங்குமங்கும் தத்தித் தாவிக் கொண்டிருந்தன. ராம்ஜியும் பிரமோத்ராமும் கொளுத்திப் போடும் வெடிகள் வேறு அவற்றை அச்சுறுத்தின.

ராம்ஜிக்குத் திடீரென்று ஒரு எண்ணம். உடனே, "டேய் பிரமோத்...! நல்ல "கும்" இருட்டுடா..! இப்போ ராக்கெட் வாணம் கொளுத்தினால் ஜோராக இருக்கும்.. இல்லையாடா?" என்றான்.

பிரமோத் ஓடிச் சென்று, ஒரு பெரிய உயரமான பாட்டிலை எடுத்து வந்தான். நடுத் தெருவில் வைத்தான்.

ராம்ஜி ஓடிச் சென்று, ராக்கெட் வாணத்தைக் கொண்டு வந்து பாட்டிலில் வைத்தான். பிறகு உள்ளே ஓடினான். அந்தச் சமயத்தில் ஒரு அதிசயம் நடந்தது.

ஒரு வயதான தவளையார், அவரால் தொடர்ந்து தத்திப் போக முடியவில்லை. இடையிடையே சற்று நேரம் ஓய்வு தேவைப்பட்டது. நிற்பதற்கு இடம் தேடிச் சுற்றுமுற்றும் பார்த்தார்.

அப்போது தான் ராம்ஜி ராக்கெட்டைப் பாட்டிலில் வைத்துவிட்டு உள்ளே ஓடினான். ஒரே தாவல்...! தவளையார் பாட்டில் மீது தொற்றிக் கொண்டார்! பிறகு மெல்ல நகர்ந்து அவர் ராக்கெட்டைப் பற்றிக் கொள்வதற்கும், வீட்டுக்குள்ளிருந்து வாணம் கொளுத்தும் ஊதுவத்தியுடன் ராம்ஜி ஓடி வருவதற்கும் சரியாக இருந்தது. அவன் தவளையாரைக் கவனிக்கவில்லை. ராக்கெட்டிற்குத் தீ வைத்தான். அடுத்த கணம் அது, "ஸ்......" என்று சீறிக்கொண்டு விண்ணில் பாய்ந்தது.

அதில் தொற்றிக் கொண்டிருந்த தவளையாரும் வாணத்துடன் விண்ணிற்குப் பயணமானார்! தவளையாருக்குப் பயமாக இருந்தது. அதனால், அவர் கீழே குனிந்து பார்க்கவே இல்லை. வழக்கமாக, ராக்கெட் வாணம் என்பது, விண்ணில் சற்றுத் தூரம் சீறிப் பாய்ந்து விட்டு, 'படார்' என்று வெடித்துச் சிதறிப் பூமியில் எங்காவது விழுந்து விடும். தவளையார் பயணம் செய்த ராக்கெட், வெடிக்கவும் இல்லை; சிதறிக் கீழே விழவும் இல்லை. மாறாக, விண்ணில் மேலே.... மேலே.... போய்க் கொண்டே இருந்தது!

ஜானகிமணாளன்

வெகு நேரத்துக்குப் பிறகு, அந்த ராக்கெட் 'பொத்' என்று எங்கேயோ தரையில் விழுந்தது. தவளையாருக்கு ஒன்றும் புரியவில்லை. மெல்லக் கீழே தரையைச் சுற்று முற்றும் பார்த்தார். என்ன ஆச்சர்யம்! அவர் கண்களை அவராலேயே நம்ப முடியவில்லை. தரையில் ஒரு தூசு தும்பு கூட இல்லை!


திடீரென்று ஏழெட்டு மனிதர்கள் வெளிப்பட்டனர். அவர்கள் விண்வெளி வீரர்களுக்கான உடைகளை அணிந்திருந்தனர். குறுக்கும் நெடுக்குமாக ஓடி எதையோ தேடினர்.

அவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து தவளையாருக்கு விவரம் புரிந்துவிட்டது. தன்னைச் சுமந்து வந்த ராக்கெட் அவர்களின் ராடரில் பதிவாகியிருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டது. விவரம் புரியாமல் அவர்கள் தேடி அலைவதைப் பார்த்ததும் தவளையாருக்குப் பாவமாக இருந்தது. தானாகச் சென்று விவரத்தைக் கூறி விட விரும்பினார். அவர்கள் கவனத்தைத் தன் பக்கம் இழுக்க, பாடத் தொடங்கினார்!

"கர...! கர...! கர...! கொர...! கொர...! கொர...!"

ஒருவர், "டேய்...! ஏதோ வினோதமான சப்தம் கேட்கிறதுடா...!" என்றார். மற்றவர்களும் சற்று நேரம் காதைத் தீட்டிக் கொண்டு உற்றுக் கேட்டனர்.

"ஆமாம்டா...! பிற கிரகத்தின் விண்வெளிக் கப்பல் எழுப்பும் சமிக்ஞை ஒலியாக இருக்குமோ...?" என்று ஐயத்தைக் கிளப்பினார் இன்னொருவர்



மீண்டும் தவளையாரிடமிருந்து, ''கர ,..கர ...கர ...கொர ...கொர ... கொர ...'' சப்தம்!

அனைவரும் ஒலி வந்த திசையை நோக்கி ஓடி வந்தனர்.

'ஏன் தவளையாரே ...! நீர் எப்படி இங்கு வந்தீர் ...?'

''இது எந்த ஊர் ...? முதலில் அதைச் சொல்லுங்கள் ..?''

''இது ஒரு விண்வெளி நகரம்... பூமியில் பல நகரங்கள் உள்ளன அல்லவா? அதே போல்,ஆகாயத்தில் அமைக்கப்பட்டுள்ள நகரம் இது ...''

''ஆகாய நகரமா? ஆச்சர்யமாக இருக்கிறதே ...! இதன் பெயர் என்ன ...?''

''பெயரா ...? 'பாரத் சிக்மா நகர்'.

''அப்படியானால் இந் நகரை அமைத்தது பாரத நாட்டுக்காரர்களா ...?''


''ஆம் ...! அது சரி தவளையாரே ...! நீர் எந்த நாட்டிலிருந்து வருகிறீர்கள் ...?''

''பாரதத்திலிருந்துதான் ...'', என்றார் தவளையார் பெருமையுடன்.

''சரி தவளையாரே! நீர் எப்படி இங்கு வந்தீர் ...?'' உம்முடைய வாகனம் எது? அது எங்கே ...?'' அவர்கள் சரமாரியாக வினாக்களைத் தொடுத்தனர்.

தவளையார், தான் வந்த ராக்கெட் வாணம் கிடந்த திசைக்குத் தன் கையை நீட்டிக் காட்டினார். ஒருவர் ஓடிச் சென்று அதை எடுத்து வந்தார்.

உடனே அனைவரும், ''ப்பூ ... தீபாவளி ராக்கெட் வாணம் ...! இதில் அமர்ந்தா இங்கு வந்தீர்?'' என்றனர்



வியப்புடன். அவர்களின் உற்சாகம் சப்பென்று ஆகி விட்டது.

"ஆம் ஐயா...! ஆனால் இதில் அமர்ந்து அல்ல... தொற்றிக் கொண்டு வந்தேன்...", என்ற தவளையார் நடந்த அனைத்தையும் விவரித்தார்.

"நல்லவேளை! எங்களுக்கு உயிர் வந்தது..." என்றனர் அவர்கள்.

தவளையார் அவர்களை வியப்புடன் நோக்கினார்.

"ஆம்... ஏதோ வேற்றுக் கிரக மனிதர்கள்தான் எங்களது பாரத் சிக்மா நகரைத் தாக்க வந்து விட்டார்களோ என்று பயந்து கொண்டிருந்தோம்... அப்படி இல்லை என்று தெரிந்ததும் ஒரு நிம்மதி..." என்று அவர்கள் பெருமூச்சு விட்டனர்.

அதற்குள் ஒருவர், "சரி தவளையாரே! இன்று நீர் எங்களது விருந்தாளி... அத்துடன் இன்று தீபாவளி அல்லவா? வாருங்கள் எங்களுடன்... அனைவரும் விருந்து உண்டு மகிழ்ச்சியாக இருப்போம்..." என்று அழைத்தனர்.

தவளையார் அந்த அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். எல்லாரும் மகிழ்ச்சியாக ஒரு மேஜையைச் சுற்றி அமர்ந்து, விருந்து உண்டனர். தவளையாரால் நாற்காலியில் அமர்ந்து சாப்பிட முடியவில்லை. மேஜை மீதே தாவி ஏறி அமர்ந்து கொண்டார்.

"அடுத்தது என்ன...?" என்றார் தவளையார்.

"என்ன வேண்டும்...? கேளுங்கள், செய்வோம்..." என்றார் ஒருவர்.

"இத்தனை நேரம் பூமியில் விடியற் காலம் ஏற்பட்டு, தீபாவளி நடந்து கொண்டிருக்கும். வெடிகளைக் கண்டு எனக்குப் பயம்தான். என்றாலும், ராம்ஜியும் பிரமோத்தும் வெடி கொளுத்துவதைத் தூரத்தில் இருந்த வாறு பார்ப்பேன். நான் இங்கு வந்து விட்டதால், அதைப் பார்க்க முடியாமல் போய் விட்டது..." என்று குறைப் பட்டார் தவளையார்.

உடனே ஒருவர், "அதனால் என்ன...? கலங்க வேண்டாம். உனக்கு ராம்ஜியும் பிரமோத்தும் வெடி கொளுத்துவதைத்தானே பார்க்க வேண்டும்...? இதோ பாருங்கள்!" என்றவாறு, அருகில் இருந்த ரிமோட் கண்ட்ரோல் சாதனத்தில் சில பித்தான்களை அழுத்தினார்.

அவர்கள் எதிரில் ஒரு டி. வி. பெட்டி. அடுத்த நொடியில் அதன் திரையில் பூமி தெரிந்தது. அவர் இன்னொரு பித்தானை அழுத்தினார். பூமி மறைந்து இந்தியா தெரிந்தது. வேறொரு பித்தானை அழுத்தினார். தமிழ்நாடு தெரிந்தது. அடுத்ததாகத் தஞ்சை மாவட்டம். பிறகு மன்னார் குடி நகரம்... அதில் உள்ள முதல் தெரு... கடைசியாகப் பித்தானை அழுத்தியதும், பிரமோத் வீட்டு வாசலில் ராம்ஜியும் பிரமோத்ராமும் போட்டி போட்டுக் கொண்டு வெடிகளைக் கொளுத்திக் கொண்டிருப்பது தெரிந்தது.

பாரத் சிக்மாவில் இருந்த தவளையும் மற்ற மனிதர்களும் அதையெல்லாம் கண்டு களித்தனர். கை தட்டி ஆரவாரம் செய்தனர்.


அப்போது யாரும் எதிர்பாராத விதம் ஒரு அசம்பாவிதம் நடந்தது.

டி.வி., திரையில் பிரமோத்ராம் ஒரு ராக்கெட்டைக் கொளுத்திக் கொண்டிருந்தான். அதைக் கவனிக்காத ராம்ஜி பிரமோத்ராமுக்குப் பின்புறம் ஒரு அணுகுண்டை வைத்துக் கொளுத்தி விட்டான். அடுத்த கணம் உலகமே அதிரும் வண்ணம் ஒரு 'டமார்...' வெடிச் சத்தம்!

அவ்வளவுதான்! படுக்கையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த ராம்ஜி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். இத்தனை நேரமும் தான் பார்த்த காட்சிகள் எல்லாம் வெறும் கனவு என்பது அவனுக்குப் புரிந்தது.

குளித்துப் புத்தாடை அணிந்து பிரமோத்ராமுடன் வெடி கொளுத்த வந்த போது மாடிப்படி ஓரமாகத் தவளையார் இருப்பதைக் கவனித்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது. அவன் சிரித்ததற்கு என்ன காரணம் என்பது மற்றவர்களுக்குப் புரியவில்லை. ஆனால் உங்களுக்குப் புரியுமல்லவா?

முதலை சிந்துவது கண்ணீரா?



பட்டைவாலி களைப்புடன் புதரிலிருந்து வெளியே வந்தது.

"முட்டையெல்லாம் இட்டு முடிச்சாச்சா?" என்று கேட்டது முட்டைக் கண்ணன். முட்டைக்கண்ணன் ஆண் முதலை. பட்டைவாலி அதன் மனைவி.

"ஒருவழியா முடிச்சேன். அரச மரத்தடிப் புதரில் கொஞ்சம், மாமரப் புதரில் கொஞ்சம், கடம்ப மரத்தடியில் கொஞ்சம் என்று பிரிச்சு இட்டிருக்கேன். இந்த முறையாவது குட்டிங்களெல்லாம் ஒழுங்கா வெளிவந்து ஆயுளோட இருக்கணும்" என்று தன் கவலையை வெளியிட்டது பட்டைவாலி.

"சரி, ரொம்பக் களைப்பா இருப்பே. போன வாரம் தண்ணி குடிக்க வந்த எருமையை அடிச்சு, பாகம் பாகமாக் கடிச்சுப் பாறை விளிம்புக்குக் கீழே அமுக்கி வைச்சிருக்கேன். போய் வேண்டியதை எடுத்துச் சாப்பிடு" என்று பரிவுடன் மனைவியை அனுப்பியது முட்டைக் கண்ணன்.

தான் முட்டைகளிட்ட பகுதியை விட்டு விலகாமல் மூன்று மாதங்கள் வரை அங்கேயே காத்திருந்தது பட்டைவாலி. முட்டைகளை உடைத்துக் கொண்டு குட்டிகள் வெளியே வர வேண்டிய காலம் அது.

"இன்னும் அடையாள ஒலி வரவில்லையே முட்டைகளிலிருந்து? மனிதப் பாவிகள் யாராவது முட்டைகளைத் திருடிக் கொண்டு போய் விட்டார்களா?" என்று கலங்கிக் கொண்டிருந்தது பட்டைவாலி.

அன்று முன்னிரவு நேரம். பட்டைவாலி ஏங்கிக் கொண்டிருந்த அடையாள ஒலி முட்டைகளிலிருந்து கேட்டது! பரபரப்படைந்த அது, மின்னலாகச் செயல்பட்டது! முட்டைகளை அழுத்திக் கொண்டிருந்த சேற்றுப் பகுதியைத் தோண்டி அகற்றியது. இதற்கெனவே காத்திருந்த குட்டிகள் ஓட்டை உடைத்துக் கொண்டு வெளியே வந்தன! உள்ளுணர்வு வழிகாட்ட, அத்தனை குட்டிகளும் நீருக்கு வந்து நீந்தி, தாங்களாகவே உணவு தேடி அலைந்தன!

கடம்ப மரத்தடிப் புதர்தான் பாக்கி. அடையாள ஒலி இன்னும் அங்குள்ள முட்டைகளிலிருந்து வரவில்லை! காரணம் என்னவாக இருக்கும்? அடுத்த நாளும் பொறுமையோடு காத்திருந்த பட்டைவாலி, வேறு வழியில்லாது முட்டையிட்ட பகுதியைத் தோண்டிப் பார்த்தது. அது எதிர்பார்த்தபடியே அங்கே முட்டைகள் இல்லை. யாரோ திருடிக் கொண்டு போயிருக்கிறார்கள்!

"இந்தவரை அரசமரத்தடி, மாமரத்தடிப் புதர்களில் இட்ட முட்டைகளாவது தப்பித்துக் கொண்டதே" என்று அந்த நிலையிலும் ஆறுதல் கொண்டது பட்டைவாலி.

காலை நேரம். ஆற்றின் நடுவே தலைநீட்டிக் கொண்டிருந்த ஒரு மொட்டைப் பாறையில் பட்டைவாலியும், முட்டைக்கண்ணனும் சுகமாக வெயில் காய்ந்து கொண்டிருந்தன. இரண்டின் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. இரண்டும் அடிக்கடி பற்கள் நிறைந்த தங்கள் வாயை அகலத் திறந்து மூடின.

கடுக்கன்காரர் ஒருவரும், வழுக்கைத் தலையர் ஒருவரும் கரையில்

ரேவதி

வந்து நின்றனர்.

''அண்ணே, இந்த அதிசயத்தைப் பாரண்ணே! கடம்ப மரத்தடிப் புதரில் இருந்த முட்டைகளை நாம்ப திருடிட்டோம் இல்லையா? அம்மா முதலையும் அப்பா முதலையும் எப்படிக் கண்ணீர் விட்டு அழுகின்றன பாருங்கள்!'' என்று வியந்து கொண்டார் கடுக்கன்காரர்.

''இதுக அதுக்காக அழலேண்ணே. நேற்றுத் தண்ணீர் குடிக்க வந்த இரண்டு செம்மறி ஆடுகளை இழுத்துக்கிட்டுப் போய் இதுக ரெண்டும் முழுங்கிடுத்து. முழுங்கின ஆடுங்களுக்காக இரங்கி இதுக இரண்டும் கண்ணீர் விடுது. முதலைக் கண்ணீர்னு கேள்விப்பட்டதில்லே?'' என்று கூறினார் வழுக்கை.

''சுத்த வ்டிகட்டின மடையங்க. நம்ப உடம்பிலே அதிகமா இருக்கிற உப்புச்சத்து, கண்களுக்கு அருகே உள்ள சுரப்பிகள் மூலமா வெளியே வர்றது. நாம்ப வாயைத் திறந்து கொண்டிருப்பதும் அதற்காகத்தான். இதுகூட இவங்களுக்குத் தெரியலையே!'' என்று வியந்து கொண்டது முட்டைக்கண்ணன்.

''அது மட்டும் இல்லீங்க. நாம்ப ஆட்டை முழுங்கிட்டோம், மாட்டை முழுங்கிட்டோம்னு இந்த மனிதர்கள் அடிக்கடி புகார் சொல்கிறாங்களே... நம்மால எதையுமே முழுங்க முடியாதுங்கிறது இவங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டது பட்டைவாலி.


''நீ கடம்ப மரத்தடிப் புதர்ல இட்ட முட்டைகளைக் களவாடிக் கொண்டு போன திருடர்கள்தான் இவங்க ரெண்டு பேரும். கிடைச்சா இவங்களைச் சும்மா விடக்கூடாது'' என்றது முட்டைக்கண்ணன்.

அன்று இரவு. நல்ல இருட்டு நேரம். ஓடக்காரன் வீட்டுக்குப் போய் விட்டான். கரையில் பரபரப்போடு வந்து நின்றனர் கடுக்கனும் வழுக்கையும்.

''அண்ணே, முதலைங்களை நினைச்சா பயமா இருக்கண்ணே. காலையில ஓடக்காரன் வந்ததும் போய்க்கலாம்,'' என்றார் வழுக்கை.

''அப்பாவுக்கு உடம்பு சரியில்லைன்னு தகவல் வந்த பிறகு இங்கே தாமதிப்பது சரியில்லை, தம்பி. அதோட, முதலைங்களுக்கு இரவில் கண் தெரியாது. அதனால, தைரியமா வா. ஆற்றைக் கடந்துடலாம்'' என்று வழுக்கைக்குத் தைரியம் கூறி அழைத்தார் கடுக்கன். வழுக்கை விருப்பமில்லாமல் ந டு ங் கி க் கொண்டே இறங்கினார்.

''மை இருட்டிலும்கூட, நீருக்கடியில் நம்மால் நன்றாகப் பார்க்க முடியும் என்பதை இந்த மடையர்கள்




உணரவில்லை. அதுவும் நன்மைக்குத் தான். நான் இட்ட முட்டைகளைத் திருடினவங்கதானே இவங்க? இரண்டு பேர் கதையையும் முடிச்சுட லாம்,'' என்று தன் கணவனிடம் கூறியது பட்டைவாலி.

''உனக்குக் கடுக்கன். எனக்கு வழுக்கை'' என்றது முட்டைக் கண்ணன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு ஆற்றின் நடுவே இருந்த மொட்டைப் பாறையில் தன் குட்டிகளுடன் குளிர் காய்ந்து கொண்டிருந்தது பட்டை வாலி. குட்டிகள் இப்பொழுது சற்றுப் பெரிதாகியிருந்தன.

''அம்மா, அம்மா. எதிர்க் கரையில் ஓர் ஆடு தண்ணீர் குடிக்கிறது. நான் போய்ப் பிடிக்கட்டுமா?'' என்று கேட்டது ஒரு குட்டி.

''வழுக்கையையும், கடுக்கனையும் தீர்த்துக் கட்டியதால் எல்லோரும் நம்மை ஒழிக்கக் காத்துக்கிட்டிருக்காங்க. நீங்களெல்லாம் கவனமா இருக்கணும். அதோடு ஆட்டை ஜீரணம் செய்யக் கூடிய அளவுக்கு நீங்கள் இன்னும் வளரவில்லை.



அதனால், எலும்பில்லாத உணவாகச் சாப்பிடுங்கள்.''

''உங்களால் மட்டும் ஆட்டை ஜீரணம் பண்ண முடியுமா, அம்மா?''

''முடியும். என்னைப் போல வளர்ந்த முதலைங்க வயிற்றில் ஹைடிரோகுளோரிக் அமிலம்னு ஒண்ணு சுரக்குதாம். அதனால் இரும்புத் துண்டுகளைக் கூட என்னால் ஜீரணம் பண்ண முடியும்.''

''அம்மா, நாங்க எப்போ உங்களையும் அப்பாவையும் போல் பெரிதாக வளர்வோம்?''

''எலும்பை ஜீரணம் பண்ணும் நிலை வந்துவிட்டால் வேகமாக வளர ஆரம்பித்து விடுவீர்கள். அப்புறம் என் தயவு கூட உங்களுக்கு வேண்டாம். நம் இனத்திற்கு மட்டும்தான் இறக்கும் வரை வளர்ச்சி உண்டு. நம் தாத்தாவுக்குத் தாத்தா, நூற்று இருபது ஆண்டுகள் உயிர் வாழ்ந்தாராம். அவருடைய உடம்பு, கால் பனைமர நீளம் இருந்ததாம். உயிர்க்காட்சி சாலையில் அவருடைய உடம்பைப் பாடம் பண்ணி வைத்திருக்கிறார்களாம்!'' என்று பெருமைப்பட்டது பட்டைவாலி.

''தாத்தாவைப் போல் நாமும் நீண்ட காலம் உயிர் வாழ முடியுமா, அம்மா?''

''தோலுக்காகவும், இறைச்சிக்காகவும் நம்மை மனிதர்கள் வேட்டையாடாமல் இருந்தால் நாமும் தாத்தாவைப் போல் நீண்ட காலம் உயிர் வாழலாம். ஆனால், அது நடக்கக் கூடிய செயலா?'' என்று ஏக்கப் பெருமூச்சு விட்டது பட்டைவாலி.

அறிவியல் உண்மைகள் :

1. முதலைகளுக்கு மூப்பு வந்து இறக்கும் நேரம் வரை வளர்ச்சி உண்டு. மனிதர்கள் வேட்டையாடாது இருந்தால் இவை நூறு ஆண்டுகளுக்கும் மேல் வாழும்.

2. நீருக்கடியில் இரவிலும் கூட முதலையால் காண முடியும்.

3. முதலைகளின் உடலில் சேரும் அதிக உப்புச் சத்து நாக்கின் மூலமாகவும், கண்களுக்கு அருகே உள்ள சுரப்பிகள் மூலமாகவும் வெளியேறும். இது, முதலை அழுது கண்ணீர் பெருக்குவது போல் தோன்றும்.

4. முட்டைக்குள் வளரும் குட்டிகள், வெளியே வர உதவும்படி தாய்க்குக் குரல் கொடுத்து வரவழைக்கும்! இது இயற்கையின் அதிசயம்.

5. முதலையின் வயிற்றில் சுரக்கும் ஹைடிரோ குளோரிக் அமிலம், எதையும் கரைக்க வல்லது.



ஹிட்லருக்கு ஒரு நாள் தன் வாழ்நாள் எதுவரை என்பதை அறிய ரொம்பவும் ஆர்வமாக இருந்தது. அதனால் ஒரு ஜோசியரை அழைத்து இவ்வாறு கேட்டார்:

''ஜோசியரே! நான் எப்போது இறப்பேன்?'' என்று. அதற்கு ஜோசியர், ''யூதர்களின் விடுமுறை நாளன்று!'' என்றார். திருப்தியடையாத ஹிட்லர், ''யூதர்களுக்கு என்று விடுமுறை?'' என்று கேட்க, ''நீங்கள் இறக்கும் நாளன்று!'' என்றார் அந்த (பலே!) ஜோசியர்.

— மொரப்பூர் அ. நவ்சாத்.

பிருந்தாவனக்

ஆயிரம் வராகன்



ஒருநாள் சடையப்ப வள்ளல் தன்னுடைய வீட்டில் ஊஞ்சலில் அமர்ந்திருந்தார். அவருக்கு எதிர்ப்புறத்தில் கவிஞர் ஒருவர் இனிமையான கவிதைகளைப் பொழிந்து கொண்டிருந்தார்.

புலவர் கவிதையைப் பாடி முடித்ததும், "மூத்தா!" என்று உள்பக்கம் பார்த்துக் குரல் கொடுத்தார் சடையப்ப வள்ளல். உள்ளேயிருந்து பதில் ஏதும் வராமல் போகவே, "அடடா! மறந்தே போய் விட்டேன். அவனுக்கு உடல் நலமில்லாததால் இன்று வரவில்லை. உமக்கு நான் நூறு வராகன் தருவேன்!" என்றவராய் உள்ளே எழுந்து சென்றார் சடையப்ப வள்ளல். சிறிது நேரத்தில் நூறு வராகன் அடங்கிய ஒரு பட்டுப் பையை எடுத்து வந்து புலவரிடம் கொடுத்தார்.

உடனே புலவர், "இருநூறு தருகிறேன் என்றீர்களே!" என்றார். சடையப்பருக்கு 'திக்'கென்றது. நூறு என்றதைப் புலவர் இருநூறு என்று எண்ணி விட்டாரே... என்று நினைத்தவராய், "இருநூறு தருகிறேன் என்று எப்போதையா கூறினேன்?" என்று கேட்டார்.

அதற்குப் புலவர், "முந்நூறு தருகிறேன் என்றுதானே சொல்லிப் போனீர்கள்..." என்று கூறவே, சடையப்பருக்கு மேலும் திகீர் என்றது "புலவர் பெரும் புரட்டுக்காரராய் இருப்பார் போலிருக்கிறதே..!" என்று எண்ணியவராய், "யாரய்யா முந்நூறு வராகன் தருவதாய்ச் சொன்னது?" என்று கொஞ்சம் குரலை உயர்த்தியே கேட்டார்.

இதற்கு, "நானூறு தருகிறேன் என்று நீங்கள்தானே கூறினீர்கள்?" என்று புலவரிடமிருந்து அமைதியாகப் பதில் வந்தது.

இதைக் கேட்டதும் சடையப்பருக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"நான் உமக்கு நூறு வராகன் தருவதாகத் தான் கூறினேன். நீர் என்னடாவென்றால், இருநூறு, முந்நூறு, நானூறு என உயர்த்திக் கொண்டே போகிறீரே! இது என்ன விளையாட்டு?" என்று கேட்டார் சடையப்பர் சூடு பறக்கும் குரலில்.

"நான் ஒன்றும் உயர்த்தவில்லையே! இரு நூறு வராகன் தருவேன் என்று நீங்கள் கூறியதைத்தான் 'இரு நூறு' என்றேன். "எப்போதையா கூறினேன்?" என்று கேட்டீர்கள்! முன்புதான் கூறினீர்கள் என்பதை, 'முன் நூறு' என்று சொன்னேன். "யாரய்யா சொன்னது" என்று கேட்டீர்கள். அதைத் தான் 'நான், நூறு' தருகிறேன் என்று நீங்கள் சொன்னதை "நானூறு" என்று கூறினேன்!" என்று இலக்கிய நயத்துடன் விளக்கமளித்தார் புலவர்.


புலவருக்கு என்ன வாக்கு சாதுர்யம்! எவ்வளவு நயமான சிலேடை! வள்ளல் சடையப்பருக்கு உள்ளம் பூரித்தது. அதனால் புலவருக்கு ஆயிரம் வராகன் பரிசளித்தார்.

அதென்ன ஆயிரம் வராகன் என்கிறீர்களா? சடையப்பர் கூறிய நூறு, புலவர் கூறிய இருநூறு, முந்நூறு, நானூறு ஆக மொத்தம் ஆயிரம் வராகன். கணக்கு சரிதானே?!

— வி. என். சுப்பிரமணியன்,
குரோம்பேட்டை.

கதையரங்கம்

பறிகொடுத்த லட்டு



ஒரு கிராமத்தில் விடாக்கண்டன், கொடாக்கண்டன் என இருவர் இருந்தனர். இருவரும் ஒருவரை ஒருவர் எப்படி ஏமாற்றுவது என்பதில் கண்ணும் கருத்துமாயிருந்தனர்.

விடாக்கண்டன் ஒரு பசு மாடு வாங்கினால், கொடாக்கண்டன் ஒரு காளை மாடு வாங்குவான். இப்படியாகப் போட்டி மனப்பான்மை இருவருக்கும் பெருகியது.

ஒரு நாள் பக்கத்து ஊரில் நடக்கும் உறவினர் திருமணத்திற்கு இருவரும் சென்றனர்.

மாப்பிள்ளை அழைப்பு முடிந்தவுடன், இருவரும் சாப்பிட அமர்ந்தனர்.

இருவரும் எதிரெதிர் வரிசையில் உட்கார்ந்திருந்தனர்.

விடாக்கண்டன் தன் இலையில் தண்ணீர் தெளித்து, கொடாக்கண்டன் மேலே உதறினான்.

கொடாகண்டன் அவ்வாறே செய்தான். இப்படியாக உணவருந்திக் கொண்டிருக்கும் போது, திடீரென்று கரண்ட் கட்டானது.

அப்போது, விடாக்கண்டன் 'கொடாக்கண்டனின் இலையில் உள்ள லட்டைப் பிடுங்கலாம்' என நினைத்துக் கையை நீட்டினான். அதே போல் கொடாக்கண்டனும், 'விடாக்கண்டனின் இலையில் உள்ள லட்டைப் பிடுங்கி உண்ணலாம்' என நினைத்துக் கையை நீட்டினான். ஒருவனின் கையை மற்றவன் லட்டு என நினைத்துப் பிடித்துக் கொண்டான்.

பத்து நிமிடத்தில் கரண்ட் வந்து, விளக்குகள் எரிந்தன. இருவரும் அவசரமாக கையை உதறிக்கொண்டு இலையைப் பார்க்க, லட்டு இல்லை...!

பக்கத்திலிருந்த பெரியவர் உடனே, "தம்பிகளா! எப்போதும் எதுக்கும் போட்டி மனப்பான்மை கூடவே கூடாது! நீங்கள் சண்டையிட்டுக் கொள்ளும் போது உங்கள் பொருள் வேறு ஒருவனுக்குப் போய் விடும்! இனியாவது பொது இடங்களில் வீண் சண்டை, பொறாமைகளைத் தவிர்த்து, ஒற்றுமையாக இருங்கள்" என்று கூறி லட்டுகளையும் கொடுத்தார். அன்று முதல் இருவரும் நல்ல நண்பர்களாயினர்.

— குத்தாலம். வி. சுந்தரராமன்

பூச்சி அரக்கன்



மோகனிடம் எத்தனை முறை கூறினாலும் கேட்பதில்லை. தும்பி வண்ணாத்திப் பூச்சி இவைகளைப் பிடித்து அவற்றின் கழுத்தில் நூலைக் கட்டி வேகமாகச் சுற்றுவான். இறக்கைகளைப் பிய்த்து விடுவான். தும்பியின் கால்களில் பெரிய கல்லைக் கொடுத்துத் தூக்க வைப்பான்.

சில சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் அவற்றை வேடிக்கை பார்ப்பார்கள். பெரியவர்கள், பார்த்து விட்டால், 'பாவம்டா, அப்படியெல்லாம் உயிர்களைத் துன்புறுத்தக் கூடாது' என்பார்கள். ஆனால், மோகன் அவர்கள் பேச்சைக் கேட்காமல் தொடர்ந்து பூச்சிகளைத் துன்புறுத்தியே வந்தான். பூச்சி அரக்கன் என்றே அவனை எல்லோரும் அழைத்தனர்.

அன்று பள்ளிக்குப் புதிதாக ரமேஷ் சேர்ந்திருந்தான். அவன் மிக நன்றாகப் படிக்கும் மாணவன். அவனது தந்தையை அந்த ஊருக்கு மாற்றி விட்டதால் அவனை அந்தப் பள்ளியில் சேர்த்திருந்தார்கள்.

ரமேஷ் மோகனின் செய்கை பற்றிக் கேள்விப்பட்டான். அவனுடன் மாலையில் விளையாடும்பொழுது மோகனுக்கு ஒரு தும்பி கிடைத்து விட்டது. மோகன் வழக்கப்படி அதனைச் சித்திரவதை செய்ய ஆரம்பித்தான். அந்த நேரத்தில் ஒரு பெரிய முள் மோகனின் காலில் குத்தி விட்டது. மோகன் துடித்துப் போய் விட்டான். ரமேஷ் அந்த

முள்ளை மெதுவாக எடுத்தான். முள் முழுதும் வெளியில் வந்ததும் அது ஆழமாக உள்ளே சென்றதால் மோகனின் காலில் வலி அதிகம் இருந்தது.

அந்த நேரத்தை ரமேஷ் நன்கு பயன்படுத்திக் கொண்டான்.

''உனக்கு இவ்வளவு பெரிய உருவம் இருக்கிறது. ஆனால், ஒரு சிறிய முள் குத்தினால் கூட உன்னால் தாங்க முடியவில்லை. முள்ளை எடுக்க என்னைப் போல் மற்றவர்களும் உனக்கு உதவுவார்கள். செப்டிக் ஆகிவிட்டால் டாக்டரிடம் காட்டி மருந்து போட்டுக் கொள்ளலாம் — ஊசி போட்டுக் கொள்ளலாம்.

ஆனால், ஒரு பூச்சியை நாம் சித்திரவதைப் படுத்தும் பொழுது அதற்கு எவ்வளவு வேதனையாக இருக்கும்? வேதனையை அதனால் வெளியில் சொல்ல முடியுமா? வலித்தால் டாக்டரிடம் சென்று மருந்து சாப்பிட்டு ஊசி போட்டுக் கொள்ள முடியுமா? நமக்கு விளையாட்டாக இருக்கும் ஒரு செயல், அந்தப் பூச்சிக்கு வேதனையளிக்கிறது. அது நிரந்தரமாக தனது உடம்பின் ஒரு பாகத்தைக் கூட இழக்க நேரிடுகிறது.

'உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்' என்று பாரதியாரின் பாட்டை இன்று ஆசிரியர் நமக்குச் சொல்லித் தரவில்லையா? அன்பு செலுத்தா விட்டாலும் அதற்குத் தொந்திரவாவது கொடுக்காமல் இருக்கலாம் அல்லவா? ஒரு புறாவுக்காகத் தன் சதையைக் கொடுத்தான் சிபிச் சக்கரவர்த்தி என்று படித்தோமே. நாமே இப்படிப் பூச்சிகளைத் துன்புறுத்தலாமா?''

சரியான சமயத்தில் சொன்னது மோகனைச் சிந்திக்க வைத்தது. ரமேஷின் கருத்துக்களை அவன் ஏற்றுக் கொண்டான்.

''இனிமேல் நான் உயிர்களைத் துன்புறுத்த மாட்டேன். இது உறுதி'' என்று மோகன் ரமேஷிடம் சொன்னான். ரமேஷின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

— க. இராமலிங்கம், புதுப்பேட்டை.

ஒளிந்து கொண்டது ஏன்?



ஒரு நாள் நள்ளிரவில் முல்லா மட்டும் தனியாகத் தமது வீட்டில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது சில திருடர்கள் எவ்விதமோ வீட்டுக்குள் நுழைந்து நடமாடுவதைக் கண்டுவிட்டார்.

மெதுவாக எழுந்து சந்தடி செய்யாமல் பீரோவுக்குள் புகுந்து கதவை மூடிக் கொண்டார்.

பல இடங்களில் தேடியும் விலை உயர்ந்த பொருள் ஏதும் கிடைக்காததால் திருடர்கள் முல்லா மறைந்திருந்த பீரோவை நோக்கி வந்தனர்.

பீரோவின் கதவைத் திறந்து பார்த்த போது உள்ளே முல்லா இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவரைப் பிடித்துக் கொண்டார்கள்.

ஏதோ விலை உயர்ந்த பொருள் அவரிடம் இருப்பதால்தான், அவ்வாறு மறைந்து கொண்டார் என்று நினைத்த திருடர்களில் ஒருவன் முல்லாவை நோக்கி, ''எதற்காக நீர் மறைந்து கொண்டீர் என்று கேட்டான்.

''உங்களைப் போன்ற திருடர்கள் மிகவும் சிரமப்பட்டு என் வீட்டுக்குள் வந்திருக்கும் போது நீங்கள் எடுத்துப் போகும் அளவுக்கு விலை உயர்ந்த பொருள் நான்தான் என்பதை உங்களுக்கு அறிவிக்கவே பீரோவுக்குள் புகுந்து கொண்டேன்,'' என்றார் முல்லா.

திருடர்கள் தாங்கள் வந்திருந்த வேலையையும் மறந்துவிட்டுச் சிரித்தார்கள்.

— எம். வேலையா, டைபோர்டு எஸ்டேட்.

திருடினால் அடிக்காதே!

காலை மணி எட்டு —

பள்ளிக்குப் புறப்படுவதற்காக ஆசிரியர் பார்த்தசாரதி ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

'வாத்தியாரே... யோவ் வாத்தியாரே!'

மிகவும் ஆத்திரமாகவும், மரியாதைக் குறைவாகவும் ஒலிக்கும் அந்தக் குரலைக் கேட்டு ஆசிரியர் திடுக்கிட்டார்.

அடுத்த தெருவில் வசிக்கும் அருணாசலம் சினத்துடன் வாசலில் நின்று கொண்டிருந்தார். அவரருகே அவரது மகன் மாணிக்கம். பார்த்தசாரதியின் வகுப்பு மாணவன்.

'யோவ் வாத்தியாரே. நேற்று பள்ளிக் கூடத்தில் என்னய்யா நடந்துச்சி?'

அவர் வந்திருக்கும் காரணம் பார்த்தசாரதிக்கு விளங்கி விட்டது. ஆனாலும் பொறுமையாகவே, ''ஏன் அதை உங்கள் பையன் சொல்லலையா?'' என்றார்.

''சொன்னான்யா சொன்னான். நீர் அவனைப் போட்டு சாங்குமாங்கா அடிச்சதைச் சொன்னான். மத்தப் பசங்க முன்னாடி நீங்க அவனை அவமானப்படுத்தினதைச் சொன்னான்!''

'அருணாசலம், தான் என்ன செய்தான்னு சொன்னானா?'

'அட, பெரிசா என்னய்யா செய்துட்டான்? அடுத்தவன் பையிலேயிருந்து ஒரு பேனாவை எடுத்திருக்கான். அவ்வளவுதானே?'

'என்ன அருணாசலம், நீங்க பேசறது ஆச்சரியமா இருக்கே! அடுத்தவன் பொருளைத் திருடறது குற்றமில்லேன்னா சொல்லறீங்க? அவனை இப்படியே விட்டுட்டோம்னா அவன் திருந்தறதுதான் எப்போ? அவன் இந்தத் தவறைச் செய்தது இது முதல் தடவையல்ல; இதற்கு முன்பும் பல தடவை செய்திருக்கிறான்.'

ஆசிரியர் பக்குவமாக விளக்கியும் அருணாசலத்தின் ஆத்திரம் தணியவில்லை. ''சரிதான் நிறுத்துய்யா. அதற்காக இப்படியா போட்டு அடிப்பாங்க? உங்ககிட்ட அடி வாங்கறத்துக்கா நாங்க பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்துக்கு அனுப்பறோம்?'' என்று கத்தினார் அருணாசலம்.

''அருணாசலம், தயவு செய்து ஆத்திரப்படாதீங்க. கொஞ்சம் பொறுமையாக் கேளுங்க. எந்தப் பையனையும் அடிக்கணும்னு ஆசிரியர்கள் ஆசைப்படுவதில்லை. தவறுகளைச் சுட்டிக்காட்டி, அன்பாகத் திருத்தவே முயற்சிக்கிறோம். அப்படியும் முடியலைன்னாதான் சற்று அடித்துத் திருத்தவே முயற்சிக்கிறோம்.

''யோவ்! உன்னோட உபதேசத்தையெல்லாம் கேட்டிட்டிருக்க இங்கு வரலே. உமக்கு எச்சரிக்கவே வந்தேன். இனிமேல் என் பையன் மேலே கை வைக்கற வேலை வச்சிக்காதீர். இன்னொரு தடவை இம்மாதிரி நடந்திச்சின்னா நான் பொல்லாதவனா மாறிடுவேன்.. ஆமா, சொல்லிப்

— இ.ஜே.தீன்

புட்டேன்!''

அருணாசலம் தன் பையனை இழுத்துக் கொண்டு வேகமாகச் சென்று விட்டார்.

ஊரில் பெரிய செல்வந்தர்களில் அருணாசலமும் ஒருவர். அவரது ஒரே மகனான மாணிக்கம் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான்.

அவனிடத்தில் பேனாவோ மற்றப் பொருட்களோ இல்லாமல் இல்லை. ஒவ்வொன்றிலும் ஒன்றுக்கு இரண்டாகவே வைத்திருந்தான்:

இருந்தும், அடுத்தவர் பொருளை எடுத்து மறைத்துக் கொள்வதிலும் தான் எடுக்கவில்லை என்று சாதிப்பதிலும் அவனுக்கு அலாதியான சந்தோஷமிருந்தது.


அவனுடைய செயல்களால் ஏனைய மாணவர்கள் தினம் தினம் எதையாவது இழந்து கொண்டேயிருந்தார்கள். அவன் மீது ஏதாவது குற்றச்சாட்டு வந்தவண்ணமாகவே இருந்தது.

அவனிடம் பலமுறை எடுத்துச் சொல்லியும், அவன் திருந்தாத காரணத்தால் பார்த்தசாரதி அன்று கொஞ்சம் கடுமையாகவே நடந்து கொண்டார்.

அதற்காக அவன் தந்தை இப்படிச் சண்டைக்கு வருவார் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

அன்று பள்ளிக்கு ஆசிரியர் வந்து கொண்டிருந்த போது, மாணிக்கமும், கோபாலனும் ஓரிடத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.





''என்ன... காட்டிலே ஒரே களேபரமா இருக்கு?''

''விஷயம் தெரியாதா...? கரண்ட் கட் ஆனதும் மெழுகுவர்த்தின்னு நெனச்சு யாரோ இருட்டுல குரங்கார் வாலுக்குத் தீ வச்சுட்டாங்களாம்!''

— மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.

''வந்தால் என்னடா? பள்ளிக்கு உள்ளேதான் அவருக்குப் பயப்படணும்? வெளியிலே எல்லாம் பயப்பட வேண்டியதில்லை.''

''ஏன்னா ஒரு தடவை அவரு என்னை அடிச்சிட்டுப் பட்டபாடு போதாதா! அதனால நான் என்ன செய்தாலும் அவரு என் மேல கையை வைக்க மாட்டாரு!'' என்றான் மாணிக்கம் மிடுக்காக.

ஆண்டுத் தேர்வு நெருங்கிக் கொண்டிருந்தது.

எல்லா மாணவர்களும் கவனமாகப் படித்தார்கள். ஆசிரியருக்குக் கட்டுப்பட்டார்கள். அறிவுரைகளை ஆர்வமாய்க் கேட்டார்கள்.

மாணிக்கம் மட்டும் அடங்காமல் நடந்து கொண்டான். ஆர்வமில்லாமல் படித்தான். அல்லது படிப்பது போல் நடித்தான்.

ஆசிரியர்கள் அவனைக் கண்டிக்கவும், கடுமையாக நடந்து கொள்ளவும் தயங்கினர்.

ரிசல்ட் வந்தது.

வகுப்பில் மாணிக்கத்தைத் தவிர எல்லா மாணவர்களும் பாஸாகி இருந்தனர்.

''என்ன வாத்தியாரய்யா, என் மகன் மட்டும் பெயிலாகி விட்டானே! நீங்கள் இப்படிச் செய்யலாமா? என்றார் அருணாசலம்.

பார்த்தசாரதி அவரைப் பரிவுடன் பார்த்தார். ''அருணாசலம், முதலில் ஆசிரியர்களின் மேல் நம்பிக்கை வையுங்கள். அவர்கள் யாருக்குமே தீங்கு செய்ய நினைப்பதில்லை. மேலும் இந்த வகுப்பின் பரீட்சைத் தாள்கள் இங்கே திருத்தப்படுவதில்லை. எல்லாமே வேறு வேறு நகரங்களுக்கு அனுப்பப்பட்டுத்தான் திருத்தப்படுகின்றது. தயவு செய்து தவறான அபிப்பிராயம் கொள்ளாதீர்கள்.''

''அப்படின்னா என் மகன் மட்டும் பெயிலானதற்கு என்ன காரணம்? சொல்லுங்க.'' என்றார் அருணாசலம்.

''உங்கள் மகன் பெயிலானதற்கு நீங்கள்தான் காரணம்!''

''என்ன, நான் காரணமா? நானா காரணம்?'' என்று சினந்தார் அருணாசலம்.


''கோபப்பட்டாலும் உண்மை அதுதான் அருணாசலம்! அவனுக்கு நீங்கள் கொடுத்த செல்லம், அவனது முன்னேற்றத்தைத் தடுத்துடுச்சி...''

அருணாசலம் மவுனமாக நின்று கொண்டிருந்தார்.

''அருணாசலம் மாணிக்கம் ஆசிரியர்களுக்கு அடங்காமல் போனதற்கு நீங்கள்தான் காரணம். அவனது தவறான நடத்தைகளுக்குப் பரிந்து கொண்டு நீங்கள் கொடுத்த ஊக்கம் தான் அவன் பெயிலானதற்குக் காரணம். கண்டிக்கிற உரிமை இருந்தால்தானே எங்களால் நன்கு கற்பிக்க முடியும்? ஆசிரியர்கள் சொல்லுவதை அலட்சியப்படுத்துகின்ற ஒரு மாணவன் எப்படிப் பாஸாக முடியும்? சொல்லுங்க?'' என்று வினவினார் பார்த்தசாரதி.

அருணாசலத்திற்குப் பொறி தட்டியது. அருணாசலம் மெதுவாகப் பார்த்தசாரதி அருகே சென்று அவரது கையைப் பற்றிக் கொண்டார். ''என்னை மன்னிச்சிடுங்க பார்த்தசாரதி. உங்களை நான் மிகவும் புண்படுத்தி விட்டேன். நீங்கள் சொல்வதெல்லாம் உண்மைதான். தயவு செய்து பழையதை மறந்து விடுங்கள். என் மகனைத் திருத்துங்கள். அவனை மனிதனாக்குங்கள்.'' என்று மனம் கசிந்தார் அருணாசலம்.

''சரி, கவலையை விடுங்கள் அருணாசலம். நடந்ததை மறப்போம். இனி நல்லதையே நினைப்போம்.'' என்று அவரை ஆறுதல்படுத்தினார் பார்த்தசாரதி.



பிரிமென் நாட்டுப் பாடகர்கள்

மூலம்: பழைய ஜெர்மன் கதை

தமிழில்: எஸ். சித்ரா

முன்னொரு காலத்தில் ஒரு கழுதை ஓரிடத்தில் வளர்க்கப்பட்டு வந்தது. அதன் எஜமானான் அந்தக் கழுதைக்கு வயசாகி விட்டது என்று கருதி இனி அது வேலைக்கு லாயக்கில்லை என்று நிச்சயித்தான். 'அதன் தோலை உரித்து விற்றால் என்ன?' என்று பேசிக் கொண்டிருந்தான்.

எஜமானின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த கழுதை இனியும் இந்த இடத்திலிருந்தால் ஆபத்து என்று நினைத்து ஒரே ஓட்டமாய் அந்த இடத்தை விட்டுத் தப்பித்து பிரிமேன். என்ற பக்கத்து நாட்டுக்குப் போய் விட நினைத்தது.

புதிய நாட்டில் தான் ஒரு பெரிய பாடகனாக வர வேண்டுமென்று மனக் கோட்டை கட்டியது கழுதை!

சிறிது தூரம் ஓடிய களைப்பில் அடுத்த ஊரில் அப்படியே காலாற நடந்து வந்தது. அப்பொழுது வழியில் ஒரு வேட்டை நாய் கிழமாகி, ஒன்றும் செய்ய முடியாமல் அப்படியே ஓரிடத்தில் கொட்டாவி விட்டுக்கொண்டு சுருண்டு கிடந்தது. அதைப் பார்த்ததும், ''என்ன நாயாரே! கொட்டாவி விட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறே?'' என்று கேட்டது கழுதை.

''கழுதையாரா? என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? எனக்கோ வயதாகி விட்டது. என் எஜமானரோடு வேட்டைக்குப் போய் வேட்டையாடும் நிலை இப்பொழுது எனக்கில்லை. கொஞ்ச தூரம் ஓடினாலே மூச்சு வாங்குகிறது. ஹாூம்.. என்ன செய்ய? எஜமானரும் என்னைப் போட்டு அடித்து, 'வேலைக்காகாதவன்' என்று துரத்தி விட்டார். நானும் வழி தெரியாமல் எப்படிச் சாப்பிடுவது, எப்படி உயிர் வளர்ப்பது என்று யோசித்துக் கொண்டு



"மகாராஜா ஏன் கோபமாக இருக்கிறார்?"

"மகாராஜா வருகிறார், பராக், பராக்னு சொல்றதுக்குப் பதிலா மகாராஜா வருகிறார், கிராக், கிராக்னு அறிவிப்பாளன் கத்தினானாம்."

— ஷோபனா வெங்கட்ராமன், மயிலாடுதுறை.

படுத்து விட்டேன்,'' என்று கவலையோடு சொன்னது.

''அப்படியா செய்தி? நானும் கிட்டத்தட்ட உன் நிலையிலிருப்பவன் தான். சொந்த ஊரை விட்டு இதோ இந்த ஊருக்குப் பிழைக்க ஒரு வழி தேடி வந்திருக்கிறேன். இசைக் குழு ஒன்றை அமைக்கலாமா என்று யோசிக்கிறேன். நீயும் என்னோடு சேர்ந்து விட்டால் மேளம் அடிக்கலாம்; நான் பாட்டுப் பாடுவேன். எப்படி யோசனை?'' என்று உற்சாகத்தோடு கேட்டது.

வேட்டை நாய் கழுதையின் யோசனையைக் கேட்டு ஏதோ தனக்கும் பிழைக்க வழி கிடைத்ததாக நினைத்து மகிழ்ச்சியடைந்தது.

இரண்டும் சேர்ந்து நடந்து போய்க் கொண்டிருந்தன. வழியில் ஒரு பூனை எதிர்ப்பட்டது. உற்சாகமிழந்து காணப்பட்ட அதன் முகத்தைப் பார்த்தால் ஏதோ புயலடித்து ஓய்ந்த நிலம் போல வெறிச்சென்றிருந்தது.

பூனையினருகில் சென்ற கழுதை, ''பூனையாரே! ஏன் சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறீர்?'' என்று கேட்டது.

பூனை தலையை நிமிர்த்திக் கரகரப்பான குரலில், ''பின்னே என்னாப்பா, கழுத்துச் சரியில்லாத கிழட்டுப் பூனை சந்தோஷமாகவா இருப்பேன்? எனக்குக் கழுத்து வலி தாங்க முடியவில்லை. ஓடியாடி எலிகளைப் பிடிக்கக் கூடிய திராணியில்லை. எங்காவது மூலையில் உட்கார்ந்து கொண்டால் போதும் என்று இருக்கிறது. என்னை வைத்துக் கொண்டு என் முதலாளியம்மா என்ன பண்ணுவாள்? எப்படிச் சாப்பாடு போடுவாள்? என்னைத் தண்ணீரிலேயே முழுகடித்து ஒரேயடியாகத் தொலைத்து விடப் பார்த்தாள். ஏதோ ஆண்டவன் புண்ணியத்தில் தப்பித்து இதோ இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறேன்,'' என்று தன் சோகக் கதையைச் சொல்லி முடித்தது.

''அப்படியா பூனையே, இனி நீயும் எங்கள் இசைக் குழுவில் ஒரு உறுப்பினர். நீ ஒரு சிறந்த இரவுப் பாடகனாய் இருப்பாய். ஆகையால், இன்றே நீயும் பிரிமேனுக்கு எங்களோடு வந்து விடு. இனி உனக்குக் கவலையில்லை,'' என்று சொல்லிப் பூனையையும் உடனழைத்துக் கொண்டது கழுதை.

மூன்றும் ஒன்றாய் நடந்து சென்றன.

வழியில் ஒரு தோட்டத்தில் வீடு ஒன்றின் கூரையில் ஒரு பெரிய சேவல் பெருங்குரலெடுத்துக் கூவிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் மூன்றும் நின்றன.

கழுதை, சேவலைப் பார்த்து, ''என்ன இப்படிக் கூவுகிறாயே! உன் குரல் அப்படியே உடம்பிலுள்ள எலும்பில் புகுந்து கொள்ளுமளவு பலமாயிருக்கிறதே! அடேயப்பா! ஏன் இப்படிப் பெருங்குரலெடுத்துக் கூவுகிறாய் நண்பா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டது.

''இன்றிரவு என் தலையை வெட்டிக் குழம்பு வைத்து விடும்படி எங்கள் எஜமானர் சொல்லி விட்டார். நாளைக்கு நான் உயிரோடிருக்கப் போவதில்லை. அதனால்தான் இன்றே என் குரல் முழுவதையும் இந்த ஊருக்குப் பரப்பி விட்டு உயிரை விடத் தீர்மானித்து விட்டேன்,'' என்று திரும்பக் கூவ முயன்றது சேவல்.

கழுதை, சேவலைப் பார்த்து, ''இனிமேல் நீ இங்கு இருக்கத் தேவையில்லை. எங்களோடு பிரிமேனுக்கு வந்து விடு. எங்கள் இசைக் குழுவில் நீயும் பாடலாம். எதற்காக உயிரை



விடுவது?'' என்று அழைத்தது.

சேவலுக்கும் அவர்களோடு போக ஆசையாயிருந்தது. ''சரி வருகிறேன்,'' என்று அவற்றுடன் சேர்ந்து கொண்டது.

கழுதை, நாய், பூனை, சேவல் நான்கும் ஒன்றாய்ச் சேர்ந்து போய்க் கொண்டிருந்தன. பிரிமேன், ஒரே நாளில் அவற்றால் போய்ச் சேரக் கூடிய தூரத்தில் இல்லை. வழியில் அவை ஒரு பெரிய காட்டைக் கடக்க வேண்டியிருந்தது.

அங்கேயே அன்று இரவு தூங்கிக் கழித்து விட்டு, அடுத்த நாள் காலை போகலாமென்று ஒரு மரத்தினடியில் கழுதை, நாய், பூனை மூன்றும் படுத்துக் கொண்டன. சேவல் மட்டும் மேலேயே ஏறியிருக்க முடிவு செய்து மரவுச்சிக்குப் போய் உட்கார்ந்தது.

உட்கார்ந்த சேவல் சுற்று முற்றும் நோட்டம் விட்டது. தூரத்தில் ஒரு விளக்கு வெளிச்சம் பளிச்சென்று தெரிந்தது.

உடனே அது தன் தோழர்களை அழைத்தது. ''நண்பர்களே! தூரத்தில் வெளிச்சம் தெரிகிறது. நாம் அங்கே போனால் பசிக்குச் சாப்பிட ஏதாவது கிடைக்கும் என்று நினைக்கிறேன். போகலாமா?'' என்று கேட்டது.

மற்ற மூன்றும் சம்மதிக்கவே எல்லாமாகச் சேர்ந்து கிளம்பின.

அவர்கள் போய்ச் சேர்ந்த இடம் பயங்கரமான கொள்ளையர்கள் வாழும் பெரிய வீடு. அந்த வீடு பளிச்சென்று விளக்கொளியில் ஜொலித்தது. அக்கம் பக்கத்தில் வேறு வீடுகள் இல்லை. முதலில் கழுதை போய் அந்த வீட்டு ஜன்னலில் மெல்ல எட்டிப் பார்த்தது.

உடனே சேவல், ''என்ன. பார்த்தீர்கள் கழுதையாரே?'' என்று ஆவலை அடக்க மாட்டாமல் கேட்டது.

கழுதை பதிலுக்கு, ''என்னத்தைப் பார்த்தேன்! ஒரு பெரிய மேஜையின் மேல் பலவிதமான பதார்த்தங்களும், மாமிசமும் பரப்பியிருக்கிறது. திருடர்கள் சுற்றி உட்கார்ந்து நன்றாக மூக்கைப் பிடிக்கச் சாப்பிடுவதைத்தான் பார்த்தேன்,'' என்று ஏக்கப் பெருமூச்சு விட்டது.

''ஆகா.. நமக்கும் விருந்து கிடைத்தால் எப்படியிருக்கும்!'' என்று பதிலுக்குப் புலம்பியது வேட்டை நாய்.

''அந்த விருந்து மேஜையின் முன் நாமெல்லாம் உட்கார்ந்து உணவு உண்ணுவது போல் கற்பனையாவது செய்து பார்க்கிறேன் நண்பரே!'' என்று தன் மன ஆசையை வெளிப்படுத்தியது பூனை.

பிறகு எல்லாம் ஒன்று சேர்ந்து எப்படி அந்த வீட்டிற்குள் நுழைவது என்று யோசிக்க ஒரு திட்டம் போட்டுக் கொண்டன.

முதலில் கழுதை ஜன்னல் வழியாக எட்டிப் பிடித்து காலிரண்டையும் உள்ளே விட்டு நிற்க வேண்டும். கழுதையின் மேல் நாய் ஏறி எட்டி நிற்க, அதன் மேல் பூனை. எல்லாவற்றுக்கும் மேலே சேவல். அப்படி அத்தனையும் நின்ற பிறகு, அவற்றின் கச்சேரி ஆரம்பிக்கலாம் என்று முடிவு செய்தன.

அதன்படியே நின்று, ஏழுரை கட்டை சுருதியில் கழுதை அடித்தொண்டையில் கர்ணகடூரமாய்க் குரல் எழுப்ப, கூடவே நாய் குரைக்க, பூனை தன் பங்குக்குக் கத்த, எல்லா

''பையனை ஸ்கூலுக்கு அனுப்பிச்சுட்டுப் பயந்துட்டே இருந்தீங்களா! ஏன்?''

'''ஹோம் வொர்க்' சரியா, தப்பாங்கிற சந்தேகம்தான்.''

— ஆர். இரத்தினசாமி,
பு. புளியம்பட்டி.





வற்றுக்கும் சிகரமாய்ச் சேவல் பெருங்குரலெடுத்துக் கூவியது.

அவற்றின் சப்தம் தாங்காமல் ஜன்னல் மறை கழன்று, கண்ணாடிகளெல்லாம் நிலைகுலைந்து 'சிலீர்...' என்று கீழே விழுந்தன! நான்கின் குரலும் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்தது.

நான்கின் குரலும் கலந்து புதுமையானதொரு பயங்கரக் குரல் அங்கே கேட்டது!

உள்ளேயிருந்த திருடர்கள் இதற்கு முன்னால் கேட்காத வினோத ஒலி கேட்பதைக் கேட்டு அலறியடித்துக் கொண்டு ஒருவர் மேல் ஒருவர் அப்படியே நிலைதடுமாறி விழுந்து தப்பித்தால் போதும் என்று அந்த வீட்டை விட்டே வெளியே ஓடி வந்தனர்!

சமயம் பார்த்திருந்த நான்கும் உள்ளே ஒரே பாய்ச்சலில் நுழைந்தன.

ஏதோ ஆறு வாரம் பட்டினி கிடந்த மாதிரி அங்கு வைத்திருந்த உணவையெல்லாம் அரக்கப் பறக்க ஒரு கை பார்த்தன நான்கும்.

புல் கட்டு வைத்திருந்த மூலையில் கழுதை காலை அகட்டிப் படுத்து விட்டது. நாய் கதவு மூலையிலும் பூனை அடுப்பருகிலும், சேவல் மேலே தொங்கிக் கொண்டிருக்கும் விளக்கின் கம்பத்திலும் என்று

அததற்குப் பிடித்த இடத்தில் தூங்கி வழிந்தன.

நள்ளிரவு நேரம் திருடர்கள் எல்லோரும் ஒன்று கூடி, ''அட நாம் என்ன அவ்வளவு பயந்தாங் கொள்ளிகளா? ஒருவர் போய் இருண்டு கிடக்கும் நம் வீட்டில் விளக்கை ஏற்றி, யார்தான் இருக்கிறார்கள் என்று பார்த்து வருவோம்,'' என்று ஒரு திருடனை வீட்டிற்கு அனுப்பினார்கள்.

வீட்டை அடைந்த ஒருவன் சமையலறைக்கு நேராகப் போய் தீப் பெட்டியை எடுத்துக் குச்சியை உரச முயற்சி செய்தான். அடுப்படியில் தூங்கிக் கொண்டிருந்த பூனை உஷாராகி விட்டது. தன் கூர்மையான நகங்களைக் கொண்டு திருடனின் முகத்தில் கீறி, 'உர் உர்' என்று பயங்கரமாய்ப் பிறாண்டியது. பாய்ந்து பாய்ந்து விரட்டியது.

அவன் அப்படியே விழ, மூலையில் அதற்குப் பின்னாலிருந்த வேட்டை நாய் ஒரே தாவில் அவன் காலைக் கவ்வியது. கழுதை தன் பங்குக்குக் கால்களால் ஒரே உதை. அவ்வளவு தான்! வந்தவன் ஏதும் செய்ய முடியாமல் அப்படியே வெலவெலத்துப் போனான். உடம்பெல்லாம் வலி, பயம்!


மேலேயிருந்த சேவல் உதவி செய்யும் பொருட்டுப் பெருங்குரலில் கத்தியது. தன்னைத் தாக்கியவை பல மிருகங்களா, இல்லை ஒரே ஒரு மிருகமா என்பதை உணர முடியாத திருடன் நடுங்கி, தலைதெறிக்க வீட்டை விட்டு வெளியில் ஒரே ஓட்டமாக ஓடினான்.

வெளியேயிருந்த மற்றத் திருடர்களிடம், தப்பி வந்தவன் சொன்னான்: ''நண்பர்களே, நான் தப்பி வந்ததே தம்பிரான் புண்ணியம். நம் வீட்டினுள் பயங்கரமான பேய்க் கூட்டமொன்று இருக்கிறது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் என்னைத் துன்புறுத்தியது. அப்பப்பா! இனிமேல் நாம் அந்த வீட்டையே மறந்து விடுவதுதான் நல்லது.''

திருடர்கள் அதற்குப் பிறகு அந்த வீட்டிற்குக் கனவில் கூடப் போகப் பயந்தார்கள்.

இருக்க இடம் கிடைத்த கழுதையும் அதன் நண்பர்களும் பல காலம் சந்தோஷமாக அங்கேயே வாழ்ந்தன. திருடர்கள் ஏராளமான உணவுப் பண்டங்களைச் சேர்த்து வைத்திருந்தார்கள். அப்புறம் என்ன குறை? இசைக் குழு வைப்பது பற்றிய முயற்சியைக் கொஞ்ச காலம் தள்ளிப் போட்டு அந்த வீட்டிலேயே தங்கி ஓய்வெடுத்தன நான்கும்!

நேருவின் கார் ஆசை



இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானப் பிரிவில் மாணவனாக இருந்தார் இளம் ஜவஹர். இந்தியாவிலிருந்த தனது தந்தை மோதிலால் நேருவுக்கு ''தனக்குக் கார் ஒன்று தேவை'' என எழுதினார்.

''உனக்குக் கார் வாங்கித் தர ஒரு ராஜாவின் உதவியா எனக்குத் தேவை? என்னால் முடியாததா? ஆனால், இப்போது வாங்கித் தராததற்கு ஒரு காரணம் உண்டு. நீ நண்பர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு காரை வேகமாக ஓட்டி விபத்தில் சிக்கிக் கொள்வாய் என்று ஆராயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள உன்னை நினைத்து நான் தவிப்பேன்'' என்று மோதிலால் நேரு எழுதினார்.

— ஆர். மகாதேவன், திருநெல்வேலி – 6.



புட்ட மாட்டேன்!

பாலு சைக்கிளை விட்டுக் கீழே இறங்கினான்.

முறத்தில் கறிகாய்க் குப்பைகளை அள்ளிக் கொண்டு வந்த அம்மா, "பாலு, நீ செய்யறது கொஞ்சம்கூட நல்லா இல்லே. மானுக்கு அழகு துள்ளி விளையாடல்னு சொல்லுவாங்க. அப்படித் துள்ளி விளையாடும் மான் குட்டியை, இப்படிச் சிறைப்படுத்தி அறையிலே போட்டு அடைச்சு வைத்திருக்கியே? இது நியாயமா? ஏக்கத்திலேயே அது இளைச்சுப் போயிடப் போகுது," என்று எச்சரிப்பது போல் கூறினாள்.

"அறையிலே இருந்தா என்னம்மா? அறைக்குள்ளேயேதான் அதைத் துள்ளி விளையாட வைக்கிறேனே? நீங்க பார்க்கலையா? ஒரு குச்சியில் பறித்த இலைகளைக் கட்டி வைச்சுக்கிட்டு, அறைக்குள்ளேயே முன்னும் பின்னும் நடப்பேன். என் பின்னாலேயே துள்ளித் துள்ளி ஓடி வரும்."

"இதெல்லாம் அதுக்குப் போதுமா? பரந்த தோட்டத்தில் அதைச் சுதந்திரமா நடக்கவும் ஓடவும் விட்டு

தேவி நாச்சியப்பன்

அதன் உற்சாகத்தைப் பார்க்க வேண்டும்.''

''போங்கம்மா. என் மானுக்கு அதெல்லாம் வேண்டாம். அதைத் தோட்டத்தில் விட்டால் தெருவில் போறவங்க வர்றவங்களெல்லாம் அதை வேடிக்கை பார்க்க நிற்பாங்க. புல்லு, தழை கொடுப்பாங்க. அப்புறம் என் மானும் அவங்களோடு அன்பாப் பழகி விளையாட ஆரம்பிக்கும். அதை என்னால் தாங்கிக்க முடியாது. அதன் அன்பு முழுக்க எனக்கே சொந்தம்.''

''அது நியாயமில்லை பாலு. உன் கண்மூடித்தனமான அன்புக்கு அந்த மான் பலியாகிவிடக்கூடாது. பள்ளிக்கும் போகும் போதும் அறையைப் பூட்டிச் சாவியைக் கொண்டு போய் விடுகிறாய்! அதன் கழிவெல்லாம் அறைக்குள்ளேயே இருந்து நாற்றமடிக்கிறது.''


''நான்தான் காலையிலும் மாலையிலும் அறையைக் கழுவிப் பினாயில் போடுகிறேனே?''

''எவ்வளவுதான் சுத்தமாக வைத்துக் கொண்டாலும் துர்நாற்றம் அடிக்காமல் போகாது. அது உன் உடல்நலத்தையும் பாதிக்கும், மான்குட்டியின் உடலையும் பாதிக்கும்.''

''நீங்க என்ன சொன்னாலும் நான் என் மான் குட்டியை அறையை விட்டு வெளியே கொண்டு வரமாட்டேன்.''

கையில் கொண்டு வந்திருந்த அருகம்புல் கட்டையும், சோளக்கதிர் கொண்டைகளையும் எடுத்துக் கொண்டு பாலு உள்ளே சென்று விட்டான்.

அன்று என்ன காரணமோ தெரியவில்லை, மான் குட்டி அவனுடன் விளையாட மறுத்தது. அதோடு அரு




கம்புல்லையும் தின்ன மறுத்தது! பாலுவுக்குக் கவலையாக இருந்தாலும், அதைப் பெரிதுபடுத்திக் கொள்ளாது வழக்கப்படி அறையைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு போய் விட்டான்.

அம்மா பின்பக்கச் சன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். மான் குட்டி சோர்ந்து போய்க் கோணியில் படுத்துக் கிடந்தது. பக்கத்தில் பிரிந்திருந்த புல்கட்டை அது சிந்தவே இல்லை! அம்மாவுக்கு மனது கேட்கவில்லை. தெருவோடு சென்ற 'பூட்டு ரிப்பேர்' காரனைக் கூட்டி வந்து மாற்றுச் சாவி போட்டுக் கொண்டாள். அறைக் கதவைத் திறந்ததுதான் தாமதம், அடைபட்டுக் கிடந்த மான் குட்டி துள்ளி எழுந்து வந்தது. இரும்பு கேட்டைப் பலமாகத் தாளிட்ட அம்மா, 'நாலு மணி வரை உனக்குச் சுதந்திரம்தான்' தோட்டத்தில் காலாற நடந்து துள்ளி ஆடு. நாலாவது மணிக்கு அறைக்குள் அடைத்து விடுவேன். 'சமர்த்தாய் இருந்து கொள்' என்று கொஞ்சி விட்டுத் தன் வேலைகளைக் கவனிக்கச் சென்றாள்.

தினமும் இப்படியே நடந்தது. "என்னவோ அறைக்குள் அடைத்து வைத்தால் மான் ஏங்கி இளைச்சுப் போகும்னு சொன்னீங்களே! இப்ப மான்குட்டி எவ்வளவு உற்சாகமா இருக்கு, பாருங்கம்மா?" என்று பெருமைப்பட்டுக் கொண்டான் பாலு. அம்மா மனத்திற்குள் சிரித்துக் கொண்டாள்!

அன்று பாலுவின் ஆசிரியர் எல். ஐ. சி. உச்சிக்குச் சென்று பார்க்கத் தமது மாணவர்கள் சிலரை அழைத்துக்கொண்டுபோனார். பாலுவும் போனான். வரிசையாகக் 'க்யூவில்' நின்றுலிப்டில்ஏறினர். பதினான்



காவது மாடியில் நின்று பார்த்த போது சென்னை மாநகரம் முழுவதும் தெரிந்தது.

'பாலு, பைனாகுலர் எங்கே?' என்று ஆசிரியர் கேட்டார். அவனிடம் தான் அவர் அதைக் கொடுத்து வைத்திருந்தார்.

'சார், அதை என் பையில்தான் வைத்திருந்தேன். லிப்டுக்கு வருமுன் எல்லோர் பையையும் வைத்து விட்டுப் போகச் சொன்னார்களே, அதோடு தங்கிவிட்டது! இதோ டோக்கன் இருக்கிறது சார். நான் போய் அதை எடுத்துக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்று விரைந் தான் பாலு.

இறங்க லிப்டில் கூட்டமேயில்லை. பாலுவும் லிப்ட் ஆபரேட்டரும் தான். 'லிப்ட்' இறங்கியது. எட்டாவது மாடியைக் கடந்த போது 'லிப்ட்' குலுக்கலுடன் நின்றது. 'பீம்' என்று ஒரு சங்கொலி கிளம்பியது! ஆபரேட ரின் முகத்தில் பரபரப்புத் தோன் றியது. லிப்டுக்குள்ளேயே இருந்த தொலைபேசியை எடுத்துச் சுழற்றிப் பேசிவிட்டு வைத்தார்.

பயத்தால் பாலுவின் முகம் வெளுத்து விட்டது. பேச நாக்கு எழவில்லை! அழுகை வேறு தொண் டையை அடைத்தது!

''என்ன சார், லிப்ட் இப்ப டியே நின்னுடுமா? கீழே போக முடி யாதா?''

''கண்டிப்பாகப் போக முடியும் தம்பி. எப்பவாவது ஒரு முறை அதிசய மாக இப்படி ஆவதுண்டு. பத்து வரு ஷத்துக்கு முன்னால் ஒரு தடவை ஆச்சு.''

பாலுவால் பயத்தையும் அழுகை யையும் அடக்க முடியவில்லை.

''என்ன தம்பி இப்படிப் பயப் படறே! நீ என்ன தனியாவா இருக்கே? வெளிச்சம் இருக்கு, தொலைபேசி இருக்கு. பேச்சுத் துணைக்கு நான் இருக் கேன். சரி செய்ய ஏற்பாடும் நடக் கிறது. இன்னும் கால் மணி நேரத்தில் சரியாகிவிடும். இந்தா, பிஸ்கட். தண்ணீர் வேண்டுமானாலும் இருக்கு. இதோ பத்திரிகை கூட வைத் திருக்கிறேன். படி, பயப்படாதே. நீ படிக்கிற பையன். இப்படிப் பயப் படலாமா?'' என்று தட்டிக் கொடுத் தார் ஆபரேட்டர்.

அதற்குப் பிறகுதான் பாலுவுக்குச் சிறிது தெளிவு ஏற்பட்டு, தைரியம் வந்தது. பிஸ்கட்டைத் தின்று தண்ணீர் குடித்தான். பத்திரிகையைப் புரட்டி னான். அவன் மனத்தில் அவனையறியாது அறைக்குள் அடை பட்டுக் கிடக்கும் மான்குட்டியின் நினைப்புத் தோன்றியது.

அடுத்த நாள் பாலு அறைக் கதவைப் பூட்டவில்லை. பள்ளிக் குச் செல்லும் போது, ''அம்மா, மான் குட்டி தோட்டத்தில்தான் இருக்கு. கேட்டுக்கு வெளியே போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று அவன் கூறிச் சென்ற போது அம்மா வுக்கு ஒன்றும் புரியவில்லை! ஆனால் மகிழ்ச்சியாக இருந்தது.




அலிகார் பல்கலை கழகத்தை நிறுவிய சர் சையத் அகமத் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் ஏறி, ஓர் இடத்தில் அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

இதைப் பார்த்த அதே பெட்டியில் பயணம் செய்த வெள்ளைக்காரர் இருவருக் குக் கோபம் வந்தது. தங்களுக்கு நடுவில் உட்கார்ந்து விட்டானே என்ற சினத்தில், ''இவன் ஒரு கழுதை.'' என்றான் ஒருவன். ''இவன் ஒரு குரங்கு.'' என்றான் மற்றொ ருவன்.

சர்சையத் அகமத் அமைதியாக அவர்கள் இருவரையும் பார்த்துக் கூறினார், ''அவை இரண்டுக்கும் நடுவில் நான் இருக்கிறேன்.'' என்று.


'மேதைகளின் வாழ்வில் என்ற நூலிலிருந்து

ஆ. ராசேந்திரன்,
குமாரமங்கலம்.


சோணிதபுரம் நகரத்தில் பாணாசுரன் ஆண்டு வந்தான். பட்டத்தரசி ஹேமவதி...
நம் குழந்தை உஷா எங்கே...?
தோழி சித்திரலேகாவுடன் தோட்டத்தில் இருப்பாள்... அது சரி, 'குழந்தை' என்கிறீர்களே, உஷாவுக்குத் திருமண வயது...
இப்போதில்லை அவள் திருமணம்... நான் தவமிருந்து, சிவ பெருமானிடம் வரங்கள் பெற்றுத் திரும்பிய பிறகுதான்!
தவமாவது, வரமாவது? நமக்குத்தான் ஆண்டவன் எத்தனையோ பாக்கியங்களைக் கொடுத்திருக்கிறாரே, போதாதா?
ஊஹூம்... ஆயிரம் யானை பலமும், ஆயிரம் கைகளும் கேட்கப் போகிறேன்!
இவர் அகந்தை வளர்வது நல்லதில்லையே...
உஷா கல்யாணம்
கதை: ஆனந்தி
படம்: வினு


அப்போது மந்திரிவர...
கும்பாண்டனே! நான் தவமிருந்து, சக்தி பெற்று, எல்லாத் திக்கு களையும் ஜெயிக்கப் போகிறேன்! அது வரை ராஜ்யத்தை நீதி தவறாமல் நீங்கள் ஆண்டு வர வேண்டும்...
என் செங்கோலை உங்களிடம் ஒப்படைக் கிறேன்...
உங்கள் நம்பிக்கை வீண் போகாது...
பாணாசுரன் இமய மலைச் சாரலுக்குச் சென்று லிங்கம் உருவாக்கிப் பூஜித்தான்...
சிவனே சரணம்... சங்கரா சரணம்... மாதவா சரணம்... மகாதேவா சரணம்...
பல காலம் சென்றது....
ராக்ஷஸராஜனே! உன் பூஜையில் மகிழ்ந்தேன். வரம் கேள்...
ஆயிரம் யானை பலமும் ஆயிரம் கரங்களும் வேண்டும்!
தந்தேன்! மேலும் பாசுபதாஸ்திரமும் தருகிறேன்... ஆனால் ஒன்று... பெரியோர்களையும் சாதுக்களையும் துன்புறுத்தாமல் இரு...


பாணாசுரன் மகிழ்ச்சியோடு கர்வமும் அடைந்தான்...
இனி எட்டு திசைகளும் என்னைக் கண்டால் கிடுகிடுக்கும்! ஹ... ஹ... ஹா
தனியொருவனாக, பாணாசுரன் எல்லா அரசர்களையும் வென்றான்...
அபயம்! தங்களுக்கு அடங்கி நடக்கிறேன்.
திக்கெட்டும் சென்று திக்கஜங்களின் கொம்புகளை முறித்தான்!
தேவருலகம் சென்றான்...
ஹ... ஹ... ஹா பிரம்மாவும் விஷ்ணுவும் ஓடி ஒளிந்தனர்! அவர்கள்போன இடம் தெரியவில்லை!
நமக்குச் சமானமானவன் இனி சிவபெருமான் தான்! நமக்குச் சமமானவர்களுடன் போரிட்டால்தான் பெருமை!


பாணாசுரன் கைலாசம் சென்றான்...
சிவனே! என் தோள்கள் விம்முகின்றன... கரங்கள் போர் செய்யத் துடிக்கின்றன...
என்னுடன் போரிடத் தகுதியானவர் உம்மைத் தவிர வேறு யாருமில்லை!
மூடனே! உன் கர்வத்தை அடக்க ஒருவன் இருக்கிறான்... உன்னை வீழ்த்துவான் ... போ!
பாணாசுரன் பயந்து போய்...
சுவாமி! தவறு செய்து விட்டேன்... மன்னிக்க வேண்டும்... அந்தத் தேவன் எப்போது வருவான்?
உன் பாம்புக் கொடி உடைந்து விழும்போது, உன்னை ஜெயிக்கக் கூடியவன் வந்து விட்டான் என்று புரிந்து கொள்!
எனக்குக் கஷ்டம் வரும்போது, காப்பாற்ற நீங்கள்தான் வரவேண்டும். வரம் கொடுங்கள்.
நீ பக்தியுடன் அழைத்தால் நிச்சயம் வருவேன்... போய் வா!



அரண்மனையில் பாணாசுரன் மகள் உஷா...
தோழி! சித்ரலேகா! நீ பாடு; நான் ஆடுகிறேன்...
ஹேமவதி வந்து...
உஷா...நீ எத்தனை நன்றாக நடனமாடுகிறாய்!...
உன் அப்பா எனக்குக் கல்யாணம் செய்து, வைக்க வேண்டும் என்ற நினைவே இல்லாமல், மூவுலகங்களையும் ஜெயிக்கிறேன் என்று போயிருக்கிறாரே...
உஷா! உனக்கு நல்ல கணவனாக அமைய வேண்டும். கௌரி பூஜை செய்... அம்பாள் அருள்வாள்.
உஷா, பார்வதிதேவியை பக்தியுடன் பூஜித்து வந்தாள்...
தேவி! மலர்களால் உங்களை அர்ச்சிக்கிறேன். எனது ஆடல் பாடல் கலைகளாலும் உங்களையே பூஜிக்கிறேன்...


சிலகாலம் சென்று தேவி தோன்றி...
சீக்கிரத்தில் நல்ல மணாளனை அடைவாய்...
உன் கனவில் ஒரு தேவனைக் காண்பாய். அவனையே பதியாக வரிப்பாய்!
அவரை நான் எப்படி அறிவேன்?
ஒருநாள் நந்தவனத்தில்...
சித்ரலேகா! என் மனம் சோர்ந்திருக்கிறது...
தேவி கொடுத்த வரம் இன்னும் நிறைவேறவில்லையே என்றுதானே...? அவ்வளவு அவசரமா...!
இரவு...
தூக்கம் வரவில்லை... சித்ரலேகா! கொஞ்சம் வீணை வாசியேன்.
தோழி சித்ரலேகா வீணை வாசிக்கக் கண்ணயர்ந்தாள் உஷா... கனவில்...
உஷா... எனக்காகக் காத்திருப்பாயா?


உஷா திடுக்கிட்டு எழுந்தாள்...
இளவரசி என்ன ஆயிற்று...?
சித்ரலேகா! ஓர் அற்புதமான அழகனை என் கனவில் கண்டேன்!...
அவர் யார்?
அது எப்படி எனக்குத் தெரியும்? என் அருகில் வந்து அன்போடு பேசினார்...
சரிதான், தேவி கொடுத்த வரம் நிறைவேறியிருக்கிறது... ஆனால் உங்கள் உள்ளம் கவர்ந்தவரை எப்படி கண்டு பிடிப்பது?
நீதான் யோசனை கூறி உதவ வேண்டும்.
சித்ரலேகா ஓவியம் தீட்டுவதில் அபாரத் திறமை உள்ளவள்... எனவே...
இதோ பார்! இவர் கலிங்க நாட்டரசர்... இவர் அங்கதேச அதிபதி... இவர் காம்போஜ மன்னர்...
நான் கனவில் கண்டவர் இவர்கள் யாருமே இல்லை...
கவலைப்படாதே, இன்னும் சில மன்னர்களின் படங்களை வரைந்து காட்டுகிறேன்...




மறுநாள்...
இதோபார்... இவர் துவாரகா பதியான ஸ்ரீ கிருஷ்ணர்...
ஆ! கிட்டத்தட்ட இவர் சாயலில்தான் இருந்தார்... ஆனால் இவர் இல்லை... இன்னும் இளையவர்...
ஓ! அப்படியானால் இவராக இருக்கும்... இவர் கிருஷ்ணனுடைய மகன் பிரத்யும்னன்...
ஊஹூம், இவரும் இல்லை...
ஸ்ரீ கிருஷ்ணரின் சாயல் என்றாயே... அதனால் ஒருவேளை இவராய் இருக்குமோ?
அட! இவரேதான்! அவர் முகத்தை அப்படியே வரைந்து விட்டாயே!
தோழி! இவர் யார்? நீ பார்த்திருக்கிறாயா?
இவர் ஸ்ரீ கிருஷ்ணனுடைய பேரன் அனிருத்தன். மகாவீரர். அழகில் மன்மதனை விடவும் சிறந்தவர்.
சித்ரலேகா! உன் திறமை யாருக்கு வரும்!
உஷா! உனக்கு வருத்தமான செய்தி... இந்தக் கல்யாணத்துக்கு உன் தந்தை சம்மதிக்கவே மாட்டார்!




உஷா திடுக்கிட்டாள்....
ஏன்? ஏன்?
உன் தந்தை எல்லா நாடுகளையும் வென்றார். ஆனால் துவாரகையை ஜெயிக்க முடியவில்லை...
... சிவபக்தரான பாணாசுரன் உன்னைக் கிருஷ்ண பரமாத்மா -வின் பேரனுக்குக் கல்யாணம் செய்து கொடுப்பாரா?
சித்ரலேகா! நீதான் உதவ வேண்டும்... மாயா ஜாலம் அறிந்தவள் நீ...
அன்றிரவு... மாய மந்திரங்களும் பல வித்தைகளும் அறிந்த சித்ரலேகா ஆகாய மார்க்கமாகப் பறந்து...
... அநிருத்தன் அரண்மனையை அடைந்தாள்...
அநிருத்தனை எழுப்பினால் அவர் ழுதும் விழித்துக் கொள்வார். வ் வரம் கூறி அழைத்துப் போக முடியாது. எனவே....
தூங்கும் அநிருத்தனைத் தன் மந்திர சக்தியால் கட்டிலோடு தூக்கிச் சென்றாள் சித்ரலேகா...




தூங்கும் உஷாவின் பக்கத்தில் அநிருத்தனை கட்டிலில் வைத்தாள்...
உஷா விழித்தெழுந்து பார்க்கும் போது வேடிக்கை தான்!
உஷா தூக்கம் கலைந்து எழுந்தபோது...
ஆ! அந்தப்புரத்தில் ஓர் ஆண்மகன்... யார் இவர்...?
அதிகாலை சூரிய ஒளி படர...
நான் கனவில் கண்டவர் இவர் தான்... என் மனம் கவர்ந்தவர்... இது சித்ரலேகாவின் வேலைதான்...!
அப்போது சித்ரலேகா வந்து....
என்ன உஷா... சரியாகப் பார்த்துக் கொண்டாயா... இவர் தானா?
ஆமாம் சித்ரலேகா... உனக்கு எப்படி நன்றி தெரிவிப்பேன்... இதை வைத்துக் கொள்...
உனக்கு என்ன பரிசளித்தாலும் போதாது... ஆனால் இவரை இங்கு வேறு யாராவது பார்த்து விட்டால்...? ஆபத்தாயிற்றே...?
அதோ, அவர் கண் விழிக்கிறார். உபசாரம் செய்!




அநிருத்தன் உறக்கம் நீங்கி...
நான் எங்கே இருக்கிறேன்? எப்படி இங்கு வந்தேன்? பேரழகியே நீ யார்?
நான் பாணாசுரன் மகள் உஷா. பார்வதி தேவியிடம் வரம் பெற்று உங்களை அடைந்தேன்.
சித்ரலேகா செய்த காரியத்தை அறிந்த அநிருத்தன்...
அடடா! அந்தப்புரத்தில் கள்ளத் தனமாக நுழைந்ததாக என் மீது அபவாதம் வந்து விடுமே!
அதே நேரம் அந்தப்புரக் காவலர்கள்...
நமக்குத் தெரியாமல் யாரோ ஓர் ஆண்மகன் அரசகுமாரியின் அந்தப்புரத்துக்குள் புகுந்திருக் கிறானே...
உடனே அரசரிடம் போய்க் கூறி விடுவோம்...
விவரம் அறிந்த பாணாசுரன்...
என்னது! அந்தப்புரத்தில் ஆண்மகனா? கள்ளத்தனமாகப் புகுந்தானா! இதோ, நானே போகிறேன். அவனைத் தண்டிக்கிறேன்..!


பாணாசுரன் அநிருத்தனை யுத்தத்துக்கு அழைத்தான்...
அடேய்! திருட்டுப் பயலே! மரண தண்டனை பெறுகிறாயா? அல்லது போரிட்டு மடிகிறாயா?
அநிருத்தன் அந்த அறை கூவலை ஏற்றான்...
வெற்றி அல்லது வீரமரணம்! உண்மை வீரன் போரிட்டு மடிவதையே விரும்புவான்!
இருவரும் நீண்ட நேரம் யுத்தம் செய்தார்கள்...
அநிருத்தனுடைய பலத்தை உணர்ந்த பாணாசுரன்...
வேறு வழியில்லை... நாகாஸ்திரத்தைப் பிரயோகிக்க வேண்டியதுதான்...
சிவபெருமான் பாணனுக்கு அருளிய நாகாஸ்திரத்தால் அநிருத்தன் கட்டுப்பட...
உம்! இவன் கை கால்களைக் கயிற்றால் கட்டி இழுத்துப் போய்ச் சிறையில் அடையுங்கள்!




துவாரகையில் கிருஷ்ணரையும் பலராமரையும் காணவந்தார் நாரதர்...
கிருஷ்ணா! உங்கள் பேரன், பாணாசுரனின் சிறையில் இருக்கிறானே...
...உமக்குத் தெரியாதா?
என்ன! என்ன!
பாணாசுரனின் கொட்டத்தை அடக்குவோம்!
கிருஷ்ணரும் பலராமரும், படைகள் பின் தொடர, சோணிதபுரத்தை அடைந்தனர்...
அதோ! கோட்டை மீது பாம்புக் கொடி!
நாம் வந்திருப்பதைத் தெரிவிக்கக் கொடியை அடித்து வீழ்த்துகிறேன்...
கொடி மரம் ஒடிந்து சரிவதைப் பார்த்த பாணாசுரன்...
பரமேசுவரனின் சாபம் பலிக்கிறது! ஈசனே! உங்களைத் தியானிக்கிறேன். வாக்களித்தபடி என்னைக் காக்க வரவேண்டும்!



உடனே சிவபெருமான் சோணிதபுரம் புறப்பட்டு விட்டார்...
பூதகணங்களே! புறப்படுங்கள்! விநாயகா! முருகா! நந்திதேவரே! பார்வதி! எல்லாரும் கிளம்புங்கள்!
கோட்டையின் நான்கு புறமும் சிவன், பார்வதி, முருகன், விநாயகர் ஆகிய நால்வரும் பூதகணங்களுடன் காவலாக நின்றனர்...
கிருஷ்ணர், சிவனிடம் வேண்டினார்...
என் பேரனைச் சிறை வைத்திருக்கிறான் பாணாசுரன். அவன் கர்வத்தை அடக்க வந்தேன். தடுக்காதீர்கள்!
வாக்குவாதம் வலுத்தது...
என் பக்தனை நீ வதம் செய்ய நான் அனுமதிப்பேனா?
வழிவிடாவிட்டால் உங்களை வென்று கோட்டைக்குள் புகுவேன்!
இந்திரன் ஓடோடி வந்தான்... சமாதானம் செய்தான்...
நீங்கள் இருவரும் போரிட்டால் பிரளயமே வந்து விடுமே... பொறுங்கள்... சிவபெருமானே... பாணாசுரன் உங்களிடமே யுத்தம் புரிய வந்தவனல்லவா...



...அப்போது, 'எனக்குச் சமமான ஒருவன் வந்து, உன் கொட்டத்தை அடக்குவான்' என்று நீங்கள் பாணாசுரனைச் சபித்தது நினைவில்லையா? அந்தச் சாபம் நிறைவேறச் சற்றே ஒதுங்கிக்கொள்ளுங்கள்..
என் பக்தனைக் கைவிட மாட்டேன்.
உங்களைப் பூஜித்த பாணாசுரன் கரங்களைக் கிருஷ்ணர் வெட்ட மாட்டார். உங்களிடமிருந்து வரமாகப் பெற்ற ஆயிரம் கரங்களையும் ஆயிரம் யானை பலத்தையும் மட்டுமே அழிப்பார்... கண்ணா கருணை காட்டு...
அப்படியே ஆகட்டும்! பாணாசுரனை வெல்வேன்; ஆனால் கொல்ல மாட்டேன்!..
அப்படியானால் நானும் வழி விடுகிறேன்!...
கோட்டைக்குள் வந்த கிருஷ்ணரையும் பலராமரையும் பார்த்துப் பாணாசுரன் திடுக்கிட்டான்...
பாணாசுரா! அநிருத்தனை விடுதலை செய்! அல்லது, என்னோடு யுத்தம் செய்!..
பாணாசுரன் வீரத்துடன் நீண்ட நேரம் யுத்தம் புரிந்தான்...
வெட்டி வீழ்த்த வீழ்த்த, இவனுக்குக் கரங்கள் முளைத்த வண்ணம் இருக்கின்றனவே!....


பாணாசுரா! உனக்குச் சிவபெருமான் வரமாகத் தந்த ஆயிரம் கரங்களுடன், ஆயிரம் யானை பலத்தையும் இழந்தாய்... இனி எஞ்சியிருப்பவை சிவனைப் பூஜித்த இரு கரங்களே....
...அவற்றைத் துண்டிக்க மாட்டேன்.
அவற்றை உங்களைத் தொழவும் பயன்படுத்துகிறேன். ..நீங்கள் சிவனுக்குச் சமமானவர் என உணர்ந்தேன்.
பாணாசுரா! சிவபெருமானே உன் கோட்டையைக் காக்க முன்வர வேண்டுமென்றால், நீ எப்படிப்பட்ட பாக்கியசாலி! உன் தவம்தான் எப்பேற்பட்டது!
என் கர்வம் அடங்கியதும், என் மகள், பேரழகி உஷாவைத் தங்கள் பேரனுக்கு மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்...
உஷாவைப் பெருமிதத்தோடு எங்கள் குடும்ப விளக்காக ஏற்கிறோம்...
உஷாவின் கனவு பலித்தது...

THERE GOES THE LATEST ISSUE OF GOKULAM!

THE MOST SOUGHT-AFTER CHILDREN'S MAGAZINE.... RUSH FOR THE NOVEMBER ISSUE!





ஒரு மரத்துப்

12

மறந்து விடாமல் மீனாவைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு காரில் ஏறினாள் பவித்ரா.

''என்ன பவித்ரா, உங்க டிரைவர் இவ்வளவு நேரமாகியும் ஒண்ணும் பேசாமே வண்டி ஓட்டுறார்'' என்று வியந்தாள் மீனா.

பவித்ராவுக்கும் ஆச்சரியமாக இருந்தது. மீனா சொல்லித்தான் அவளும் கவனித்தாள்.

''என்ன ஆச்சு உங்களுக்கு?'' என்று கேட்டாள் பவித்ரா.

''ஒண்ணும் இல்லேம்மா!'' என்றார் டிரைவர்.

''ஏதோ ஆகியிருக்கு! இல்லேன்னா வாயைத் திறக்காமே இருக்க மாட்டுங்களே!'' என்றாள் பவித்ரா.

''என்னத்தம்மா சொல்றது? தர்ம சங்கடமுன்னு சொல்றாங்களே... அதுக்கு இப்பத்தான் எனக்கு அர்த்தம் புரியுது'' என்றார் டிரைவர்.

''என்ன புரிந்தது? தர்மசங்கடம் என்றால் என்ன அர்த்தம்?'' என்று திருத்தமாகக் கேட்டாள் பவித்ரா.

''அது வந்தும்மா.... ஊஹூம்.. அது உனக்கு வேண்டாம்'' என்றார் டிரைவர்.

பவித்ரா விடவில்லை.

''சின்னம்மா... இந்தக் காரிலே உன்னைத் தவிர வேறு யாரையும் கூட்டிக்கிட்டு வர வேண்டாமுன்னு அம்மா சொல்றாங்கன்னு வச்சிக்குவோம். நீ உன் சிநேகிதியைக் கூட்டிக்கிட்டுப் போகணும்னு சொல்றே. அம்மா சொல்லியிருப்பது உனக்குத் தெரியாது. இப்போ, நான் உன் பேச்சைக் கேட்கலேன்னா உனக்குக் கோபம்... அம்மா பேச்சைக் கேட்கலேன்னா அம்மாவுக்குக் கோபம்.. இதுக்கு இடையிலே நான் தவிக்கிறேன்னு வச்சிக்குவோம். இப்படி ஒரு நிலைமைதான் தர்மசங்கடமுன்னு நான் புரிஞ்சிக்கிட்டேன்'' என்றார் டிரைவர்.

அவர் அவ்வாறு கூறியதும் மீனாவின் முகம் மாறி விட்டது., அதை முன் பக்கமிருந்த 'ரியர் வியூ' கண்ணாடியில் பார்த்துத் தெரிந்து கொண்டார் டிரைவர்.

''சும்மா... நான் ஒரு பேச்சுக்குச் சொன்னேன்மா'' என்றார் அவர்.


''டிரைவர்...! மொத்தத்திலே எங்களைச் சங்கடப்படுத்தி விட்டீர்கள்'', என்றாள் பவித்ரா.

''இல்லேம்மா... எனக்குப் புரிஞ்ச அளவிலே அர்த்தத்தைச் சொன்னேன். அவ்வளவுதான்! பெரியம்மா ஒண்ணும் அப்படியெல்லாம் சொல்லலே. பார்த்தீங்களா...! படிக்காதவன் ஏதோ விளக்கம் சொல்றதா உளறிக் கொட்டி, உங்க மனசைக் குழப்பிட்டேன்'' என்று வருந்தினார் டிரைவர்.

''அது போகட்டும் மீனா. இந்த மூன்று நாளிலே ஏதாவது முக்கியமான நிகழ்ச்சிகள் நம்ம வகுப்பிலே நடந்ததா?'' என்று பேச்சை மாற்றக் கேட்டாள் பவித்ரா மீனாவை.

''ஆங்! நடந்ததே ஒரு விஷயம். உனக்குத் தெரியாது இல்லே? சயின்ஸ் மிஸ் சாந்தி, பரிசோதனை செய்து காட்டிக்கிட்டிருந்தாங்க. அப்போது மேனகா மிஸ் வந்து, ஒரு நூறு ரூபாய் நோட்டை அவங்க கையிலே கொடுத்திட்டுப் போனாங்க. வகுப்பிலிருந்த நாங்க எல்லோரும் அதைப் பார்த்தோம். ஆனால், அடுத்த அரை மணி நேரத்திலே அந்த நோட்டு காணாமல் போயிட்டது!'' என்றாள் மீனா.

பறவைகள்



''என்னடி இது ஆச்சரியம்!'' என்று திடுக்கிட்டுக் குறுக்கிட்டுக் கேட்டாள் பவித்ரா.

''ஆச்சரியமாய்த்தான் இருக்கு! சயின்ஸ் மிஸ் சாந்தி வாங்கிப் பையிலே வச்சிக்கிட்டாங்களாம். டீச்சர்ஸ் ரூமுக்குப் போய்ப் பார்த்தால் பணத்தைக் காணலையாம்! தேடிப் பார்த்திட்டு மறுபடியும் நம் வகுப்புக்கு வந்தாங்க. அப்போது ஆங்கிலம் நடந்து கொண்டிருந்தது. சேரின் கீழே, மேஜையின் மேலே, பிளாக் போர்டு பக்கம் எல்லாம் எதையோ தேடினாங்க. அந்த டீச்சர் என்ன தேடறீங்கன்னு கேட்ட போது தான் விஷயத்தைச் சொன்னாங்க. எங்களுக்கெல்லாம் அவமானமாப் போயிட்டது... தெரியுமா?''

''ஏன்...? அவர்கள் எங்காவது வெளியிலே விட்டு விட்டிருக்கலாம். நம்ம வகுப்பிலேதான் தொலைந்து போயிருக்க முடியுமா என்ன? கண்டெடுத்தால், நாம் திருப்பிக் கொடுத்திருக்க மாட்டோமா?'' என்று கேட்டாள் பவித்ரா.

''சயின்ஸ் மிஸ்ஸுக்கு அப்படியெல்லாம் நம் மீது சந்தேகம் இல்லை. ஆனால் எப்படித் தொலைந்தது என்றுதான் அந்த டீச்சருக்கும் புரியல்லே... எங்களுக்கும்தாம்... யாருக்கும் புரியல்லே...''

''மந்திர தந்திர, மாயா ஜாலம் போல அல்லவா இருக்கு?'' என்று வியப்பும் வேதனையும் அடைந்தாள் பவித்ரா.

இதிலே ஒரு விஷயம். பணத்தைத் தொலைத்து விட்ட சயின்ஸ் டீச்சர் நம்ம வகுப்பிலே யாரையும் சந்தேகிக்கலே...! இந்தக் கணக்கு டீச்சர் தான்... இங்கேதான் தொலைஞ்சிருக்கணும். நீங்கதான் யாரோ நைசா எடுத்துக்கிட்டிருப்பீங்க. மேஜை பக்கம் யார் வந்தது? போர்டு பக்கம் யார் நின்னது? டீச்சர் எக்ஸ்ப்ரிமெண்ட் பண்றச்சே யார் யார் நெருக்கமாய் நின்னுக்கிட்டிருந்தது.. அப்படி இப்படின்னு கேட்டுத் துருவி எடுத்திட்டாங்க, எங்களை!''

''அந்த மிஸ்ஸுக்கு எப்பவுமே சந்தேகந்தான். யாராவது சரியாகக் கணக்கு போட்டுக் காட்டினால், யாரைப் பார்த்துக் காப்பி அடிச்சேன்னு கேப்பாங்க. தன் கையிலே கடியாரத்திலே நேரம் பார்த்திட்டு, உன் நேரம் என்னன்னும் என்னைக் கேட்பாங்க! அவங்களுக்கு எதிலுமே டௌவுட்தானே!' என்று வெறுப்பைக் கொட்டினாள் பவித்ரா.

''இன்னும் கேளு... இந்த வகுப்பலேதான் நூறு ரூபாய் தொலைஞ்சிருக்கு. அதனாலே... எடுத்தவங்க தரல்லேன்னா வகுப்புக்கு வந்திருக்கிற முப்பத்தேழு பேரும் சமமா போட்டு இரண்டு நாளிலே பணத்தைக் கொடுத்திடணுமின்னு சொல்லிட்டாங்க. எங்களுக்கெல்லாம் ஒரே அவமானமா ஆயிட்டது. சில பேரு... அழவே ஆரம்பிச்சிட்டாங்க. பணம் தரணுமே அதுக்காக இல்லே. பழி வந்திட்டதேன்னுதான்!''

''சே... இப்படியா கெட்ட பேர் வரணும்... நம்ம வகுப்புக்கு. இருந்தாலும் கணக்கு மிஸ் நம்ம வகுப்பை இவ்வளவு கேவலமாக நினைக்கக் கூடாது'' என்றாள் பவித்ரா.

'ஓஹோ! இதைத்தான் நாளைக்கு ஓர் அதிர்ச்சி நமக்கெல்லாம் காத்திருக்குன்னு தமிழ் டீச்சர் குறிப்பிட்டாங்களோ?' என்று தனக்குள் முனகிக் கொண்டாள். அதைப் பற்றி

பூவை அமுதன்

மீனாவிடம் அவள் ஏதும் சொல்லவில்லை.

அதற்குள் கார் போர்டிகோவிற்குள் வந்து நின்றது. இருவரும் இறங்கினார்கள். மீனா தயங்கித் தயங்கித் தான் அவள் பின்னே சென்றாள்.

'உள்ளபடியே பவித்ராவின் தாய் டிரைவரிடம் அப்படிச் சொல்லியிருப்பார்களோ?' என்ற சந்தேகம் அவளுக்குள் இலேசாக எழுவதும் விழுவதுமாகவே இருந்தது.

ஹாலுக்குச் சென்று சோஃபாவில் அமர்ந்தாள்.

"மீனா...! இதோ வந்து விட்டேன். முதலில் ஏதாவது வயிற்றுக்குப் போடுவோம். அப்புறமா... கணக்கைப் போடுவோம்" என்று எழுந்து சென்றாள் பவித்ரா.

சில நிமிடங்களில் ஆடைகளை மாற்றிக் கொண்டு வந்த பவித்ரா, தன் கண்களையே நம்ப முடியாமல் தவித்தாள். ஹாலுக்குள் சந்தோஷ் வந்து கொண்டிருந்தான். அவளுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

"ஹாய் சந்தோஷ்! என்ன திடீரென்று...?" என்று கேட்டுக் கொண்டே அவன் எதிரே துள்ளி ஓடினாள்.

"சந்தோஷ்! இது என் ஃப்ரெண்டு!" என்று மீனாவை அறிமுகம் செய்தாள்.

"அது என்ன.... இது? என்னதான் டியரஸ்ட் ஃபிரண்டாயிருந்தாலும் அது இதுன்னு அஃறிணையிலே சொல்லக் கூடாதும்மா" என்று சிரித்துக்கொண்டே சொல்லி விட்டு, "ஐ ஆம் சந்தோஷ் குமார், செகண்ட் இயர் பி.காம்....." என்று அவன் மேலே தொடர்வதற்குள்,

"பி.காம்! நான் மீதியைச் சொல்கிறேன் மீனா! இவன்தான் என் அண்ணன் சந்தோஷ்!" என்று சிரித்தாள் பவித்ரா.

"என்னதான் அண்ணன் மேலே ஆசையோ அன்போ இருந்தாலும்... அவன் இவன் என்று சொல்லக் கூடாதும்மா", என்று சிரித்தாள் மீனா. அவர்களுக்கும் சிரிப்பு வந்து விட்டது.

மூவரும் சிரித்து முடிப்பதற்குள் உதயா அங்கே வந்து விட்டாள். அவள் கையிலே கார் சாவிக்கொத்து சுழன்று கொண்டிருந்தது. அவர்களை அங்கே கண்டதும் அவள் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று விட்டாள். அவள் முகமே மாறி விட்டது. கறுப்புக் கண்ணாடியைக் கழற்றி டீபாயின் மேல் வீசினாள். அது அங்கிருந்து எம்பிக் குதித்து சோஃபாவில் போய் விழுந்தது!

"உஷ்... அப்பாடா! ஒரே எரிச்சல்...! என்னமா தகிக்கிது?" என்று மேலே சுழன்று கொண்டிருந்த மின் விசிறியைப் பார்த்தாள். பவித்ராவுக்கும் உள்ளே எரிந்தது.

சந்தோஷ் வந்திருக்கிறான். தன் சிநேகிதி மீனா வந்திருக்கிறாள். ஒரு பேச்சுக்குக் கூட ஏதும் கேட்கவில்லை. கேட்கா விட்டாலும் கூடப் பரவாயில்லை. சிம்பிளா ஒரு ஸ்மைல்... அது கூட இல்லையே! பொன்னா... பொருளா? சின்ன புன்னகைக்குக் கூடவா பஞ்சம்? சந்தோஷ் என்ன நினைத்துக் கொண்டாலும் பரவாயில்லை. இந்த மீனா...? புத்தி கூர்மையான பெண்... இந்த அலட்சியம் அவளுக்குப் புரியாதா? 'தாயைப் போல் பிள்ளை... நூலைப் போல் சேலை' என்ற வாசகத்துக்கு இங்கே எதிர்மாறான பொருள்தான் போலும் என்று எண்ணிக் கொள்ள மாட்டாளா? பவித்ராவின் உள்ளம் குமுறியது; விம்மியது!

"அம்மா! அண்ணன் வந்திருக்கான். என் ஃபிரெண்ட் வந்திருக்கா. நல்லவேளை நீயும் வந்திட்டே. ஏதாவது சாப்பிடக் கொடுக்கச் சொல்லுங்கம்மா. வேலைக்காரனைக் காணோமே...?" என்றாள் பவித்ரா.

"ஆங்.. ஆங்... எனக்கு என்ன கண்ணா தெரியல்லே? நானும் இப்பத்தானே வந்தேன்? நீயே போய் சமையல் கட்டிலிருந்து கொண்டு வரக் கூடாதா?" என்று விடுவிடுவென்று பேசினாள் உதயா.

மீனா நெருப்பின் மேல் இருப்பதைப் போல் தவித்துக் கொண்டு அமர்ந்திருப்பதைப் புரிந்து கொண்டாள் பவித்ரா.





"கணக்கையும் பாடங்களையும் சீக்கிரம் எழுதிக்கோ பவித்ரா. நான் போகணும்..." என்றாள் மீனா.

"ஏன் நீயும் பறக்கிறே!" என்று சற்றுச் சிடுசிடுப்பாகவே கேட்டாள் பவித்ரா. அவள் கோபம் யார் மீது என்று அவளுக்கு நன்றாகவே தெரிந்தது.

யோசித்துக் கொண்டே சமையல் அறையின் பக்கம் பார்வையைச் செலுத்தினாள். அங்கே வேலைக்காரி வந்திருப்பதாகத் தோன்றியது.

"கமலம்மா! நீங்க உள்ளேதான் இருக்கீங்களா? எனக்கும் என் சிநேகிதிக்கும் பலகாரம் கொண்டு வாங்க. சந்தோஷ் அண்ணனும் வந்து ரூமிலே இருக்கான். அவனுக்கும் கொண்டு போங்க" என்று கூவினாள்.

"சரிம்மா" என்று குரல் கேட்டது. அந்தக் குரலைக் கேட்டதும் பத்திரிகையிலிருந்து பார்வையைத் திருப்பினாள் மீனா.

"பலகாரமும் வேண்டாம். சிலகாரமும் வேண்டாம். நான் சீக்கிரம் போகணும்..." என்று அவசரமாக எழுந்து கொண்டாள் மீனா.

"ஆமாம்... நீ போய்த்தானே இராத்திரிக்குச் சமைக்கணும்?" என்று கிண்டல் செய்தாள் பவித்ரா.

"உண்மையே அதுதான். தினமும் இரவுச் சாப்பாடு நான்தான் செய்யணும்..."

"ஏன்... வீட்டிலே யாரும் இல்லையா? எனக்கு எங்கே நீ இதெல்லாம் சொல்லியிருக்கே..?" என்று கடிந்து கொண்டாள் பவித்ரா. மீனா மௌனமாக, ஏதோ யோசித்துக் கொண்டு குழப்பமடைந்தவள் போல் காணப்பட்டாள்.

"ஓகோ! 'தோழனோடும் ஏழைமை பேசேல்' அப்படின்னு படித்ததை ஞாபகம் வச்சிருக்கே போலிருக்கு. ஆமாம்... தோழனோடு தான் பேசக் கூடாதுன்னு சொல்லியிருக்காங்க. தோழியோடு பேசலாம்" என்று சிரித்தாள் பவித்ரா. அவள் சிரிக்க முயல்வதைப் புரிந்து கொண்டாள் மீனா.

சீக்கிரம் சீக்கிரமாக, கணக்கு நோட்டைப் பிரித்தாள். அறிவியல் நோட்டை எடுத்தாள்.

"தேதி போட்டு எழுதியிருக்கேன். நீ பார்த்து எழுதிக் கொள். உன் அண்ணன்தான் இருக்காரே. சந்தேகம் இருந்தால், அவரைக் கேட்டுக் கொள்ளேன்" என்று எழுந்து விட்டாள் மீனா.

"கொஞ்சம் இருந்து சொல்லிட்டுப் போ தாயி! ரொம்பத்தான் பிகு பண்ணிக்காதே" என்று அவள் கையைப் பிடித்து இழுத்துப் பலவந்தமாகத் தன் பக்கத்தில் அமர வைத்தாள்.

அப்போது ஒரு டிரேயில் வைத்து மூடிய டிபன் தட்டுகளோடு அங்கே வந்தாள் கமலம்மாள். அவள் பார்வை மீனாவின் மீதே பதிந்திருந்தது.

"என்ன கமலம்மா அப்படிப் பார்க்கறீங்க? இவள் என் ஃபிரெண்டு மீனா!" என்று கமலம்மாவுக்குச் சொல்லி விட்டு,

"மீனா... இவங்க எங்க வீட்டிலே சமையல் கம்... மற்ற வேலைகள்..." என்று ஏதோ சொல்வதற்குள் அவள் வார்த்தை பூர்த்தியாகாமல் நின்று விட்டது.

மீனாவும் கமலம்மாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஏதோ பெரிய அதிர்ச்சிக்கோ, ஆச்சரியத்துக்கோ ஆளாகி விட்டவளைப் போல.

"யார் யார் எது எது எங்கேயிருக்கணுமோ அங்கங்கேயிருக்கணும்மா! இடம் மாறிப் போயிடக் கூடாது...! சாப்பிடுங்கம்மா" என்று சொல்லி விட்டுப் பதைபதைப்புடன் அங்கிருந்து போய் விட்டாள் கமலம்மா. அவள் என்ன சொல்கிறாள்... யாருக்குச் சொல்கிறாள்? புரியவில்லை பவித்ராவுக்கு. மீனாவுக்குப் புரிந்தது போல் இருந்தது.

"கமலம்மா... ரொம்ப நல்லவங்க

"ஒரே கணக்கைக் கம்ப்யூட்டருக்கும் என் பையனுக்கும் ஒரே நேரத்தில்கொடுத்தேன். என் பையன் முன்னே செய்து முடிச்சுட்டான்."

"ஆச்சரியமா இருக்கே?"

"இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கு? கரண்ட் இல்லாததால் கம்ப்யூட்டர் வேலை செய்யவில்லை!"

— உதய்.

தெரியுமா? அவங்க எதைச் சமைத்தாலும்... எப்படிச் சமைத்தாலும் எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கும். என்று அவள் மேலும் பல சொல்லிக் கமலம்மாவை மிகவும் புகழ்ந்தாள்.

இருவரும் கைகளை அலம்பிக் கொண்டு சோஃபாவுக்குத் திரும்பினார்கள்.

ஒரு டிபன் தட்டைப் பவித்ராவே எடுத்துக்கொடுத்தாள். மீனா ஏதோ பேச வாய் எடுத்தாள்.

"வாயைத் திறக்காம சாப்பிடடி!" என்று அதட்டினாள் பவித்ரா.

மீனாவுக்குச் சிரிப்பே வந்து விட்டது. "வாயைத் திறக்காமல் நீ சாப்பிட்டுக் காட்டு" என்று கூறினாள் மீனா.

அப்போது சமையற்கட்டில் ஏதோ சத்தம் கேட்டது. மீனா அந்தப் பக்கம் பார்வையைச் செலுத்தினாள். அங்கே கமலம்மாள் ஏதோ செய்யக் கூடாததைச் செய்து விட்டுத் தவித்துக் கொண்டிருப்பவள் போல் பதற்றத்துடன் நின்று கொண்டிருந்தாள். அதைப் பார்த்துப் புரிந்து கொண்டாள் மீனா. அவள் உள்ளத்தில் ஒரு பெரிய போராட்டமே உருவாகி விட்டது. தன்னையறியாமல் லட்டைப் பிசைந்து மிக்சரோடு சேர்த்து விரல்களால் கிளறிக் கொண்டிருந்தாள்.

"ஏய்... ஏய்...! என்னது இது..? சாப்பிடச் சொன்னா உன் பாட்டுக்குக் கலந்து பிசைஞ்சிக்கிட்டிருக்கே!" என்று கேட்டுத் தன் முட்டியால் அவள் தோளில் இடித்தாள் பவித்ரா.

அப்போது மீனா தன் கையில் வைத்திருந்த தட்டைத் தவற விட்டு விட்டாள். சத்தம் கேட்டு உதயா தன் அறையை விட்டு வெளியே வந்தாள். மீனாவையே பார்த்துக் கொண்டிருந்த கமலம்மாவுக்குத் தவிப்பு மேலும் அதிகமாகி விட்டது.

வேக வேகமாக அவர்கள் இடத்துக்கு வந்து கொட்டிக் கிடந்ததை எல்லாம் துடைத்தெடுத்துக் கொண்டு, "செய்யக் கூடாததை எல்லாம் செய்யக் கூடாதும்மா!" என்று முணுமுணுத்தாள் கமலம்மா.

"தவறுவது சகஜம்தானே!" என்றாள் பவித்ரா.

"நிலைமைக்கு ஏற்ற நினைப்பு இருந்தால், எதுவும் தவறாது பவித்ரா. நான் புறப்படறேன்..." என்று சொல்லி விட்டு அங்கிருந்து போகத் துடித்தாள் மீனா.

பவித்ரா அவள் கையைப் பிடுங்கித் தன் கையில் வைத்துக்கொண்டு, "சரி போ.. டிஃபன் காப்பி எல்லாம் சாப்பிட்டிட்டுப் போ!" என்றாள்.

"போகட்டுமே அம்மா. போற பொண்ணை ஏன் தடுக்கறீங்க?" என்றாள் கமலம்மா.

"கமலம்மா. இது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம். நீங்க போய், வேற டிபன் கொண்டு வாங்க" என்று அவளைச் சீறினாள் பவித்ரா.

கமலம்மா ஒரு கணம் மீனாவின் முகத்தை முறைத்துப் பார்த்து விட்டு ஏதோ முணுமுணுத்துக் கொண்டே அங்கிருந்து சென்றாள். மீனாவின் கண்களில் நீர் முட்டிக் கொண்டு நின்றது. கண்களைத் துடைத்துக் கொண்டு, கமலம்மாவைப் பார்த்தாள்.

அப்போதுதான் திரும்பிப் பார்த்த கமலம்மா, அங்கிருந்தபடியே கையையும் தலையையும் அசைத்து ஏதோ சைகை செய்தாள் மீனாவுக்கு. மீனாவும் தன் தலையை அசைத்து ஏதோ குறிப்பாகத் தெரிவித்தாள்.

அவர்கள் நடத்திய அந்த ஊமை நாடகத்தை, அவர்களுக்குத் தெரியாமலே கவனித்து விட்டாள் உதயா. "பவித்ரா!" என்று ஓர் அதட்டல் குரல் கொடுத்தாள். அந்தக் குரல் மாடியில், அறையிலிருந்த சந்தோஷையும் உலுக்கி விட்டது.

(தொடரும்)


பயிற்சியே இல்லாம ஓட்டலாம்னு சொல்றியே- எதைடா சோமு...?
ஈயைத் தான்...!
ஒரு வாழைப்பழம் என்ன விலை...?
ஐம்பது பைசா...!
பத்து பழம் வாங்கினால்...?
அப்போதும் ஐம்பது பைசா தான்...
இந்தாங்க ஐம்பது பைசா, பத்து பழம் கொடுங்க...
?
தினமும் உங்க அப்பாவோட கடற்கரைக்குப் போறியே... தின் காத்து வாங்கவா...?
இல்லை... சுண்டல் வாங்க...!
எங்க அப்பா செய்யும் வியாபாரம் பயங்கரமான சிக்கல்டா...!
அப்படி என்ன வியாபாரம்டா அது...?
நூல் வியாபாரம் தான்...
சிரிப்பு....
நீ பரீட்சை எழுதாமல் பின்னால் உள்ள பையனை பார்க்கிறாயே... காப்பி அடிக்கவா?
இல்லே சார்! கேள்வித் தாளில் 'பின்பக்கம் பார்க்க' என்று போட்டிருந்தது அதனால் தான்!
எஸ். யோகலிங்கம்
எவரெஸ்ட் சிகரம் எங்கே இருக்கிறது தெரியுமா?
தெரியாது சார்!
அப்போ பெஞ்சு மேல் ஏறு!
பெஞ்சு மேல ஏறினா எவரெஸ்ட் சிகரம் தெரியுமா சார்?

ஸைக்கிள் டயரே வாழ்க!

பாடங்களை அவசரம் அவசரமாக மனனம் செய்து கொண்டிருந்தான் கோபி. ஐயோ! இன்னும் ஒரு பாடம்பாக்கியிருக்கிறதே! கோபியின் கண்கள் கடிகாரத்தைப் பார்த்தன. நேரம் ஒன்பதை நெருங்கி விட்டது! கடவுளே! நேரமாகி விட்டதே!

''கோபி... குளிச்சுட்டு, சாப்பிட வாப்பா!''– அம்மாவின் அன்பான குரல் கேட்டது.

'சும்மா இரும்மா. குளியலும், சாப்பாடுமா முக்கியம்? எனக்குப் பாடம் முடிக்கலையேன்னு பதறது...'' எரிந்து விழுந்தான் கோபி.

''அப்பப்ப நடத்தறதை அப்பவே படிச்சா...'' அம்மா ஆரம்பிப்பதற்குள்.

''கொஞ்ச நேரம் சும்மா இருக்கியாம்மா? என் அவசரம் புரியாம அறுக்காதே!'' — கத்திவிட்டு மீண்டும் படிக்கத் துவங்கினான்.

அரைகுறையாக முடித்து, ஒன்பதரைக்குக் குளித்து, சாப்பிட்டதாகப் பேர் பண்ணிக் கொண்டு பள்ளிக்கு ஓடினான் கோபி.

கோபி பள்ளிக்குள் நுழைந்து, தன் வகுப்பறைக்கு வந்த போது, தேர்வு துவங்கச் சில நிமிடங்களே இருந்தன. எல்லா மாணவர்களும் ஏற்கனவே குழுமியிருந்தார்கள். பரபரவென்று புத்தகங்களைப் புரட்டிக் கொண்டும் படித்ததை ஒப்புவித்தும் பார்த்துக்கொண்டிருந்த அவர்களைக் கண்டதும், படித்ததெல்லாம் மறந்து விட்டதைப் போல் உணர்ந்தான் கோபி.

சுந்தர் மட்டும் அமைதியாக நின்று கொண்டிருந்தான். 'சே! இவனுக்கு மட்டும் டென்ஷன் இருக்காதா!' என்று பற்றிக் கொண்டு வந்தது கோபிக்கு.

மணியடித்தது. மாணவர்கள் புத்தகங்களை வைத்துவிட்டு அறையினுள் நுழைந்தனர்.

கோபி பரபரப்பாய் வினாக்களின் மீது பார்வையைப் படரவிட்டான். எல்லாமே படித்த வினாக்கள் போலத் தோன்றவே, நிம்மதியாய்ப் பேனாவைத் தொட்டான்.

ஆனால்.... எழுதத் துவங்கியதும் எந்த விடையையும் அவனால் முழுமையாக எழுத முடியவில்லை. பாதிக்கு மேல் மறந்து போயிற்று! நினைவு படுத்திக் கொள்ள முயன்று தோற்றுப் போனான்.

அரைகுறையாகவிடைகளை எழுதி முடித்துப் பேப்பரைக் கட்டித் தந்து விட்டு நிம்மதியின்றி வெளியே வந்தான்.

வீட்டுக்குப் போகவே பயமாயிருந்தது. 'அரையாண்டுத் தேர்விலும் பெயிலானால் உனக்கு இனி ஒரு வேளை தான் சாப்பாடு, ராஸ்கல்' என்று சென்ற முறையே அப்பா அடித்தது நினைவுக்கு வந்தது. இதோ... அரையாண்டுத் தேர்வு துவங்கி, தமிழ் முதல் தாள் எழுதியாகி விட்டது. பாஸாவோமா...! படித்ததெல்லாம்மறந்துபோயிற்றே..!

அடுத்து வந்த தேர்வுகளும் இப்படித்தான். அம்மாவும், அப்பாவும் கேட்டபோது மட்டும் அப்போதைக்குத் தப்பிக்க, 'நல்லா எழுதியிருக்கேன். நிச்சயம் அறுபது மார்க் வரும்' என்று சொல்லி வைத்தான்.

வரலாறு, புவியியல் தேர்வு முடிந்

கிருஷ்ணப் பிரியா



இதோ ஒரு புதல்வன்

சுதந்திர தின விழாக் கொண்டாட்டம் முடிந்து இரு நாட்களாகி விட்டன. பள்ளி முகப்பில் தொங்க விடப்பட்ட வண்ணத் தோரணங்கள் மறைந்து விட்டன.

வேகமாய் மைதானத்தில் நடந்து வந்த விவேக் நின்றான். கீழே கிடந்த அதை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டு விரைந்து நடந்தான்.

''விவேக் நில்லு'' என்றது வகுப்பு ஆசிரியரின் குரல்.

''என்னமோ கீழே கிடந்து எடுத்தியே. அது என்ன?''

''ஒன்றுமில்லை சார்'' என்றான் பதட்டமாக.

''பொய்யா சொல்றே. நான் உன் பின்னாலேயே வரேன்; நீ எடுத்ததைப் பார்த்தேன். இரு இரு. முதல்லெ பையை இப்படிக் கொடு'' வெடுக்கென்று பிடுங்கினார் ஆசிரியர்.

''இதென்னடா. நம்ம தேசியக் கொடியைப் போய் இப்படிக் கிழிச்சுக் கசக்கி அடைச்சு வச்சிருக்கே! எப்படிக் கொடியை மதிக்கணும் என்று அன்னைக்கு மாஸ்டர் சொன்னார்லெ?'' என்றார் ஆசிரியர்.

''சார். எல்லாரும் ஆகஸ்டு 15ம் தேதி அன்னிக்கு மட்டும் அவங்கவங்க சட்டையில் அழகா குத்திட்டு வர்றாங்க. அடுத்த நாளே கீழே கிழிச்சோ, கசக்கியோ, பொறுப்பில்லாம போட்டுடறாங்க. நம் தேசியக் கொடி தெருவில் கிடந்து, நம் செருப்பு அதனை மிதிக்கும்படி விடலாமா? அதனாலதான் நான் யாரும் அவற்றை மிதித்து, கொடிக்கு இழிவு செய்து விடக் கூடாது என்று அவற்றைப் பொறுக்கிச் சேர்த்து வைத்திருக்கிறேன்.''

ஆசிரியர் விவேக்கைத் தட்டிக் கொடுத்தார் நிம்மதியாக. இனிக் கவலையில்லை. பாரதத் தாய்க்கு ஒரு புதல்வன் இதோ இருக்கிறான்!

— ஆர். எல். நிர்மலா, மதுரை — 20.

ததும் விடுமுறை அறிவித்தார்கள். பத்து நாட்கள் விடுமுறை. அப்பாடா என்றிருந்தது கோபிக்கு.

மறுநாள், அவன் அம்மா பக்கத்து ஊரில் இருக்கும் சித்தி வீட்டிலிருந்து சில பொருட்களை வாங்கி வரச் சொன்னார். தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு பத்து மணி வெயிலில் உல்லாசமாய்க் கிளம்பினான் கோபி.

சித்தி தந்த பொருட்களை இரண்டு பெரிய பைகளில் போட்டுக் கொண்டு பாடிய படியே சைக்கிளை மிதித்தான். தேர்வு ஜுரம் போய்விட்டது. இனி அடுத்த தேர்வில் பார்க்கலாம் என்ற அலட்சியம்.

''படார்!'' சத்தம் கேட்டுத் ''சை! சைக்கிள் டயர் வெடித்து விட்டது.'' அலுப்புடன் நிறுத்தி இறங்கினான் கோபி. இன்னும் நான்கு தெருக்களைக் கடக்க வேண்டும். எப்படித் தள்ளிக் கொண்டே போவது?.... கையிலே கனம் வேறு.

''அடடா..!''—எதிரேயிருந்த வீட்டிலிருந்து வெளியே வந்த சுந்தர், 'சைக்கிள் பஞ்சரா? இதுதான் எங்க வீடு. உள்ளேவா', என்று உள்ளே அழைத்துப் போனான். பெற்றோரிடம் அறிமுகப்படுத்தி விட்டுத் தன்னறைக்கு அழைத்தான். சுந்தர் குடும்பம் அந்த ஊருக்கு வந்து ஐந்து மாதம் தான் ஆகிறது. அவன் அப்பாவுக்கு ஊர் ஊராக மாறவேண்டிய வேலை. ஆனாலும், பள்ளியில் சேர்ந்த சில நாட்களிலேயே ஆசிரியர்களிடம் நற்பெயர் வாங்கி விட்ட சுந்தர் காலாண்டுத் தேர்வில் வகுப்பில் முதலாவதாகவும் தேறியிருந்தான்.

சுந்தரின் அறை சிறியதாக இருந்தாலும் சுத்தமாக இருந்தது. மேசையின் மீது நோட்டும் பேனாவும் விரித்த நிலையில் இருந்தன.

''என்ன சுந்தர், லீவில கூடவா படிக்கிறே!'' என்று வியப்புடன் கேட்டான் கோபி. ''ஆமாம், கோபி! இதுவரை நமக்கு நடந்த தேர்வுகளின் வினாத் தாள்களைத் தொகுத்து வைத்தேன். அதிலிருந்து கஷ்டமான கேள்விகளுக்கு விடை எழுதிக் கொண்டிருந்தேன்,'' என்றான் சுந்தர்.

''சரி. அதைப் பிறகு செய்தாலென்ன? இந்தப் பத்து நாள் லீவைக்



கூட விளையாடி அனுபவிக்காமல், இப்போதுமா படிக்க வேண்டும்?'' — அலுப்புடன் கேட்டான் கோபி.

''நீ சொல்வது வியப்பாக உள்ளது கோபி. பள்ளி திறந்து விட்டால் அன்றையபாடங்களைப் படிக்கத் தான் நேரமிருக்கும். மேலும், இதை யெல்லாம் இப்பவே செய்தால்தான் ரிவிஷன் தேர்வுக்கும் பயன்படும். பொதுத் தேர்விலே நல்ல மதிப்பெண் வாங்க வேண்டாமா? அதோடு, நான் விடுமுறையில் எல்லா நேரமுமா இதைச் செய்கிறேன்! தினமும் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம்தானே! மற்ற சமயங்களில் பொழுது போக்குத் தானே? மாணவர்களான நமக்கு எப் போதும் படிப்பில் தானே கவன மிருக்க வேண்டும்?'' — பெரிய உரையே நிகழ்த்தினான் சுந்தர்.

தாமதமாகப் பள்ளியின் சேர்ந்தா லும் சுந்தர் முதல் ரேங்க் வாங்கும் மர்மம் இப்பொழுது புரிந்தது கோபிக்கு. கடைசி நேரத்தில் பறந்து படித்து எல்லாம் மறந்து போய்த் தான் தவிப்பதற்குக் காரணம் தன்னு டைய சோம்பேறித் தனம் தான் என்பதை கோபி உணர்ந்தான்.

இதற்குள் காப்பி வந்தது. அதை அருந்தி விட்டு, தான் கொண்டு வந் திருந்த பைகளை சுந்தரின் வீட்டில் வைத்து விட்டுப் பிறகு வந்து எடுத்துக் கொள்வதாகச் சொல்லிவிட்டுச் சைக்கிளைத் தள்ளியபடி நடந்தான் கோபி.

வீட்டுக்குப் போனதும், பழைய வினாத்தாள்களைத் தேடித் தொடுக்க வேண்டும். எப்படியும் பொதுத் தேர்விலே நல்ல மதிப்பெண் பெற வேண்டும் என்று உறுதியெடுத்துக் கொண்ட கோபி, சுந்தருக்கும். தன் சைக்கிள் டயருக்கும் மனதுக்குள் நன்றி சொல்லிக் கொண்டான்!

வேண்டுகிறோம்

வண்ண வண்ணப் பறவைகள்
வானில் பறக்குது;
சின்னச் சின்னப் பறவைகள்
சிறிப் பறக்குது.

சிறிய சிறிய பறவைகள்
சிரித்துக் கூடுது.
பெரிய பெரிய பறவைகள்
பாட்டுப் பாடுது.

சின்னச் சின்னச் சிறுவர்கள்
சிரித்து ஆடுறோம்;
விண்ணில் விரைந்து பறக்கவே
வேண்டி நிற்கிறோம்!

— மு. பூபாலன், மூஞ்சூர்பட்டு.

பட்டுப் பாப்பா

பாப்பா சின்னப் பாப்பா,
பட்டு மூஞ்சிப் பாப்பா.
அப்பா சொல்லு என்றால்,
அழகாய் இப்பா என்பாள்!

பாட்டி அருகே வந்து,
பரிவாய் அழைக்கச் சொன்னால்,
போட்டி என்றே சொல்லி,
பொக்கை வாயால் சிரிப்பாள்!

தாத்தா விரைந்து வந்து
தன்னை அழைக்கச் சொன்னால்,
தீத்தா என்றே அழைத்து
திரும்பிப் பார்த்துச் சிரிப்பாள்!

அண்ணா என்றே என்னை,
அன்பாய் அழையேன் என்றால்,
இண்ணா என்றே அழைத்து
இன்முகத்தால் சிரிப்பாள்!

அம்மா சொல்லு என்றால்,
அழகாய் அம்மா சொல்வாள்!
அம்மா செய்த மாயம்,
அதுவே அன்புப் பாசம்!

— வி. சி. கிருஷ்ணரத்னம், சென்னை—3

கவியரங்கம்



கணக்குத்தான்!

வானில் பூமி
கோடு போட்டு
வழங்குவதும்
கணக்குதான்!

வளி கழித்துப்
புயல் எழுந்து
வாட்டுவதும்
கணக்குதான்!

நெருப்பாலைக்
கதிரவன் தன்
நிறை ஒளியும்
கணக்குதான்!

நிழல் கொடுக்கும்
கோள்கள் வானில்
நிலவதும்
கணக்குதான்!

பறந்து செல்லும்
பறவையினைப்
பார்வையிலும்
கணக்குதான்!

பதுங்கிப் பாயும்
புலியின் வேகப்
பதற்றத்திலும்
கணக்குதான்!

நாளும் கோளும்
சக்கரமாக
நகருவதும்
கணக்குதான்!

நாம் அமைந்த
வாகனங்களை
நகர்த்துவதும்
கணக்குதான்!

— நாரண. மணிவண்ணன், சென்னை.



வேண்டும்

தெளிந்த சிந்தனை வரவேண்டும்;
தூய உள்ளம் பெறவேண்டும்;
அழிவும் ஏய்ப்பும் விழ வேண்டும்;
உழைப்பு உயர்வு பெறவேண்டும்.

கல்வி கவிதை வரவேண்டும்;
கருணை அன்பு வரவேண்டும்;
எல்லா நன்மையும் பெறவேண்டும்;
எங்கும் மகிழ்ச்சி வரவேண்டும்.

— சி. இராஜகோபாலன், புதுவை.



தம்பி தம்பி!

பண்பினைப் பேணிக் காத்திடுவாய் — தம்பி
பயனாய் வாழ்வைக் கழித்திடுவாய்;
அன்பினைப்போற்றிமகிழ்ந்திடுவாய் — தம்பி
அரியச் செயல்களைச் செய்திடுவாய்!

உலகம் போற்ற வளர்ந்திடுவாய் — தம்பி
உண்மையை என்றும் பேசிடுவாய்;
நிலத்தில் வியர்வையைச் சிந்திடுவாய் — தம்பி
நிலைத்தப் புகழைப் பெற்றிடுவாய்!

கல்வியில் சிறந்து விளங்கிடுவாய் — தம்பி
கலைகளும் கற்று உயர்ந்திடுவாய்;
அல்லும் பகலும் உழைத்திடுவாய் — தம்பி
அறிவை வளர்த்து வாழ்ந்திடுவாய்!

— தங்க. சங்கரபாண்டியன்,
சென்னை — 103.



வாழ்ந்திடுவோம்

வள்ளுவர் குறளைக் கற்றிடுவோம்;
வன்முறை எதையும் ஒதுக்கிடுவோம்;
அல்லும் பகலும் உழைத்திடுவோம்;
அகிலம் போற்றவே வாழ்ந்திடுவோம்.

பள்ளிக் கூடம் சென்றிடுவோம்;
பாடம் நன்கு கற்றிடுவோம்;
எள்ளி நகைத்துத் திரியாமல்
இனிய நூல்கள் படித்திடுவோம்.

ஒழுக்க நிலையைக் கற்றிடுவோம்;
ஒற்றுமை ஓங்கப் பழகிடுவோம்;
முழுக்க எதையும் அறிந்திடுவோம்;
முன்னோர் வழியில் நடந்திடுவோம்.

பெரியோர் அறிவுரை கேட்டிடுவோம்;
பெற்றவர் பெருமை காத்திடுவோம்;
சிறியோர் என்றே இகழாது,
சிரித்து அன்பைக் காட்டிடுவோம்.

— தி. ஆ. இராமசாமி, காசிதபுரம்.

அறிவாயோ!






மஞ்சள் நிறத்தில் எரிந்திடும்,
நீல நிறத்தில் மாறிடும்,
வெப்பத்தையே தந்திடும்,
குளிரினையே போக்கிடும்.

முத்தைப் போல மின்னிடும்,
தொட்டால் கையைச் சுட்டிடும்,
உலகத்தையே அழித்திடும்,
உணவு சமைக்க உதவிடும்.


சீக்கிரமாய் உயர்ந்திடும்,
காற்றடித்தால் பறந்திடும்,
தங்கத்தையே உருக்கிடும்,
தொழுது போற்ற வைத்திடும்!

வெளிச்சம் கூடத் தந்திடும்,
வேகமாகப் பரவிடும்,
அழிவுகூடச் செய்திடும்,
அதுவே நெருப்பு அறிந்திடும்!

— ஆ. க. சம்பந்தமூர்த்தி, சென்னை—15.




பார்! பார்!



நிலவின் ஒளியில் கடலைப் பார்!
அலைகள் மோதும் அழகைப் பார்!
கரையை அடையும் விரைவைப் பார்!
மீன்கள் நீந்தும் முறையைப் பார்!
சிப்பி கிடைக்கும் விதத்தைப் பார்!
நண்டு நகரும் அழகைப் பார்!
படகு மிதக்கும் நிலையைப் பார்!
பைய அசையும் அழகைப் பார்!

— க. மீனா, திருச்சி.



உண்மைக்கதை



சிறுமியைக் கொல்!

நீலக் கடலில் அந்தக் கப்பல் மொட்டுப் போல மிதந்து சென்று கொண்டிருந்தது.

கப்பலின் மேல்தளத்தில் பைனாகுலரை வைத்துக் கொண்டு நீலக் கடலின் நீர்ப்பரப்பை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் ஓர் ஆறு வயதுச் சிறுமி. நீல கோலிகுண்டுக் கண்களும், செம்பட்டை முடியும், ஓலைத் தொப்பியும், 'கழுக், மொழுக்' சந்தன உடலும் அவள் அயல்நாட்டைச் சேர்ந்தவள் என்பதைப் பறைசாற்றின.

கடலை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிறுமி, திடீரென்று திரும்பி, ''அப்பா, அப்பா'' என்று அதிசயக் குரலெடுத்து அழைத்தாள்.

''என்ன ரோசி? உன் 'மேக்டி' பொம்மையைக் காணோமா? சாப்பாட்டு மேசையிலேயே வைத்துவிட்டு வந்து விட்டாயே? நீ தேடுவாய் என்று அதையும், ஸ்பிரிங் பம்பரத்தையும் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று கொண்டு வந்து கொடுத்தார் ஸ்டீபன் பெக்.

இயக்கும் கேபினில் இருந்து அவசர அழைப்பு வரவே, மகளைக் கவனமாக இருக்கச் சொல்லிவிட்டுக் கீழே இறங்கிச் சென்றார் பெக். கேபின் அறையில், கப்பலின் அதிகாரிகள் அனைவரும் கூடியிருந்தனர். அனைவரின் முகத்திலும் கலவரம் நிறைந்திருந்தது.

''என்ன ஆச்சு?'' என்று கேட்டார் பெக்.

'கப்பலை உந்தி முன்னே நகரவைக்கும் சக்கர விசை இயங்கவில்லை! திடீரென்று முளைத்துள்ள மணல் திட்டில் கப்பல் தரைதட்டிச் சிக்கிக் கொண்டிருக்கிறது. முன்னாலும் போக முடியவில்லை. பின்னாலும் வர முடியவில்லை!'

பெக், ஆபரேட்டரை நகரச் சொல்லி விட்டுத்தானே கருவிகளை இயக்க முயற்சி செய்து பார்த்தார். ஒன்றும் பயனில்லை.

''சரி, கம்பியில்லாத் தந்தியில் போர்ட் பிளேயருக்கு உடனே

ஹரிசிவ்

தகவல் அனுப்புங்கள், உதவி கேளுங்கள்'' என்று உத்தரவிட்டு விட்டு மேல் தளத்திற்கு விரைந்தார் பெக். மற்ற அதிகாரிகளும் பின் தொடர்ந்தனர்.


பெக் பைனாகுலரைக் கண்களில் வைத்து நீலக்கடலை நோக்கினார். வெகு தூரத்திற்கு அப்பால் தென்னை மரங்களின் உச்சி தெரிந்தது பசுமையாக.

பெக் பைனாகுலரைத் தம் உதவியாளரிடம் கொடுத்து விட்டு, ''நாம் அந்தமான் நிகோபார் தீவுக் கூட்டப் பகுதியில் இருக்கிறோம்'' என்றார்.

''பைனாகுலரை வைத்துப் பார்த்துக்கொண்டிருந்த உதவியாளர், பெக்கைப் பார்த்து, ''சார், காட்டுமிராண்டிகள் கூட்டமாக வருகிறார்கள், சார்!'' என்றார் பதறியபடி.

பெக் பைனாகுலரை வாங்கிப் பார்த்தார். உதவியாளர் கூறியது உண்மைதான். பத்துப் பதினைந்து கட்டு மரங்களில் வில் அம்பு, ஈட்டி ஏந்திய காட்டுமிராண்டிகள் கப்பலை நோக்கி வந்து கொண்டிருந்தனர். ஆடை இருந்து மறைக்க வேண்டிய இடங்களை எலும்புகளும், விலங்குத் தோலும் மறைத்தன.

''சார் சார்!'' நாம் சிக்கிக் கொண்டிருப்பது சென்டிகல் தீவுக்கு அருகே சார். இதுவும் அந்தமான் நிகோபார் தீவுக் கூட்டங்களில் ஒன்றுதான். மனிதர்களை அடித்துத் தின்னும், நாகரிகமாக மாற மறுக்கும் காட்டு மிராண்டி மக்கள் வாழும் தீவுதான் அது. அவர்களிடம் சிக்கிக் கொண்டால் ஆபத்துதான். அம்பிலே விஷம் தடவி, குறி பிசகாது எய்வதில் அவர்கள் சிறந்தவர்களாம். கொஞ்சம் அசந்தால் அந்தமான் தீவுக்கே கூட வந்து, மனிதர்களைக் கடத்திக் கொண்டு போய் அடித்துச் சாப்



பிட்டுவிடுவார்களாம். வாருங்கள் உள்ளே,'' என்று பதறினார் ஓர் உதவியாளர்.

''ரோசி உள்ளே வா'' என்று மகளை அழைத்துக்கொண்டுஎல்லோருடனும் உள்ளே சென்றார் பெக். மேல் தளக் கதவைத் தாளிட்ட பிறகு தான், ''அப்பா, என் மேக்டி பொம்மையையும் ஸ்பிரிங் பம்பரத்தையும் அங்கேயே விட்டு விட்டேனே...? போய் எடுத்துக் கொண்டு வந்து விடலாமா?'' என்று கேட்டாள் ரோசி.

பெக், மூடப்பட்ட கதவில் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடி வழியாக வெளியே நோக்கினார். 'மேக்டி' பொம்மையும், ஸ்பிரிங் பம்பரமும் ரோசி உட்கார்ந்து கொண்டிருந்த இடத்தில் இருந்தன. பெக் கதவைத் திறக்கப் போனார்.

''வேண்டாம் - போகாதீர்கள் பெக்,'' என்று தடுத்தார் ஓர் உயர் அதிகாரி.

பார்த்துக் கொண்டிருக்கும் போதே, நூலேணியை மாட்டி, காட்டு



மிராண்டிகள் மேல் தளத்தில் ஒவ்வொருவராக வந்து குதித்தனர்.

கதவைத் திறக்கச் சொல்லி அவர்கள் போட்ட சப்தமும், செய்த அமர்க்களமும் எல்லோரையும் நடுங்க வைத்தன.

"ஆளுக்கொரு துப்பாக்கியை வைத்துக் கொண்டு சுட்டால் இந்தக் கூட்டத்தைப் பூண்டோடு அழித்து விடலாமே?" என்று யோசனை கூறினார் ஓர் அதிகாரி. ஒயர்லெஸ் எனும் கம்பியில்லாத் தந்தியில் போர்ட் பிளேயரிலிருந்து செய்தி வந்திருப்பதாகத் தகவல் வரவே எல்லோரும் விரைந்தனர்.

"கப்பலின் மேல் தளத்தில் காட்டு மிராண்டிகள் குவிந்திருக்கிறார்கள். கதவைத் திறக்கச் சொல்லி அவர்கள் போடும் கூச்சல் பயங்கரமாக இருக்கிறது. நாங்கள் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி அவர்களை விரட்டப் போகிறோம்" என்று செய்தி அனுப்பினார் கப்பல் தலைவர்.

"தயவு செய்து அதை மட்டும் செய்து விடாதீர்கள். மேல் தளத்தின் கதவுகளை அவர்களால் உடைக்க முடியாது. அந்த அளவுக்கு அவர்கள் அறிவு முன்னேறவில்லை. நீங்கள் துப்பாக்கியால் சுட்டால், நொடியில் அவர்கள் உங்கள் கப்பலுக்குத் தீ வைத்து விடுவார்கள். கப்பல் நிறைய சர்க்கரை மூட்டைகள் உள்ளன. இழப்பு யாருக்கு என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். அதனால், எந்தவித எதிர்ப்பையும் காட்டாமல் உள்ளேயே முடங்கி இருங்கள். அதுதான் புத்திசாலித்தனம். இந்தியக் கப்பல் உங்களுக்கு உதவ இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடும்."

கதவைத் திறக்கும்படி கேட்டுக் காட்டு மிராண்டிகள் போட்ட சப்தமும், செய்த ஆர்ப்பாட்டங்களும் அதிகரித்துக் கொண்டே சென்றது. ரோசியின் முகத்தில் பயம் தெரிந்தது.

"ரோசி, நீ என்னுடைய அறையில் போய்ப் புத்தகம் ஏதாவது படித்துக்கொண்டிரு. நாங்கள் அழைத்தாலொழிய நீ வெளியே வரக் கூடாது" என்று தட்டிக் கொடுத்தார் கப்பல் தலைவர் அன்பாக.



எந்த வழி போகும்?

ஒருநாள் முல்லா, தெரு வழியே போய்க் கொண்டிருந்தபோது, ஊருக்குப் புதியவன் ஒருவன் முல்லாவை நெருங்கி, "முல்லா, எந்த வழி தலைநகருக்குச் செல்கிறது?" என்று கேட்டான்.

அதற்கு முல்லா, "நான் முல்லா என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார்.

"அங்கிள், நீங்கள் சொன்னபடியே செய்கிறேன். அதற்கு முன் ஒரு வேண்டுகோள்..." என்று நிறுத்தினாள் சிறுமி ரோசி.

"சொல்லும்மா... சீக்கிரம்...?"

"நான் காட்டு மிராண்டிகளைப் பற்றிப் படித்திருக்கிறேனே தவிர, நேரில் பார்த்ததில்லை, ஒரு முறை கண்ணாடி வழியாக அவர்களைப் பார்த்துவிட்டுப் போய் விடுகிறேனே?"

"வாம்மா, நானே உன்னைத் தூக்கிக் காட்டி விடுகிறேன்," என்று அவளைத்தூக்கிக்கொண்டார் கப்பல் தலைவர்.

"ஐயா," என்று ஒரு பணியாளர் இழுத்தார் தயங்கியபடி.

ரோசியைத் தூக்கிக் கொண்ட கப்பல்தலைவர் கேள்விக்குறியுடன் திரும்பிப் பார்த்தார்.

"இந்தக் காட்டுமிராண்டிகள் ஈவு இரக்கமில்லாதவர்கள். அவர்களுக்கு மனித மாமிசம் என்றால் உயிர். அதிலும் குழந்தைகள் என்றால் விடவே மாட்டார்களாம். ரோசி இருப்பது அவர்களுக்குத் தெரியாமலிருக்கும் வரை, ரோசிக்குப் பாதுகாப்பு. கண்ணாடியில் நீங்கள் அவளைத் தூக்கிக் காட்டினால், வெளியிலிருப்பவர்கள் அவளைக் கண்டு கொள்ள வாய்ப்பு உண்டு."

தலைவரின் உடல் இலேசாக நடுங்கியது. "பெக், ரோசியை என் அறையில் விட்டு விட்டு வாருங்கள்" என்று சிறுமியை ஒப்படைத்தார்.

இதற்குள் மேல் தளத்தில்

புதியவன் முல்லாவை தற்செயலாக 'முல்லா' என்று அழைத்தது சரியாகப் போய் விட்டது. ஆனால், அவன் அதைக் கூறாமல் தன் திறமையை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பி, "உங்கள் முகத்தைப் பார்த்ததுமே, நீங்கள் முல்லாதான் என்று அறிந்து கொண்டேன்" என்று பெருமை யுடன் சொன்னான்.

அதைக் கேட்ட முல்லா, "அப்படியா! நீ திறமைசாலிதான்! எதிரே உள்ள இந்த வீதி களைப் பார்த்து, எது தலைநகருக்குச் செல் லும் தெரு என்பதையும் அறிந்து கொள்" என்று சொல்லித் தன் நடையைத் தொடர்ந் தார்!

— நல்லாலம் காசி

கூச்சலும் ஆட்டமும் அதிகமாகியது. கப்பலே அதிர்ந்தது.

மேலேயிருந்து அவசரம் அவசர மாக இறங்கி வந்த ஒரு பணி யாளர், "ரோசியின்" 'மேக்டி' பொம்மையும் ஸ்பிரிங் பம்பரமும் கப்பலில் குழந்தை ஒன்று இருப்பதை அவர்களுக்கு அறிவித்து விட்டது. குழந்தையைக் கொடுத்து விடுங்கள், போய் விடுகிறோம்' என்று கூச்சல் போடுகிறார்கள். தர மறுத்தால் கப்பலுக்குத் தீ வைத்து விடுவதாக மிரட்டுகிறார்கள்" என்றார்.

ரோசியின் முகத்தில் ஏதோ யோசனை.

"அங்கிள், என் ஒருத்தியை இழப் பதால் கப்பலுக்கும் உங்கள் எல்லோ ருக்கும் நன்மை கிடைக்கும் என்றால், நான் அவர்களிடம் போகத் தயார். என்னை அனுப்பி விடுங்கள்" என்றாள்.

"ரோசி" என்று மகளை அணைத் துக் கொண்டார் பெக்.

"ஏழு வயது கூட நிரம்பாத உனக்கு இவ்வளவு தியாக உணர்வாம்மா! இவ்வளவு உன்னதமான குணம் படைத்த உன்னை நாங்கள் இழக்கத் தயாராக இல்லை. இந்தக் கப்பலில் கடைசிப் பணியாளர் இருக்கும்வரை உன் உயிரைப் பாதுகாப்போம்," என்று உணர்ச்சி பொங்கக் கூறிய தலைவர், "பெக், ரோசியைச் சீக்கிரம் என் அறையில் விட்டுவிட்டு, பத்திர மாக இருக்கும்படி செய்து விட்டு வாருங்கள்" என்று அனுப்பி வைத்தார்.

"காட்டு மிராண்டிகள் அவ்வளவு சீக்கிரம் கப்பலுக்குத் தீ வைக்க மாட் டார்கள். ஏனென்றால் இதில் நிறைய மனிதர்கள் இருக்கிறோம். குறிப்பாக ஒரு குழந்தையும் இருக் கிறது என்பது அவர்களுக்குத் தெரி யும். மனிதர்களை உயிரோடு தின்ப தில்தான் அவர்களுக்கு அதிக விருப் பம். அதனால், கப்பலுக்கு அவ்வளவு சீக்கிரம் தீ வைக்க மாட்டார் கள்," என்று தைரியம் அளித்தார் ஒருவர்.


"இப்பொழுது இரண்டு மணியா கிறது. இருட்டுவதற்கு இன்னும் ஆறு மணி நேரம் ஆகும். அதுவரை இவர் களைச் சமாளித்தால் போதும். இருட் டைக் கண்டதும் இவர்கள் ஓடி விடு வார்கள். நாளைக் காலைக்குள் நமக்கு உதவி கிடைத்து நாம் தப்பி விடலாம்" என்று நம்பிக்கை அளித் தார் இன்னொருவர்.

நேரம் ஊர்ந்தது. இருட்டத் தொடங் கியதும் காட்டு மிராண்டிகள் வந்த வழியாகவே இறங்கி, கட்டுமரங் களில் ஏறி, தீவுக்குள் சென்று மறைந்தனர்.


போர்ட்பிளேயரிலிருந்து புறப்பட்ட உதவிக் கப்பல் சிறிது நேரத் திற்கெல்லாம் வந்துவிட்டது. ஆனால், அதனால் எதுவுமே செய்ய முடியவில்லை. பாறையும், மண் மேடிட்ட பகுதிகளும் குறுக்கே இருந்த தால், உதவிக் கப்பலால் அந்தப் பனாமா நாட்டுக் கப்பலான 'பிரைம் ரோஸ்'க்கு அருகே கூடச் செல்ல முடியவில்லை.


வேகமாக விடிந்து கொண் டிருந்தது. போர்ட் பிளேயருக்குத் தகவல் பறந்தது. சிக்கல் விளக்கப்பட் டது. ஆபத்துக்கு உதவிக்கரம் கொடுக்கும் பாரத நாட்டு ஹெலிகாப்டர் ஒன்று போர்ட்பிளேய ரில் இருந்து புறப்பட்டது. 'பிரைம் ரோஸ்' கப்பலில் இருந்த ரோசி உட்பட முப்பத்திரண்டு பேர்களையும் ஒவ்வொருவராகத் தூக்கி உதவிக் கப்பலில் சேர்த்தது. காட்டு மிராண் டிகள் மீண்டும் வந்த போது உதவிக் கப்பல் போர்ட் பிளேயருக்குக் கிளம்பி விட்டது!

வழியைக் கண்டுபிடி!



எந்த வழியில் போனால் சிங்கராஜாவுக்கு ஆட்டுக் குட்டி கிடைக்கும்?





1. இந்தியாவில் தபால் சேவை 1766ல் இராபர்ட் கிளைவ் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
2. 1837ல் கிழக்கிந்தியக் கம்பெனியாரால் அது நவீனமாக்கப்பட்டது.
3. 1880ல் மணியார்டர் அனுப்பும் முறை கொண்டு வரப்பட்டது.
4. தபால் சேமிப்புத்துறை 1882ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
5. 1830ல் இரயில் மூலமாக தபால் அனுப்பப்பட்டது.
6. 1854ல் அரை அணா தபால் தலைகள் இந்தியாவில் வெளியிடப்பட்டன.

— ஆ. மணிமேகலை, காரைக்கால்.

பொம்மைத் திருநாள்

ஜப்பானில் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 3'ஆம் தேதி பொம்மைக் கண்காட்சியைப் பெண் குழந்தைகள் மட்டுமே பங்கு கொண்டு நடத்துகின்றனர். பெண் குழந்தைகள் நாள் என்றும் பொம்மைத் திருநாள் என்றும் அழைக்கப்படும் இத்நாளில் அரசு விடுமுறை உண்டு.

— எஸ். விஜயா சீனிவாசன்,
திருச்சி – 14.



பிளாட்டினம் என்பது உலோகங்களில் உயர்ந்த ஜாதி.

இது தங்கத்தை விட விலை உயர்ந்தது. வெள்ளியை விடக் கடினமானது.

இதன் தனிச் சிறப்பு என்னவென்றால், இது காற்றில் மங்காது. எந்த ஒரு தனி அமிலத்திலும் கரையாது.

இதன் தாய்நாடு தென் அமெரிக்கா. முதன் முதலாய் இதை மனிதர்கள் கண்டெடுத்த வருடம் 1735.

பிளாட்டினம் பூமியில் தனியாகவோ அல்லது மற்ற உலோகங்களோடு கலந்தோ கிடைக்கிறது. இது பிரித்தெடுக்கும் போது ஸ்பான்ஜியாக வெளிப்படும்.

பிளாட்டினம் நைட்ரிக் அமிலத்தோடு கலந்து வெடிமருந்துகளை தயாரிக்கப் பயன்படுகிறது. அழிக்கும் ஆற்றல் மிகுந்த எக்கச் சக்கம்.

பிளாட்டினம் என்பது ஒரு தனி உலோகமல்ல. அது ஒரு கூட்டணி. கூட்டணியில்

மொத்தம் ஆறு உலோகங்கள். ருதினியம், ரேடியம், பல்லேடியம், ஆஸ்மினியம், இரிடியம், பிளாட்டினம்.

பிளாட்டினத்தால் ஒரு முக்கிய உபயோகம் உண்டு. டாக்டர்கள் ஆபரேஷன் முடிந்த பிறகு தைக்க உதவும் ஊசி பிளாட்டினத்தால் ஆனது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை அமெரிக்க ஜப்பான் மக்கள் பிளாட்டினத்தால் ஆன பற்களையே கட்டிக்கொண்டிருந்தார்கள். நாளாக நாளாக அதன் விலை அதிகமாகவே தங்கத்தால் ஆன பற்களைக் கட்டிக் கொள்ள ஆரம்பித்தார்கள். பிளாட்டினத்திற்கு முன்னால் தங்கத்தின் விலை ரொம்ப சீப்.

— டி. வி. சுந்தரம், அரக்கோணம்.




இன்னும் ஓடவேண்டும்

ஒரு சிங்கத்தையும், ஒரு நரியையும் ஒரு வேடன் வெகுநேரமாய்த் துரத்தி வந்தான். இறுதியில் வேடன் களைப்படையவே, தன் முயற்சியைக் கைவிட்டான். சிங்கம் நரியிடம், "நரியே, ஒருவேளை வேடன் மறுபடி நம்மை வேட்டையாட வந்தாலும் வருவான். எனவே, என் குகை அருகில்தான் உள்ளது. வேடன் போகும் வரை இருந்து ஓய்வெடுத்துக் கொண்டு போ." என்றது.

நரி, "சிங்கமே வேடனிடமிருந்து உயிர் தப்பிக்கத்தான் இவ்வளவு தூரம் ஓடி வந்தேன். 'இப்போது உன்னிடமிருந்து தப்பிக்க இன்னும் ஓட வேண்டியிருக்கின்றது!' என்று கூறி ஓடி மறைந்தது!'

— இரா. ஷா. முகமது யாசின், மஞ்சக்குப்பம்.



பென்சில் தெரியுமா?

பென்சில் என்ற பெயர் வந்த விதம் எப்படி?

இடைக்கால மக்கள் பென்ஸில்லஸ் என்ற தூரிகையால் — பிரஷ்ஷால் மையைத் தொட்டு எழுதினர். பென்ஸில்லஸ் என்பது லத்தீன் மொழிச் சொல். அம் மொழியில் அதற்கு 'சிறிய வால்' என்று பொருள். அதன் காரணமாகப் பிற்காலத்தில் க்ராபைட் பொருத்திய எழுது கருவிக்குப் பென்ஸில் எனப் பெயர் இடப்பட்டது.

— ஆர். மகாதேவன், திருநெல்வேலி 6.

குங்ஃபுட்சே தெரியுமா?

சீனத் தத்துவ ஞானியான கன்பூஷியசுக்கு அப் பெயரை இட்டவர்கள், அவர் மறைவுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு பின் வந்த கிறிஸ்துவப் பாதிரியார்கள். அவருடைய சீனப் பெயர் 'குங்ஃபுட்சே' என்பதாகும். கன்பூஷியஸ் என்பது லத்தீன் மொழிப் பெயர். அதுவே உலகம் முழுவதும் நிலைத்து விட்டது.

— நா. ஷேக் ஹாசேன், செஞ்சி — 2.



முதல் பெண்மணிகள்

1. இந்தியாவின் மத்திய அரசில் முதல் பெண் அமைச்சர் ராஜ்குமாரி அமிர்கௌர்.

2. முதல் பெண் சபாநாயகர் சானோ தேவி.

3. முதல் பெண் முதலமைச்சர் சுசேதா கிருபளானி

4. முதல் பெண் கவர்னர் சரோஜினி நாயுடு.

5. முதல் பெண் வக்கீல் ரெஜினா குப்தா.

6. பாராசூட்டிலிருந்து குதித்த முதல் பெண் காப்டன் சந்திரா.

7. முதல் முஸ்லிம் பெண் அரசி ரஷியா பேகம்.

8. இந்திய தேசிய காங்கிரசின் முதல் பெண் தலைவி சரோஜினி நாயுடு.

— எஸ். ஆர். சரவணன்,
சென்றாயரெட்டியூர்.




ரோம் பேரரசர் ஆன பிறகு 'நீரோ' மன்னனுக்குப் பொது இடங்களில் பாட ஆவல் பிறந்தது. அதற்கான பாடல்களைக் கற்ற பிறகு நேப்பிள்ஸ் நகரில் அரங்கேற்றம் செய்தான். 'என்ன ஆச்சரியம்!' அவன் பாட ஆரம்பித்த சில நொடிகளில் நில நடுக்கம் ஏற்பட்டு அனைவரும் ஓடி விட்டனர்!

அடுத்த கச்சேரியில் முன்னேற்பாடாக தியேட்டரின் கதவுகளை மூடி, காவலர்களையும் நியமித்தான். கச்சேரி ஆரம்பமான சில நொடிகளில் வந்திருந்த கர்ப்பிணி சீமாட்டிகள் சிலருக்கு அங்கேயே பிரசவம் ஆகி விட்டது! கை தட்டியும் விசிலடித்தும் அலுத்துப் போன சிலர் சுவரில் ஏறிக் குதித்துத் தப்பி ஓடி விட்டனர். மூன்று புத்திசாலியான சீமான்கள் காவலர்களை ஏமாற்றி விட்டு வாசல் வழியாகவே தப்பி விட்டனர். எப்படி? ஒருவர் திடீரென இறந்து விட்டது போலவும், மற்ற இருவர் அவரை டாக்டரிடம் தூக்கிச் செல்வதைப் போலவும் நடித்து ஏமாற்றி விட்டனர்!

'அப்படியென்றால் 'நீரோ' மன்னர் எப்படிப் பாடியிருப்பார்!'

— ஜெ. கல்யாண ராமன், மன்னார்குடி.



ஒருமுறை பம்பாயில் குழந்தைகளின் விழா ஒன்றுக்கு லால்பகதூர் சாஸ்திரி அழைக்கப்பட்டார். அவ் விழாவில் பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளே கலந்து கொண்டனர். லால்பகதூர் சாஸ்திரியும் அவ் விழாவில் கலந்து கொண்டார். அவர் பேச எழுந்தார். "நான் குழந்தைகளுக்கு அறிவுரை கூறுமளவிற்கு அறிஞன் அல்லன். காரணம் நானும் உங்களைப் போல பத்து வயதுச் சிறுவன் போலவே காட்சி அளிக்கிறேன். அதனால்தான், என்னை இந்த விழாவில் பேச அழைத்து இருக்கிறார்கள் போலிருக்கிறது" என்றார்.

இதைக் கேட்டதும் குழந்தைகள் 'கொல்' என்று சிரித்து விட்டனர்.

— தா. ஷேக் உசேன், செஞ்சி.



1920ல் சீனாவில் வித்தியாசமான ஓவியங்கள் வரைவதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் ஹீவாங் எஹ்ஜோன். இவர் பட்டுத் துணியில் ஓவியம் வரைந்து புகழ் பெற்றவர். இதில் என்னங்க வித்தியாசம் என்கிறீர்களா? அந்த ஓவியம் வரைந்தது அவரின் நாக்கின் மூலம்.

— கோவி. மகுடேசுவரன், வீரபாண்டி;
அந்தல்.



உலகிலேயே அதிவேகமாகப் புத்தகம் வாசிக்கும் சிறுவன் ஒருவன் கொரியாவில் வாழ்கின்றான். இவனுக்கு வயது பதினைந்து. ஒரு நிமிடத்தில் இவன் வாசிக்கும் எழுத்துக்கள் எத்தனை தெரியுமா? கேட்டால் மலைத்து விடுவீர்கள்! 12,00,000 எழுத்துக்களை வாசித்து விடுகின்றான்.

— மொரப்பூர், அ. தங்கராஜ்.



உலகம் இந்தச் சிறுமியின் கையில்!

உருண்டையான ஒரு பிளாஸ்டிக் பந்தை வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள் ஸ்ரீவித்யா. இப்போதுதான் விதவிதமான வண்ணங்களில், பெரிய அளவில் பந்துகள் பிளாஸ்டிக்கினால் செய்யப்படுகின்றனவே. அது மாதிரி ஏதோ ஒன்று என்று நினைத்தேன்.

கொஞ்சம் கிட்டே போய்ப் பார்த்தால்— க்ளோப்! உலக வரைபடம் அச்சிடப்பட்ட பிளாஸ்டிக் உலக உருண்டை!

அவள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். ''மடகாஸ்கர் இங்கே இருக்கு... இது அபுதாபி. இது பிரான்ஸ்...

ஆச்சரியப்பட்டேன். படித்துத்தான் சொல்கிறாளா? சும்மாவானும் சொல்கிறாளா? அந்த நான்கு வயதுக் குழந்தைக்கு இப்போதுதான் ஐ. சி. எப். நர்ஸரி பள்ளியில் யு. கே. ஜி. படிக்கும் அந்தக் குழந்தைக்கு— இதற்குள்ளாகவா புவியியல் சொல்லிக் கொடுத்திருப்பார்கள்?

சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள சில கேள்விகள் கேட்டேன். ''ஓமன் எங்கே இருக்கு? அர்ஜன்டைனா, டோக்யோ, சூரிநாம், தாய்லாந்து ...?''

ஒவ்வொரு இடத்தையும் பளிச் பளிச் சென்று உலக வரைபடத்தில் தொட்டுக் காட்டினாள் ஸ்ரீவித்யா!

''நாடு மட்டும் இல்லே சார்; கடல்கள், ஒவ்வொரு நாட்டின் தலைநகர், விளைபொருட்களைச் சொன்னால் அவை கிடைக்கும் நாடுகள், எங்கள் குடும்பத்தவர்கள் எந்தெந்த ஊரில் வசிக்கிறார்கள் என்று எல்லா இடத்தையும் ரொம்பச் சரியா காட்றா'' என்று பெருமையுடன் சொன்னார் ஸ்ரீவித்யாவின் தந்தையார், ராமன்.

உண்மைதான்.

''பொற்கோவில் எங்கே இருக்கு?''

''இதோ இங்கே. அமிர்தசரஸ்... பஞ்சாப்...''

''ஹீரோ சைக்கிள் விளம்பரம் வருமே. அதை எங்கே செய்யறாங்க?''

''லூதியானா, இதோ இங்கே.''

''வைரச் சுரங்கம்?''

''கிம்பர்லி, தென்னாப்பிரிக்கா.''

அசத்தி விட்டாள் ஸ்ரீவித்யா!

''பிள்ளையாரை பம்பாய்ல கடல்ல கரைப்பாங்களே, அது எந்தக் கடல்?'' உடன் இருந்த அவளுடைய அத்தையின் கணவர் திரு. கே. எச். கிருஷ்ணன் கேட்டார்.

''பே ஆஃப் பெங்கால்'' பளிச்சென்று சுட்டிக்காட்டினாள்.

''பசிபிக் கடல் எங்கே இருக்கு?''

ஜப்பானுக்குக் கிழக்கிலே; அமெரிக்காவுக்கு மேற்கிலே!''

ஆச்சரியம்!

அவளுக்கு இரண்டரை வயதாக இருந்த போது கல்கத்தாவுக்குத் தன் பெற்றோருடன் சென்றிருந்தாள். அங்கே உள்ள பிர்லா சயன்ஸ் மியூஸியத்துக்குச் சென்றாள். அங்கே பெரிய உலக உருண்டை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்தபடி எல்லா நாடுகளையும் சுட்டிக்காட்டிச் சொன்னாள். இதைப் பார்த்தார், மியூஸியத்தின் டைரக்டர் திரு. மித்ரா. இந்தக் குழந்தையின் ஆற்றலைப் பார்த்து ஸ்தம்பித்துப் போய், விஞ்ஞானி சர். சி. வி. ராமன் வாழ்க்கை வரலாறு புத்தகம் ஒன்றினை அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறார்.

அவளை மேலும் சோதிக்க விரும்பினேன்.

''மாட்டுச் சண்டை எங்கே நடக்கும்?''

''ஸ்பெயின்ல.''

''ரப்பர் நிறைய கிடைக்கிற நாடு எது?''

''மலேசியா. அந்த ரப்பர்லதான் டயரெல்லாம் செய்வாங்க.''

''லெபனான் எங்கே இருக்கு?''

''இதோ இங்கே. இங்கேதான் தெனமும் சண்டை போட்டுக்கறாங்க...''

''குவெய்த் நாடு எங்கே இருக்கு?''

''இப்பதான் அது ஒண்ணும் தனிநாடு இல்லியே. ஈராக்கோட சேர்ந்திடுச்சே!''

''கல்கத்தால தாஜ்மகால் எங்கே இருக்கு?''

''தாஜ்மகால் கல்கத்தாலே இல்லே அங்கிள். இதோ இங்கே, ஆக்ரால இருக்கு.''

இப்படிப்பட்ட பிரமிக்கத்தக்க உலக அறிவு இந்தக் குழந்தைக்கு ஏற்பட்டதன் அடிப்படைக் காரணம் திரு. கிருஷ்ணனின் முயற்சிதான். அவருக்கு ஏற்கெனவே புவியியலில் ஆர்வம் உண்டு. ஸ்ரீவித்யாவை மடியில் அமர்த்திக் கொண்டு இந்திய வரைபடத்தைப் பிரித்து வைத்துக் கொள்வார். ''நாம போவோமே பீச், அது இங்கேதான் இருக்கு. உங்க அப்பா பிறந்த ஊர் எது தெரியுமா? மதுரை. இதோ இதுதான். நடராஜ் மாமா எந்த ஊர்ல இருக்கார் தெரியுமோ? நேபாளம். இது நான் ரங்கூன்ல இருந்திருக்கேன். இதோ பார், இதுதான் பர்மா. இது ரங்கூன்...'' என்றெல்லாம் உறவினர் இருப்பிடத்தைக் காட்டியே அவளுக்குப் புவியியல் அறிவைப் புகட்டியிருக்கிறார்.

ஆனால் உலக நாடுகள் எல்லாவற்றையும் எந்தச் சிறு நாடானாலும் சரி, மிகச் சரியாகச் சுட்டிக்காட்டக்கூடிய ஆற்றல் இந்தச் சின்னஞ்சிறு சிறுமிக்கு எப்படி வந்தது?

''இறைவன் கருணைதான்; அவளுடைய சொந்த ஆர்வமும் ஈடுபாடும்தான்'' ஸ்ரீவித்யாவின் அம்மா பெருமையுடன் சொன்னார்.

''உனக்கு என்னம்மா எதிர்கால ஆசை?''

''இதோ இந்தப் படத்திலே இருக்கே இங்கிலாந்து. இங்கே இருக்கற ஆக்ஸ்போர்டு யுனிவர்ஸிடியில படிச்சு டாக்டரா ஆகணும்'' என்று பெரிய தோரணையில் சொன்னாள் சிறுமி ஸ்ரீவித்யா.

அட்டைப்படம், கட்டுரை: பிரபுசங்கர்.

ஒரே ஒரு தங்கம்!

தமிழகத்தின் கபாடி வீரர் ராஜரத்தினம் ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற குழுவின் உதவி காப்டன். இவர் சென்னை ரயில் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலையில் பணியாற்றுகிறார். இவருக்குத் திருமணமாகி இரு குழந்தைகள் உள்ளன. இவரது சகோதரர்களும் சகோதரிகளும் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டவர்கள். ராஜரத்தினத்தின் மனைவி கிளாடிஸும் விளையாட்டுக் கலைகளில் பரிசுகளைப் பெற்றவர். இவர் இந்திய ரயில்வே குழுவின் காப்டன். இந்தியாவுக்குத் தமிழர் ராஜரத்தினம் பெற்றுத் தந்த தங்கம் இணையற்ற சாதனையாகும்.



கவிஞர் போட்ட மருந்து

தெ. முருகசாமி

இராமன் இருக்குமிடத்தை அயோத்தி என்பார்கள். அது போல், குழந்தைக் கவிஞர் இருக்குமிடம் ஒரு குட்டிக் குழந்தை உலகமாக இருக்கும். கவிஞர் எங்கு இருந்தாலும், ஒரு குழந்தைப் பட்டாளம் அவரை மொய்த்துக் கொண்டிருக்கும்! இதைக் கண்டு மகிழும் வாய்ப்புப் பெற்றவர்கள் உண்மையிலேயே கொடுத்து வைத்தவர்கள்.

கவிஞரவர்கள் வட்டார மேலாளராக வங்கியில் பணியாற்றி வந்தார். வங்கிப் பணி காரணமாகத் தான் சென்ற ஊர்களில் எல்லாம் வங்கிப் பணியையும் சிறப்புறச் செய்தார். அதே நேரத்தில், குழந்தை இலக்கியப் பணியையும் மறக்காது செய்து வந்தார். அவரிடம் இருந்த இன்னொரு சிறப்பு, தன் கூட உள்ள மற்றவர்களையும் குழந்தை இலக்கியப் பணிகளில் ஈடுபடவைப்பது!

கவிஞர் காரைக்குடியில் இருந்தாலும் சரி, வெளியூர்களில் இருந்தாலும் சரி, அலுவலக நேரத்திற்குப் பிறகு குழந்தைகளோடு பங்கு கொள்ளும் ஒரு நிகழ்ச்சி இருக்கும். காரைக்குடியில். விடுமுறை நாட்களில் மாலை நேரங்களில் அவரைக் காண




வருவோர் அவர் குழந்தைகளோடு அளவளாவி மகிழும் காட்சியைக் கண்டிருப்பார்கள். காண வருவோரையும் அவர் அதில் பங்கு கொள்ள வைப்பார்! நான் கூட இப்படிப் பல முறை கலந்து கொள்ள நேர்ந்தது உண்டு! திக்குமுக்காடி மகிழ்ந்ததும் உண்டு!

ஒருமுறை கவிஞர் என்னையும் பிள்ளைகளுக்கு ஒரு கதை சொல்லும்படி பணித்தார். 'பேராசை கூடாது' என்பதற்குக் கோடாரி தேவதை கதையைச் சொல்லத் தொடங்கினேன். "இது தெரியும் வேறு சொல்லுங்கள்" என்றனர் குழந்தைகள். நன்றி மறக்கக் கூடாது என்பதற்காகச் 'சிங்கம் — சுண்டெலி' கதையைத் தொடங்கினேன். "இது ரொம்ப பழைய கதை. புதுக் கதையாகச் சொல்லுங்கள்" என்றனர் குழந்தைகள். இப்படி நாலைந்து கதைகளை நான் எடுத்துக் கூறத் தொடங்கியதுமே குழந்தைகள் 'தங்களுக்குத் தெரியும்' என்று சொல்லி வேறு கதை கேட்டதும், நான் 'வெலவெல'த்துப் போனேன்! இறுதியாக, நாவடக்கத்துடன் இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் சிவப்பிரகாசனாரின் நன்னெறிப் பாடல் ஒன்றை விரிவாக விளக்கிக் கூறி ஒருவாறு தப்பித்துக் கொண்டேன்! இந்த அளவுக்குக் கவிஞர் குழந்தைகளைத் தயார் செய்து வைத்திருந்தார்!

குழந்தைகள் கூடினால் கும்மாளமும் இருக்கும்; குறும்பும் இருக்கும். சில நேரங்களில் குழந்தைகள் தங்களை அறியாது பிற குழந்தைகளின்





மனத்தைப் புண்படுத்தி விடுவது உண்டு. அந்த மாதிரி நேரங்களில் கவிஞர் தமக்கே உரிய திறமையால் அந்தப் புண்பட்ட நெஞ்சுக்கு ஆறுதல் அளிப்பதும் உண்டு.

ஒருமுறை அவரது இல்லத்தில், மாலை நேரத்தில் குழந்தைகள் கூடியிருந்தனர். நடுநாயகமாகக் கவிஞரவர்கள் வீற்றிருந்தார். அவரைச் சுற்றிலும் குழந்தைகள்! கோகுலத்துக் கண்ணனின் நினைப்புத்தான் எனக்கு வந்தது.

சில குழந்தைகள் பாட்டுப் பாடினர். சிலர் கதை கூறினார்கள். கூச்சம் காரணமாக வார்த்தை எழாது தவித்த குழந்தைகளை "பரவாயில்லே! முதல் தடவையா சொல்றபோதே இவ்வளவு நல்லா சொல்றியே! அடுத்த தடவை இன்னும் ஜோரா சொல்லணும் என்று உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார் கவிஞர்.

ஒரு குழந்தை திக்கித் திக்கிப் பாடியது. கூடியிருந்த குழந்தைகள் எல்லாம் சிரித்து விட்டன. பாடிய குழந்தை பாதிக்கப்பட்டு, பாட்டைப் பாதியிலேயே நிறுத்தி விட்டது. கவிமணியின் 'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு' பாடல் அது. கவிஞர் இரண்டொரு முறை அடி எடுத்துக் கொடுத்தும் அக் குழந்தை பற்றிக் கொள்ளவில்லை! இது மற்றக் குழந்தைகளுக்கு மேலும் சிரிப்பை வரவழைக்க, பாட வந்த குழந்தை மேலும் பாதிப்புக்கு இலக்கானது.

கவிஞர் மனதை இது உறுத்தியிருக்க வேண்டும். உள்ளே சென்று எதையோ எடுத்து வந்தார். நிகழ்ச்சி முடிந்ததும், ஏதாவது ஒரு தின்பண்டம் பிஸ்கட், மிட்டாய் கொடுப்பது வழக்கம். எல்லோரும் பாடி முடித்ததும், தான் எடுத்து வந்ததை எல்லாக் குழந்தைகளுக்கும் விநியோகித்தார் கவிஞர். "நான் தருவதை அப்படியே வைத்துக் கொள்ளுங்கள். நான் கூறிய பிறகு சாப்பிடலாம்" என்று கேட்டுக்கொண்டார். தனது கேள்விகளைத் தொடங்கினார்.

'உங்கள் கையில் என்ன இருக்கிறது?'

'கற்கண்டு.'

'அது எப்படி இருக்கிறது?'

'சிலது ஒழுங்காகவும், சிலது கோணல் மாணலாகவும் இருக்கிறது.'

'ஒழுங்காக இருப்பதற்கு அச்சுக் கற்கண்டு என்று பெயர். மற்றொன்று சாதா கற்கண்டு. இப்போ அச்சுக் கற்கண்டை வாயில் போட்டுக்குங்க. எப்படி இருக்கு?'

'தித்திப்பா இருக்கு.'

'சாதா கற்கண்டைத் தின்று பார்த்துச் சொல்லுங்க.'

'எப்படி இருக்கு?'

'அதுவும் இனிப்பா தித்திக்குது!'

'ஏன்...?'

'ரெண்டுமே கற்கண்டுதானே?'

'கோணல் மாணலா இருந்த கற்கண்டும் தித்திக்கிற மாதிரித்தான், தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு பாடலும், திக்கித் திக்கி பாடினாலும் இனிக்கக் கூடியது. இல்லையா? பின்னே ஏன் எல்லோரும் சிரிச்சீங்க?'

குழந்தைகளைக் கவிஞர் பெட்ரோலும் தீப்பொறியும் போல் தயார் செய்து வைத்திருந்தார். ஒரு நொடியில் குழந்தைகள் தங்கள் தவறை உணர்ந்து விட்டார்கள். அதை அவர்கள் உணரும்படி செய்து, புண்பட்ட அந்தப் பிஞ்சு உள்ளத்துக்கு மருந்து போட்டு, உற்சாகம் கொள்ளவும் வைத்தார் கவிஞர்.

குழந்தைகளின் உணர்வுகளைக் குழந்தை உள்ளம் கொண்டவர்களால் மட்டுமே உணர முடியும். அந்த வகையில் வள்ளியப்பாவுக்கு நிகர் வள்ளியப்பாதான்!

விந்தை மிக்க ராடார்

சேரநம்பி

டில்லி விமான நிலையம். பனி மூட்டத்தின் கனம் அளவு மீறி உள்ளது. விமானம் இறங்கினால் ஆபத்து என்ற எச்சரிக்கை கிடைக்கிறது. விமானம் திருப்பியனுப்பப்படுகிறது. இந்த எச்சரிக்கை, 'ராடார்' கொடுத்த தகவல்களின் அடிப்படையிலேயே கொடுக்கப்படுகிறது.

அட்லாண்டிக் கடலில் கப்பல் ஒன்று சென்று கொண்டிருக்கிறது. நீருக்குள் பிரும்மாண்டமான பனிப்பாறை ஒன்று மிக வேகமாக நகர்ந்து வருவதாகவும், கப்பல் தன் திசையை மாற்றிக் கொண்டு விலகிச் செல்ல வேண்டும் என்றும் எச்சரிக்கை கிடைக்கிறது. இந்த எச்சரிக்கை 'ராடார்' கொடுத்த தகவல்களின் அடிப்படையில்தான்.

எதிரி நாட்டைச் சேர்ந்த விமானம் ஒன்று வேவு பார்ப்பதற்காக வந்து கொண்டிருக்கிறது. அது எவ்வளவு வேகத்தில் வருகிறது என்ற தகவல்களெல்லாம் கம்ப்யூட்டரில் பதிவாகின்றன. இத் தகவல்களையெல்லாம் அறிந்து தொகுத்துக் கூறுவது 'ராடார்'.


இவ்வளவு ஆற்றல் பொருந்திய 'ராடார்' எப்படி இயங்குகிறது? இதை யார் கண்டுபிடித்தார்கள்?


'ராடார்' உருவாவதற்கு அடிப்படையாக இருந்தது வெளவால்கள்தான் என்பது அதிசயமான உண்மை.

இத்தாலிய அறிஞர் லாசா ரோஸ் பவான் ஜானி என்பவரும், சுவிட்சர் நாட்டு அறிஞர் சார்லஸ் ஜுரைனும் வெளவால்களின் அதிசயிக்கத்தக்க வாழ்க்கை முறைகளால் ஈர்க்கப்பட்டு, ஒன்றாகவே தங்கள் ஆராய்ச்சியைத் தொடர்ந்தனர்.

எவ்வளவு தடைகள் குறுக்கிட்ட போதிலும், சிறிதும் முட்டி மோதிக் கொள்ளாது வெளவால்கள் பறந்து சென்று இரை பிடித்த விதம் அவர்களுக்குப் பேரதிசயமாக இருந்தது. அவற்றின் கண்களைக் கட்டிப் பறக்க விட்டனர். சரியாகப் பறந்தன! காதுகளை மூடிப் பறக்க விட்டுப் பார்த்தனர். முட்டி மோதிக் கொண்டு சிரமப்பட்டன! எனவே, காதுகளையே கண்களாகப் பயன்படுத்தி அவை பறக்கின்றன என்பதை அவர்கள் உறுதிப்படுத்திக் கொண்டனர். இது எதிரொலியின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதையும் பிறகு நடந்த ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்தின.

நாம் எழுப்பும் குரல் எதிலாவது பட்டுத் தடைப்பட்டு மோதித் திரும்பு





வதையே எதிரொலி என்கிறோம். இத்தகைய எதிரொலியின் துணை கொண்டே வெளவால்கள் எதிலும் முட்டி மோதிக் கொள்ளாது; பறக்கின்றன. எதிரொலி கேட்பதற்காக வெளவால்கள் எழுப்பும் குரல் ஓசை மனிதக் காதுகளைக் கொண்டு கேட்க முடியாத அளவுக்கு மிக மிக மெல்லியதாகும். பிரான்ஸ் நாட்டு அறிஞர் 'பல்லாங்கேவின்' வெளவால்கள் எழுப்பும் ஒலிகளைக் கேட்கக்கூடிய ஒரு அதிசயக் கருவியைக் கண்டுபிடித்தார். இதற்குப் பிறகு இந்த ஆராய்ச்சியில் மிக விரைவான முன்னேற்றம் ஏற்பட்டது.

எல்லா ஒலிகளுமே (ஓசைகள்) ஏதோ ஒரு அதிர்வின் காரணமாகவே எழுகின்றன. நாம் பேசுவது (குரல் வளை அதிர்வு), இசைக் கருவிகளை இசைப்பது, விலங்குகள் கத்துவது எல்லாமே அதிர்வின் விளைவுகளே. மனிதக் காதுகளால் வினாடிக்கு 20 முதல் 20,000 அதிர்வுகளைக் கொண்டு எழுப்பும் ஓசைகளையே கேட்க முடியும். 20க்குக் குறைவாகவோ, 20,000க்கு மேலோ உள்ள அதிர்வுகளால் எழும் ஓசைகளை நம்மால் கேட்க முடியாது.

வெளவால்கள் ஒரு வினாடிக்கு, 1,30,000 அதிர்வுடைய ஒலியைத் தங்கள் வாயால் எழுப்புகின்றன. எழுப்பியதும் சில வினாடிகள் வரை அவை, அதன் விளைவுகளுக்காகக் காத்திருக்கின்றன. சில வினாடிகள் வரை அடுத்த ஒலியை அவை எழுப்புவதில்லை. இதைக் கொண்டு தங்கள் இரை எவ்வளவு தூரத்தில் உள்ளன என்பதை இவை அறிந்து கொண்டு பறக்கின்றன; இறையைப் பிடித்து விடுகின்றன.

பந்து ஒன்றை சுவரை நோக்கி அடித்தால், சுவரில் பட்டுத் திரும்பி வர ஆறு வினாடிகள் ஆகின்றன என்று வைத்துக் கொள்வோம். போக மூன்று வினாடிகள், திரும்பி வர மூன்று வினாடிகள். எனவே, அந்தச் சுவர் மூன்று வினாடி ஒலி தூரத்தில் உள்ளது என்று அறிந்து கொள்ளலாம். ராடார் இந்த அடிப்படையிலேயே இயங்கி எதிரிகளின் விமானம், அல்லது ஆபத்தானதொரு பொருள் எவ்வளவு தொலைவில் உள்ளது என்பதைக் கண்டுபிடித்து விடுகிறது.

வானில் 50 கி.மீ. உயரத்திலிருந்து 400 கி.மீ. உயரம் வரை உள்ள பகுதி எதிரொலிக்கும் தன்மை கொண்டது.

ஒலி அலைகள் வினாடிக்கு 330 மீட்டர் வேகத்தில் செல்லக்கூடியவை. இந்த வேகம் வெளவாலுக்குப் போதுமானது. ஆனால் ரேடியோ அலைகள் (மின்காந்த அலைகள்) வினாடிக்கு 3,00,000 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக்கூடியவை. நேர அளவில், ஒரு வினாடியில் பத்து லட்சத்தில் ஒரு பங்கு என்பது (1/1,00,000) ஒரு மைக்ரோ வினாடி என்று குறிப்பிடப்படுகிறது. ரேடியோ அலையின் வேகம், ஒரு மைக்ரோ வினாடிக்கு 300 மீட்டர். ராடார் அமைப்பில் பயன்படுத்தப்படுவது ரேடியோ (மின்காந்த) அலைகளே.

ராடார் கருவியில், உயரமான கோபுரம் ஒன்றின் உச்சியில் பிரதிபலிக்கும் ஒரு உட்கருவி அமைப்பு


இருக்கும். இதன் மையத்தில் ஏரியல் தண்டு இருக்கும். இது டிரான்ஸ் மீட்டர் (அலை பரப்பி) அலை வாங்கி (ரிசீவர்)யுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

ராடாரை இயக்க மின்காந்த அலைகள் என்னும் ரேடியோ அலைகளை வானில் செலுத்துவார்கள். அனுப்பப்பட்ட ரேடியோ அலைகள் ஏதாவது ஒரு பொருளில் (தடை) மோதினால் அவை அனுப்பப்பட்ட இடத்திற்கே திரும்ப வரும். அப்பொழுது ராடார் திரையில் பிரகாசமான ஒளிப் புள்ளிகள் மின்னிப் பளிச்சிடும். இந்த நேரத்தைக் கணக்கிட்டு, மோதப்பட்ட பொருள் எவ்வளவு மைக்ரோ வினாடி நேர தொலைவில் உள்ளது என்பதைக் கணக்கிடுகிறார்கள். இப் பணிக்காக, ராடாரிலேயே ஒரு கம்ப்யூட்டர் பொருத்தப்பட்டிருக்கும்.

இன்று அதிக அளவில் பாதுகாப்புத் துறையிலும், விண்வெளி ஆராய்ச்சியிலும் ராடார் பயன்படுத்தப்படுகிறது என்றாலும் இதில் சில மாற்றங்களைப் புகுத்தி, மருத்துவத் துறையிலும், போக்குவரத்துத் துறையிலும், இயந்திரங்களின் உட்புறப் பகுதிகளைச் சோதிக்கவும், ஏன் குருடர்களுக்கு வழிகாட்டவும் கூட ரேடார் தத்துவத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கருவிகள்' வந்து விட்டன.

நம் நாட்டில் 'ராடார்' அறிமுகமாகிப் பல ஆண்டுகளாகின்றன. திருப்பதியில் கூட ஏழு கோடி ரூபாய் செலவில் சக்திமிக்க ராடார் ஒன்றை இந்திய விண்வெளித் துறை அமைத்துள்ளது. இதன் ஆன்டெனாவின் அளவு ஏழு கி.மீ. விண்வெளி ஏவுகணைத் தளங்களாகிய ஸ்ரீ ஹரி கோட்டா, தும்பா ஆகியவற்றிற்கு இடையே பூமத்திய ரேகையில் பொருத்தமான இடத்தில் திருப்பதி அமைந்துள்ளதால், இந்த ராடாரை அமைக்க அதுவே தேர்ந்தெடுக்கப்பட்டது.

எதிரி விமானங்களின் வருகையைக் கண்டறியவே முதன் முதலில் ராடார்கள் அமைக்கப்பட்டன. நாளடைவில் அதன் பணிகள் பல்வகைப்பட்டதாக மாறின. இப்பொழுது 'ராடாரின்' கண்களிலிருந்தும் தப்பிவிடக்கூடிய திறமைசாலியான பல விமானங்களைத் தயாரிப்பதில் அமெரிக்காவும் ரஷ்யாவும் முயன்று வெற்றி பெற்றுள்ளன! இதன் விளைவு எப்படி இருக்குமோ?



ஸ்லீமேன் துருக்கிப் பிரபுவுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்.

''இதோ, இதுதான் டிராய் நகரின் பிரும்மாண்டமான கதவுகள். இதன் வழியாகத்தான் டிராய் வீரர்கள் கிரேக்கர்கள் வைத்து விட்டுப்போன மரக் குதிரையை இழுத்து வந்திருக்கிறார்கள். இதுதான் பேரழகி ஹெலனின் மாளிகை. இது அரச சபை. இது போட்டிகள் நடைபெறும் மைதானம்!''

துருக்கி பிரபு அசந்து போய் நின்றார்.

''சின்னஞ் சிறுவனாக இருந்த போதே மகாகவி ஹோமரின் இலியத் காவியத்தை என் தந்தையார் கதையாக எனக்குக் கூறியிருந்தார். என் மனத்தில் அந்த வீரகாவியம் அப்படியே பதிந்தது. பிறகு எவ்வளவோ நூறு முறை இலியத்தையே நான் படித்துப் படித்து இரசித்தேன். டிராய் நகரத்துப் பேரழகி ஹெலனுக்காக கிரேக்கர்கள் நடத்திய யுத்தம், வீரத்தால் வெல்ல முடியாத டிராய் நகரை வீழ்த்த கிரேக்கர்கள் மரக் குதிரை மூலம் உள்ளே புகுந்து அதைத் தீக்கிரையாக்கித் தரைமட்டமாக்கியது போன்றவற்றை வெறும் கற்பனையாக என்னால் எண்ண முடியவில்லை. டிராய் நகர் கண்டிப்பாக இருந்திருக்க வேண்டும் என்று கருதினேன். பெரியவனானதும் போதிய செல்வத்தைச் சேர்த்துக் கொண்டு டிராய் புதையுண்டிருப்பதாகக் கருதப்படும் மண்மேட்டைத் தோண்டிப் பார்க்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டேன். இதையே எனது வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டேன்,'' என்றார் ஸ்லீமேன்.

''பல ஆண்டுகள் கடுமையாக உழைத்துப் பணம் சேர்த்துக் கொண்டு ஒரு பகுதியை இப் பணிக்காகச் செலவிட முற்பட்ட போது, கடும் எதிர்ப்பு எழுந்தது. இது பைத்தியக்காரத்தனம். எங்களுக்கு உரிய பங்கைக் கொடுத்து விட்டு என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள் என்று மனைவியும் பிள்ளைகளும் தொல்லைப்படுத்தினர். அப்படியே செய்து அவர்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்று முறித்துக் கொண்டு வந்து விட்டேன்,'' என்றார் ஸ்லீமேன்.

''அடப் பாவமே! என்று தன் இரக்கத்தை வெளியிட்டார் துருக்கிப் பிரபு.

''அதோ, பதினெட்டாவது அடுக்கில், கீழே தோண்டிக் கொண்டிருக்கிறார்களே... அவர்களுக்கு அருகே ஓலைத் தொப்பியும் மடிப்பு விசிறியுமாக ஒரு பெண்மணி காணப்படுகிறாளே... அவள்தான் என் இரண்டாவது மனைவி சோபி'' என்று சுட்டிக்காட்டினார் ஸ்லீமேன்.

''என் இலட்சியம் நிறைவேற சோபி எனக்குத் துணையாக இருக்கிறாள்'' என்று மனைவியைப் புகழ்ந்து கொண்டார் ஸ்லீமேன்.

ஆமாம், அழிந்து போன டிராய் நகர் இந்த புனர்பாஹி குக் கிராமத்தின் ஹிசார்லிக் குன்றில் இருப்பதை எப்படி இவ்வளவு உறுதியாக அறிந்தீர்கள்?'' என்று வியப்போடு கேட்டார் பிரபு.

''கவிஞர்கள் டிராய் நகருக்கு இட்ட செல்லப் பெயர் இல்லியம். இன்னமும் இக் குன்று இல்லியம் என்றே மக்களால் அழைக்கப்படுகிறது. அதோடு மகா அலெக்சாந்தர் போன்ற பல புகழ்பெற்ற மன்னர்கள்,





தூர நாடுகளிலிருந்து வந்து டிராய் இருந்த இடம் இதுவே என்று வழிபாடு செய்து விட்டுப்போயிருக்கிறார்கள்,'' என்றார் ஸ்லீமேன்.

''எவ்வளவு ஆண்டுகளாகத் தோண்டும் பணி நடக்கிறது?''


''மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக. ஒன்றின் பின் ஒன்றாக, டிராய் உட்பட ஏழு நகரங்கள் புதையுண்டு கிடந்ததை வெளிப்படுத்தியிருக்கிறேன். அறுபது லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகியுள்ளது. ஹோமரின் காவியம் வரலாற்று நிகழ்ச்சியே என்பதை உலகுக்குக் காட்டி விட்டேன். அது போதும் எனக்கு!''

''இனி என்ன செய்யப் போகிறீர்கள்?''

''நாளையோடு இப் பணிகளுக்கு முற்றுப் புள்ளி. சொத்தில் மிஞ்சி இருக்கும் ஒன்றிரண்டையாவது சோபியாவுக்கு விட்டு விட்டுப் போக முடிவு.''

பிரபுவை அனுப்பி விட்டு ஸ்லீமேன் திரும்பினார். பகுதி பகுதிகளாக அகழ்தெடுக்கப்பட்டுக் கிடந்த புராதன டிராய் நகரின் மாளிகைப் பகுதிகளை அவர் அடங்காத ஆவலோடு பார்த்தார். தூரத்தில் பதினெட்டாவது பகுதியில் பணிகள் நடந்து கொண்டிருந்தன. அங்கே தான் சோபி கவனித்துக் கொண்டிருந்தாள். இந்தப் பணிகள் யாவும் நாளையுடன் நிறுத்தப்படப் போகின்றன என்ற எண்ணம் அவருக்கு ஒருவித துக்கத்தைக் கொடுத்தது.

பொன் கொழித்த நகரமாக ஹோமர் வர்ணித்த டிராய் நகரில், அவருக்கு ஒரு துளி பொன் கூடப் புதையலாகக் கிடைக்கவில்லை! ஒரே ஓர் புதையல் கிடைத்திருந்தால் கூடப் போதும், ஒப்பந்தப்படி பாதியை மன்னருக்குத் தந்து விட்டு, மீதியைக் கொண்டு தோண்டும் பணிகளைத்



மோதிரங்கள்!

ஹாரிஸ்

கோபி

தொடரலாம்.

'சரசர'வென்று ஏதோ மண் சரியும் சத்தம் கேட்டது. மூன்றாவது பகுதியில் குறுக்கே நின்றிருந்த மண் சுவரில் மண் பெயர்ந்து விழுந்தது. மண் விழுந்த இடத்தில் ஒரு பெட்டி வடிவப் பொருள்! அதற்குள் ஏதோ பெரும் புதையல் இருக்க வேண்டும் என்று' ஸ்லீமேனின் உள்ளுணர்வு கூறியது!

தூரத்தில் பதினெட்டாவது பகுதியில்தான் பணிகள் நடந்து கொண்டிருந்தன. சோபி அங்கேதான் இருந்தாள். ருஸ்தும் கூட அங்குதான் கண்காணித்துக் கொண்டிருந்தார். ஏதாவது தந்திரம் செய்து அவர்களை அப்படியே அனுப்பி விட்டால், மனைவியின் உதவியோடு ஒருவருக்கும் தெரியாது அந்தப் புதையல் பொருளைத் திறந்து பார்க்கலாம். முடியுமா?

"சோபி" என்று வாயில் கை குவித்துக் குரல் கொடுத்தார் ஸ்லீமேன். அவர் அழைத்தது எதிரொலித்தது. மனைவி திரும்பிப் பார்த்து. மெதுவாக நடந்து அருகே வந்தாள்.

"என்னமாவது சொல்லி எல்லோரையும் உடனே அனுப்பி விட வேண்டும். எல்லோரும் அப்படியே போய் விட வேண்டும்."

சோபி வியப்போடு கணவனை நோக்கினாள்.

"குறுக்குக் கேள்விக்கே இடமில்லை. எனக்குப் பிறந்த நாள் இன்று என்பது மறந்தே போச்சு என்று சொல்லி எல்லோருக்கும் சம்பளத்துடன் விடுமுறை அறிவித்து விட்டுத் திரும்பி வா."

கணவனைப் புரிந்து கொண்ட புத்திசாலி மனைவி, மின்னலாகச் செயல்பட்டாள். "எல்லோரும் ருஸ்தும் உட்படப் போய் விட்டார்கள்." என்று திரும்பி வந்தாள்.

ஸ்லீமேன் மனைவியோடு கீழே இறங்கி வந்தார். அந்த இடிந்த சுவர் உயர்ந்து கம்பீரமாக நின்றது. ஸ்லீமேன் மெதுவாக மண்ணைத் தள்ளிவிட்டார். மேலிருந்து 'பொற பொற' வென்று மண் உதிர்ந்தது!

"சுவர் விழுந்தால், அடியில் சிக்கிச் சாவது நிச்சயம்" என்று சிரித்தாள் சோபி.

ஸ்லீமேன், விரல்களால் மெதுவாக, தடவித் தடவி மண்ணை அகற்றினார். அது எவ்வளவோ நூற்றாண்டுகளாக மண்ணரித்துப் போன மரப் பெட்டிதான். மண்ணைத் தள்ளி விட்டு, படபடக்கும் உள்ளத்தோடு ஸ்லீமேன் இழுத்து, சோபியின் சால்வையில் மூடிக் கொடுத்தார். வீட்டுக்கு வந்ததும் கதவுகளை அடைத்து விட்டுப் பிரித்தனர். நான்கு கிரீடங்கள், பத்தாயிரம் மோதிரங்கள், ஆயிரக்கணக்கான சங்கிலிகள், காதணிகள் தெய்வச் சிற்பங்கள்! எல்லாம் சொக்கப் பொன்னால் ஆனவை!

"பொன் நகர்' என்று ஹோமர் விவரித்துள்ளது மிகைப்படுத்தப்பட்ட பொய்யாக இருக்குமோ என்று சந்தேகப்பட்டேன். பொய்யில்லை என்பதை இவை நிரூபித்து விட்டன. கிரேக்கர்கள் டிராய் நகரைச் சூறையாடிய போது மக்கள் தங்கள் பொன் நகைகளைப் பெட்டிகளில் போட்டுப் புதைத்திருக்க வேண்டும். அத்தகைய பெட்டிகளில் ஒன்றுதான் இது. அதனால்தான் எங்குமே நமக்கு ஒரு துளி பொன் கூடக் கிடைக்கவில்லை!" என்று மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார் ஸ்லீமேன்.


"இது ஹெலனின் மாளிகையில் கிடைத்திருப்பதால் இவை எல்லாமே பேரழகி ஹெலன் அணிந்ததாக இருக்க வேண்டும். இவற்றின் தோற்றம் கூட ஹோமரது வர்ணனைக்கு ஏற்பவே இருக்கிறது!" என்று துள்ளிக் குதித்த ஸ்லீமேன், அவைகளை ஒவ்வொன்றாகத் தன் அருமை மனைவி சோபிக்கு அணிவித்து அழகு பார்த்தார்!

நிறுத்த முடிவு செய்திருந்த தோண்டும் பணி மீண்டும் தொடரப்பட்டது! ஸ்லீமேன் கண்டுபிடித்தது டிராய் நகரை மட்டுமல்ல. ஒன்றின் மேல் ஒன்றாக அமைக்கப்பட்டு, மண் மூடிப் போன ஏழு கிரேக்க நகரங்களை! அவரது முயற்சியின் பயனாக கிரேக்க வரலாற்றில் ஒரு புதிய கதவு திறக்கப்பட்டது. ஹோமரின் காவியங்கள் வரலாற்று நிகழ்ச்சிகளே என்பது ஏற்கப்பட்டது!

• **வெ. ஜெகதீசன்,**
தொம்பக்குளம்.

நகச்சுற்று நோய் எதனால் வருகிறது? அதைப் போக்க வழி சொல்லுங்கள் டாக்டர்!


நகத்தைச் சுற்றியும் அதன் அடிப்பாகத்திலும் பாக்டீரியா கிருமிகளோ அல்லது ஃபங்கஸ் எனப்படும் காளான் கிருமிகளோ தாக்குவதை 'நகச்சுற்று' என்கிறோம். இதை ஆங்கிலத்தில் 'பாரோனிகியா' (**Paronychia**) என்பார்கள். பொதுவாக நகத்தைக் கடிக்கும் போதும், நகத்தைக் கவனிப்பின்றி வெட்டும் போதும், நகத்தோடு தோலும் கிழிபடும்போதும் மேற்சொன்ன கிருமிகள் நகத்தினுள் நுழைந்து சீழ் வைக்கிறது. இதனால், நகத்தில் வலி உண்டாகிறது. சில சமயம் காய்ச்சலும் வருகிறது. கவனிக்கத் தவறினால் வலியும் சீழும் அதிகமாகி நகம் வீங்கும். இச்சமயத்தில் மருத்துவர் உதவியுடன் விரலைக் கீறி சீழை வெளியேற்றினால் தான் வலியும் காய்ச்சலும் விடும். இல்லையேல், அது தானாக உடைந்து சீழ் வெளியேறும். இதற்கு மேலும் சில தினங்கள் ஆகலாம். அச் சமயத்தில் சீழ் நகத்தின் அடியிலிருக்கும் எலும்பையும் பாதித்து விடும். எனவே, நகச்சுற்று தானாக உடையும் வரை



காத்திராமல், காலா காலத்தில் மருத்துவரிடம் காண்பித்து சீழை வெளியேற்றி விடுவது நலலது. மருத்துவர் சீழில் இருக்கும் கிருமிகளைக் கட்டுப்படுத்த 'ஆண்ட்டிபியாட்டிக்' எனப்படும் கிருமிக் கொல்லி மருந்துகளையும், வலி நிவாரணி மாத்திரைகளையும் கொடுப்பார். இதனால், வேதனை குறையும். நகச்சுற்று நோய்க்கு விரலில் எலுமிச்சம் பழம் சொருகி ஒத்தடம் கொடுக்கும் பழக்கம் அநேகம் பேரிடம் இருக்கிறது. இதனால் அதிக பலன் கிடைப்பதில்லை. மாறாக, இதற்குச் செய்யும் செலவில் மருத்துவர் மூலம் சுத்தமான முறையில் விரலுக்குக் கட்டுப் போட்டால் நகச்சுற்று நோய் விரைவில் குணமாகும். செய்வாயா, ஜெகதீஷ்?

• **வெ. இரமேஷ்,**
சத்துவாச்சாரி.

நம் கண்களில் கண்



டாக்டர் கு. கணேசன்


ணீர் வருகிறதே... அது எங்கிருந்து வருகிறது? எதற்காக வருகிறது?

நம் கண்ணில் மேல் விழியிமையின் உட் பக்கத்தில் கண்ணீர்ச் சுரப்பிகள் **(Lacrimal Glands)** உள்ளன. இவை ஒருவித உவர்ப்பு நீரைச் சுரக்கின்றன. இது தான் கண்ணீர்! இது இமை விளிம்பின் வழியாக வெளிப்பட்டு, கண்ணிற்கும் மூக்கிற்கும் இடையிலிருக்கும் நீர்ப் பையில் தங்கி, பின்பு நாசி வழியாக வெளியேறுகிறது. இயல்பாக சுரக்கும் போது, இப்படி வெளியேறும் கண்ணீரின் அளவு மிக மிகக் குறைவாக இருப்பதால் அது நமக்குத் தெரிவதில்லை. ஆனால், அழும் போதும், கண்ணில் தூசு விழும் போதும் கண்ணீர் அதிகமாகச் சுரக்கிறது. அப்போது நாசி நாளம் வழியாக கண்ணீர் எல்லாவற்றையும் வெளியேற்ற முடிவதில்லை. எனவே, கண் இமைகளுக்கும் விழிக்குமிடையே கண்ணீர் திரண்டு துளித் துளியாகக் கன்னங்களில் விழுகிறது! அதே சமயம் மூக்கிலும் வடிகிறது! இதைக் கண்ணீர் வடித்தல் என்கிறோம். சரி, ரமேஷ்! கண்ணீரினால் நமக்கு என்ன பலன்? தெரிய வேண்டாமோ உனக்கு? சொல்கிறேன், கேள். நம் கண்ணின் வெளிப் பாகங்களை ஈரமாக வைத்துக் கொள்ளக் கண்ணீர் பயன்படுகிறது. கண்ணில் விழுந்திருக்கக் கூடிய — கண்ணுக்குப் புலப்படாத — தூசுகளை அகற்றி சுத்தமாக்குகிறது. சக்கரங்கள் சுழல்வதற்கு மசை பயன்படுகிற மாதிரி நம் கண் விழி நான்கு பக்கங்களும் சுழன்று பார்ப்பதற்குக் கண்ணீர் பயன்படுகிறது. கண்ணீர் மட்டும் நமக்குச் சுரக்கவில்லை என்று வைத்துக் கொள். கண்ணின் நிறமிலி இழைமம் (கார்னியா) உலர்ந்து கிழிந்து புண்ணாகி விடலாம்! அதனால், பார்வை பறி போகலாம்! இப்பொழுது சொல். கண்களைப் போலவே கண்ணீரும் நமக்கு முக்கியம் அல்லவா?

- **ரு. சம்பந்தம், பழையனூர்.**

பஸ் அல்லது காரில் பயணம் செய்யும் போது வாந்தி வருவது ஏன்? அப்போது எலுமிச்சைப் பழத்தைச் சாறு பிழிந்து வாயில் விட்டுக் கொள்ளச் சொல்கிறார்களே, ஏன்?

பஸ், கார் மட்டுமில்லாமல் கப்பல், ஆகாய விமானம் ஆகியவற்றில் பயணம் செய்தால் கூட வாந்தி வருவது உண்டு. இதைப் பயண வாந்தி **(Motion Sickness)** என்றழைப்பார்கள். இதற்கான காரணத்தை அறிந்து கொள்கிறாயா சம்பந்தம்? சாதாரண நேரங்களில் நம் உடலை சமநிலைப்படுத்திக் கொண்டிருப்பது காதில் உள்ள வெஸ்டிபுலர் அமைப்பு! நாம் பயணம் செய்யும் போது அவ்வாகனத்தின் வேகத்திற்கும் அசைவுகளுக்கும் ஏற்ற வகையில் நம் உடலும் நீளவாட்டத்திலோ, குறுக்கு வாட்டத்திலோ அல்லது செங்குத்தாகவோ அசைய நேரிடுகிறது. இச்சமயங்களில் சிலரின் காதுகளில் உள்ள வெஸ்டிபுலர் அமைப்பு உடலை சமநிலைவப்படுத்த சங்கடப்படுகிறது. இதனால் மூளையில் உள்ள வாந்தி நரம்புகள் தூண்டப்படுகின்றன. உடனே நமக்கு வாந்தி வருகிறது. இப்பயண வாந்தி வரும் போது எலுமிச்சம்பழச் சாறு தருவது வழக்கம். அதில் உள்ள சிட்ரிக் அமிலம் சிறிது நேரம் குமட்டலைக் குறைத்து, வாந்தியை நிறுத்தக்கூடியது. எனவேதான், அப்பழச்சாற்றைத் தருகிறார்கள். ஆனால், அதுவே பயண வாந்திக்கு முழுமையான நிவாரணத்தைக் கொடுப்பதில்லை. பதிலாக அவவோமின் என்ற மாத்திரையை, பயணப்படுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு சாப்பிட்டுக் கொண்டால் பயண வாந்தி வராது



என நம்பலாம்!

* **பி. எஸ். மணிமாறன், பரங்கிப்பேட்டை.**

வாய்ப்புண் வருவது ஏன்? அதைத் தவிர்க்கச் சுலபமான வழி ஒன்று கூறுங்கள், டாக்டர்!

தம்பி மணிமாறா! வாய்ப் புண் வருவதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம். சாதாரணமாக நம் உடம்பில் வைட்டமின்—பி சத்துக் குறையும் போது வாய்ப்புண் வருகிறது. சொத்தைப் பல் இருந்தாலும் வாய்ப் புண் வரலாம். பயோரியா எனும் வியாதியில் வாய்ப்புண் வரும். ஃபங்கஸ் எனும் காளானால் வாய்ப்புண் வரும்.



சில மருந்துகளை, இரசாயனப் பொருட்களை உட்கொள்ளும்போதும் வாய்ப் புண் வரலாம். மலச்சிக்கலினாலும், ஜீரணக் கோளாறுகளினாலும் வாய்ப்புண் வரலாம். இப்படிப் பல் வேறு காரணங்கள் இருந்தாலும் உன்னை மாதிரி சிறுவர் சிறுமிகளுக்கு வாய்ப்புண் வருவதற்கு வாய் சுத்தமின்மைதான் காரணம்! எனவே, வாயை நன்கு கழுவி சுத்தமாக வைத்திருந்தாலே வாய்ப் புண் (Stomatitis) வராது என நம்பலாம். இது தவிர சொத்தைப் பல்லை நீக்கி விட வேண்டும். பயோரியா நோய்க்கு முறையாக மருத்துவம் பார்க்க வேண்டும். வைட்டமின் பி காம்ப்ளெக்ஸ் நிறைந்த உணவுகளை உட்கொள்ள வேண்டும். உதாரணமாக பால், முட்டை, இறைச்சி, அரைக்கீரை, அகத்திக் கீரை, முருங்கைக் கீரை, பீட்ரூட், காரட், காலிபிளவர், அவரைக்காய், வெண்டைக்காய், பீர்க்கங்காய் போன்றவற்றை அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். வாய்ப்புண் இருக்கும் பட்சத்தில் வைட்டமின் மாத்திரைகளை மருத்துவரின் பரிந்துரையின் பேரில் சாப்பிடலாம். வலி கொடுக்கும் வாய்ப்புண்ணாக இருந்தால், ஜெலோரா, டெக்கார்டின் போன்ற மருந்துகளை மேல்பூச்சாகப் பூசலாம்! தினமும் இரவில் இரண்டு வாழைப் பழங்களைச் சாப்பிட்டு மலச்சிக்கல் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இத்தனை வழிமுறைகளையும் நீ கடைப்பிடித்தாயானால் உனக்கு வாய்ப்புண் என்பதே வராது மணிமாறன்! சரியா?

* **பி. உமா, ஈரோடு.**

சிலருக்குத் தூக்கத்தில் நடக்கும் வியாதி உள்ளதே... அதற்கு என்ன காரணம், டாக்டர்?

தூக்கத்தில் நடக்கும் வியாதிக்கு 'துயில் நடை' என்று தமிழில் அழகான பெயருண்டு. ஆங்கிலத்தில் 'ஸோம்னாம்புலிசம்' **(Somnambulism)** என்று வாய்க்குள் நுழையாத பெயர்! நாம் தூங்கும் போது நம் மூளையின் எல்லா பாகங்களும் தூங்குவதில்லை. அப்போது ஒருவரின் அடிமனதில் பதிந்துள்ள கசப்பான அனுபவங்களோ அல்லது எண்ணங்களோ அவரது உணர்வில் சில மாற்றங்களை ஏற்படுத்துகிறது. அப்போது அந்த எண்ணங்களுக்கு ஏற்ப அவர் அசைவு கொடுக்கிறார். கண்கள் திறந்த வண்ணம் இருக்க, வெறித்த பார்வையுடனும் முகத்தில் ஒருவித கலவரத்துடனும், புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு வேகமாகச் சில வார்த்தைகளையோ, வாக்கியங்களையோ, தனக்குத்தானே பேசிக்கொண்டோ ஏதாவது ஒரு செயலைச் செய்வார். எழுந்து நடப்பார். தண்ணீர் குடிப்பார். வேறு ஏதேனும் சிறு சிறு செயல்களைச் செய்வார். மீண்டும் வந்து படுத்துக் கொள்வார். இத்தனை நிகழ்ச்சிகளும் அவரின் தூக்கத்திலேதான் நடைபெறும். ஆனால், அவர் சுய நினைவுக்கு வரும்போது, நடந்த நிகழ்ச்சிகள் யாவுமே மறந்து விடும்! இது ஒரு வித்தியாசமான வியாதி! இல்லையா, உமா?

உங்கள் நூலகம்

உயிர்காப்பான் தோழன்

(கருமலைப் பழம் நீ — பக். 104 ரூ.10/— தவரதா பதிப்பகம், 26, வள்ளல்பாரி தெரு, எம். ஜி. ஆர். நகர், சென்னை — 78)

பதினைந்து கதைகள் கொண்ட தொகுப்பு. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு பண்பை, நல்ல நெறியை அறிவிக்கிறது. பாட்டும் கதையும் இணைந்த கதைகளும் உண்டு.

வானம் கறுக்குது பாரம்மா!
வண்ணக் குடையை விரியம்மா!
மின்னல் மின்னுது பாரம்மா!
மேளம் கொட்டுது கேளம்மா!

என்ற சந்தம் நிறைந்த பாடல் வரிகள் குழந்தைகளைத் துள்ளி ஆட வைப்பது நிச்சயம். குழந்தைகளுக்குப் பரிசளிக்க ஏற்ற நூல்.

அன்பு மனம்

(சம்பந்தம் — பக். 110 ரூ.10/— வானதி பதிப்பகம், சென்னை — 17)

பத்துக் கதைகளின் தொகுப்பு. எல்லாமே அன்றாட வாழ்வில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. 'எதற்கெடுத்தாலும் பந்தயமா?' கதை சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கிறது. ஆடு வளர்க்கும் ஏழைச் சிறுவனின் பரந்த மனத்தை மிக அழகாக விவரிக்கிறது 'அன்பு மனம்'. குழந்தைகள் சுவைத்து மகிழ்வது நிச்சயம்.

வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள்

(பூவண்ணன் முத்து — பக். 180 ரூ. 15/— வானதி பதிப்பகம், சென்னை — 17)

ஆசிரியரும் சரி, நூலும் சரி கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர்கள். கோகுலத்தில் வெளியாகிப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை மகிழ்வித்த தொடர் கதையே, கைக்கு அடக்கமான நூலாகியுள்ளது. இலட்சிய மாணவன் அரவிந்தனது விடாமுயற்சிகளும், அவற்றைத் தகர்க்கத் திட்டமிட்டுத் தோல்வியுற்று இறுதியில் திருந்தும் வேலப்பனின் குணப் படைப்பும் மறக்க முடியாதவை. பெருமை மிக்க படைப்பு. கோகுலத்தில் தொடராக வெளிவந்தது என்ற குறிப்பை அடுத்த பதிப்பில் சேர்ப்பார்கள் என்று நம்பலாம்.

பைபிள் பாத்திரங்கள்

(வாண்டு மாமா — பக். 120 — ரூ 12.90 பழனியப்பா பிரதர்ஸ், சென்னை — 14)

உலகப் புகழ்பெற்ற பைபிள் கதைகளைத் தமக்கே உரிய முறையில் எளிய நடையில் தொகுத்திருக்கிறார் ஆசிரியர். மகாபாரத உபகதைகள் போல், பைபிளில் உபகதைகள் ஏராளம். சில நெருடலான பகுதிகளைக் கூட (உம். சாலமன், எலிஜா, மோசஸ்) ஆசிரியர் மிகத் தெளிவாக வழங்கியிருப்பது அவரது திறமைக்குச் சான்றளிக்கிறது. பாராட்டத்தக்க படைப்பு.

பாடும் பாப்பா

(கடம்பை அறிவு — பக். 24 ரூ. 3/— — கவிப்புலி பதிப்பகம், புலிவலம் 610 109 திருவாரூர்)

குழந்தைகளுக்காகப் படைக்கப்பட்ட 18 பாடல்களின் தொகுப்பு. எல்லாப் பாடல்களுமே, ஏற்கெனவே குழந்தைகளுக்குப் பழக்கப்பட்ட பொருள்களில்தான். ஆனாலும், பாடலின் சந்தங்கள், எந்தக் குழந்தையையும் தாளம் போட வைக்கும்.

பூனையாரே நில்லுங்க!
பானையோரம் செல்லுங்க.

வீடு எங்கும் வளைகளாம்
கேடு செய்யும் எலிகளால்.

தூங்கமுடிய வில்லையே!
எங்கும் எலிகள் தொல்லையே!

பூனையாரே வாருங்க!
பானையோரம் பாருங்க!

—ரே

மதிப்புரைக்கு நூல்கள் அனுப்புவோர் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.
— ஆசிரியர்.



இனிய இலக்கணமே நன்றி!

* பேரளம் புகழ்மதியார் அறிவுரைத் தொடர் நிறைவு பெறுகிறது என்று தலையங்கத்தைப் படித்து அதிர்வடைந்தேன். நல்ல நல்ல கருத்துக்களை கூறி என் போன்ற மாணவச் செல்வங்களை மேலும் உற்சாகத்துடன் கல்வி கற்க வைத்த இலக்கணமே, உமக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேட்டவலம், ஆர். சுரேஷ்குமார்.

* பேரளம் புகழ்மதி அவர்களின் விருப்பத்தை இன்னும் இரண்டாண்டென்ன இந்த ஆண்டே நிறைவேற்றுகிறோம்.

செம்பை, ஆர். பரிமளா.

* அடுத்த மாத கோகுலத்திலிருந்து, ஒரு பெருங்குறை இருக்க விருக்கிறது. அதுதான் 'நில்! கவனி! புறப்படு!' இல்லாத குறை.

குத்தாலம், பி. பிரசாத்.

* சிறுவர் சிறுமியர் எப்படி வாழ்ந்தால் ஒளி மயமான எதிர்காலம் தோன்றும் என்பதை விளக்கி வழி காண்பித்த பேரளம் புகழ்மதிக்கு எங்கள் நன்றி.

திருமழபாடி, கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர்கள்.

* ''காந்திஜி பற்றி என்ன தெரியும்?'' அருமை. காந்திஜி பற்றி எவ்வளவோ படித்திருந்தாலும் அவரைப் பற்றிய முழு விவரங்களையும் இப்பகுதி மூலம் தெரிந்து கொண்டோம்.

கூத்தாநல்லூர், டி.எஸ். ரமேஜ்.

* 'முதல் வெடி வெடித்தது. மூதாட்டி சேத்னாவுக்காக. இரண்டாவது வெடி, தர்மவானான கைலாஷ்க்காக! வெடிகள் தொடர்ந்து வெடித்தன. முன்னூற்று அறுபத்து மூன்று முறை!' இவ்வாக்கியங்களை வாசித்த போது கண்கள் கலங்கின. கண்ணீர் கன்னத்தில் வழிந்தது.

ஸ்ரீமுஷ்ணம், சா. கிருஷ்ணசாமி.

* இம்மாத இதழில் இடம்பெற்ற புவனை கலைச் செழியனின் 'பணத்தைத் திருப்பித்தா' சிறுகதை நெஞ்சைத் தொட்டு வருடிய அருமையான படைப்பு. கதையைப் படித்த போது சிறுகதை என்ற உணர்வே ஏற்படவில்லை. பக்கத்து — வீட்டு மாணவர்களின் சம்பவத்தை நேரில் காண்பது போல் இருந்தது. இறுதிப் பாராவில் பாலாவின் உரையாடல்களை படித்த போது கண்கள் குளமாயின.

தக்கோலம், அ. முஸ்தபா.

* ஏழு வயதில் மூந்நூறு திருக்குறளை ஒப்புவிக்கும் சிறுவன் பற்றிப் படித்தேன். பெருமையளித்து உற்சாகமளிக்கும் கோகுலத்தைப் பாராட்டத்தான் வேண்டும்!

மொரப்பூர், ச. உமர்கான்.

* குண்டு மணி சார்! எல்லா விளையாட்டைப் பற்றியும், அவ்விளையாட்டில் சிறந்து விளங்குபவர்களைப் பற்றியும் கோகுலத்தில் வெளியிட்டு விட்டீர்கள். ஹாக்கி பற்றிய செய்திகளை ஏதுவும் வெளியிடவில்லையே!

* ''என்ன சார் இந்த இதழ் ''ஒரே'' போட்டி மயமாக இருக்கிறதே. எங்களை உற்சாகப்படுத்தும் ஒரே ''பணியை'' தவிர ''வேறொன்றுமறியேன்''... என்பது போல செயல்படும் உங்களை நினைத்து ஆனந்தப்படுகின்றோம்.

சேலம் — 2, கே. ஜனார்த்தனன்.

* நரம்புத் தளர்ச்சியால் எத்தனை கொடுமைகள்? டாக்டர் பக்கத்தை அப்படியே கத்தரித்து வைத்துக் கொண்டேன்.

''இந்த மாதம் என்ன போட்டி — கோகுலத்தில்'' என்று என் நண்பனைக் கேட்டேன். 'குறுக்கெழுத்துப் போட்டி' தான் என்றான். பக்கங்களைத் திருப்பினால்... வேறு வித்தியாசமான போட்டியை வைத்து அசத்திவிட்டீர்கள்!

கருமத்தம்பட்டி, ஆர். அருண் பிரகாஷ்.

* குயிலின் 'குக்கூ'வை மட்டும் ரசித்து வந்த எனக்கு குயில் பற்றிப் பல அறிவியல் உண்மைகளை உணர்த்தியமைக்கு என் நன்றி.

சங்கமங்கலம், க. கோகிலவாணி.

* லால் பகதூர் சாஸ்திரிக்கும், செவ்வாய் கிழமைக்கும் இப்படி ஒரு அதிசய ஒற்றுமை இருந்ததைப் படித்து வியந்தேன்.

மாடம்பிள்ளைதர்மம், ஐ.எஸ். வாசு.



என்ன செய்யலாம்?—போட்டி

பரமன் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுடைய தந்தையார் அரிசி மண்டி ஒன்றில் கணக்கெழுதி வந்தார். பரமனுக்கு ஒரு தம்பி, இரண்டு தங்கைகள், சாப்பாட்டுக்கே கஷ்டம்.

பரமன் குடும்ப நிலையை நன்கு அறிந்தவன். தான் படித்து முன்னுக்கு வந்தால்தான் தனது தம்பி தங்கைகளின் எதிர்காலத்தையாவது ஒளிமிக்கதாக ஆக்கலாம் என்ற இலட்சிய வெறியில், மிகவும் கவனமாகப் படித்தான்.

பரமனின் கடைசித் தம்பி பாலு, குடும்ப நிலை தெரியாத அளவுக்கு வளர்ந்த சிறுவன். தீபாவளிக்குப் புதுச்சட்டை வேண்டும் என்று அடம் பிடித்து அழுது அம்மாவிடமும் அப்பாவிடமும் செம்மையாக அடி வாங்கிக் கொண்டான். தம்பி அடி வாங்கி அழுத காட்சி பரமனைக் கலங்க வைத்தது. ஈரம் காய்ந்து போன மணற்பரப்பில் உட்கார்ந்து, தன்னையறியாது மணலைத் தோண்டிக் கொண்டிருந்தான். மனம் தம்பியைப்பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது.

தோண்டிக் கொண்டிருந்த பரமனின் கையில் ஏதோ ஒரு பொருள் தட்டுப்பட்டது. அவன் பரபரப்படைந்து அதை வெளியே இழுத்துப் பார்த்தான். அது பாசி பிடித்துப் போன ஒரு வெண்கல விளக்கு. அதன் மீதிருந்த பாசியைப் போக்குவதற்காகப் பரமன் விளக்கை நன்றாகத் தேய்த்தான்! அடுத்த வினாடி கண்கூசும் ஒளி தோன்றியது. அது உயர்ந்து உயர்ந்து மேக மண்டலத்தை முட்டிக் கொண்டு நின்றது. அதிலிருந்து வெளிவந்த ஒரு பூதம், தலைகுனிந்து பரமனை வணங்கியது!

'நீ யார்?' என்று பயந்து வெளிறிய முகத்தோடு கேட்டான் பரமன்.

''அலாவுதீனும் அற்புத விளக்கும் தெரியாது? அதைப்போன்ற அற்புதசக்திகொண்ட விளக்கு நான். என்னால் முடியாதது எதுவுமே இல்லை. நான் உங்களுக்கு அடிமை. விளக்கைத் தேய்த்தால் வருவேன்'' என்று பணிவாகக் கூறிக் கட்டளைக்காகக் கைகட்டி நின்றது பூதம்!

பரமனுக்குக் கிடைத்தது போன்ற அற்புத சக்தி வாய்ந்த அலாவுதீன் விளக்கு ஒன்று உங்களுக்குக் கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்பதை இருபது வரிகளுக்கு மேற்படாமல் எழுதியனுப்புங்கள். கூப்பனை அனுப்ப மறந்து விடாதீர்கள்.

என்ன செய்யலாம்?—போட்டி

கூப்பன்

பெயர் : ....

முகவரி : ....

....

....

பின் கோடு ....

முடிவு தேதி:
15.11.90

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கெ. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—

REGISTERED NO. TN MS (S) 281
Registered as a Newspaper in Srilanka

